பக்கங்கள் : முப்பது

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 09 ஞாயிற்றுக்கிழமை (22.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :56

கொழும்பில் அமெ. இணை அமைச்சர் நாளை சொல்ஹெய்மைச் சந்திக்கிறார்!

அமைதி முயற்சிகளுக்குத் திரும்புமாறு அரசு - புலிகளுக்கு அழுத்தம் கொடுப்பார்

கொழும்பு,ஜன.22

அமெரிக்காவின் அரசியல் விவகார இணையமைச்சர் நிக்கலஸ் பேர்ண் நாளை கொழும்பு வருகின்றார்.

நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் போர்நிறுத்த உடன்படிக்கையைப் பேணி இயலுமானவரையில் விரைவில் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான அழுத்தத்தை அரசுக்கும் புலிகளுக்கும் நிக்கலஸ் பேர்ண் கொழும்பில் வழங்குவார் என்று அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

நாளை கொழும்புக்கு வருகைதரவுள்ள அமைச்சர் நிக்கலஸ் பேர்ண்,நாளை வருகை தரும் நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்மையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அதேபோல அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அமைதி முயற்சிகள் குறித்து அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அரச உயர்மட்டத் தலைவர்களை சந்தித்தும் பேச்சு நடத்தவுள்ளார் என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அமைச்சர் நாளை இரவு அமெரிக்கத் தூதரகத்தில் நடத்தவிருக்கும் இராப்போசன விருந்துபசாரத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் கலந்துகொள்ள அழைக்கப்

(20ஆம் பக்கம் பார்க்க)

சுற்றிவளைப்புகள் நடக்கும் இடங்களில் கிராமஅலுவலர்கள் பிரசன்னமாக வேண்டும்!

யாழ். மேலதிக நீதிவான் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.22

இராணுவத்தினரின் தேடுதல்கள், சுற்றிவளைப்புகள் இடம்பெறும் பகுதிகளில் அப்பகுதி கிராம அலுவலர்கள் பிரசன்னமாகி இருப்பது அவசியம் என்றும், கைதுகள் மற்றும் விசாரணைகள் தொடர்பான தகவல்களை அவர்கள் சகல தரப்பினருக்கும் உடனுக்குடன் தெரியப்படுத்தவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

யாழ். நீதிமன்றத்தில் நேற்று கிராம அலுவலர்களுடன் நடத்தப்பட்ட சந்திப்பின்போது யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

யாழ். நீதிமன்றத்தில் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

சட்டபூர்வமற்ற - முறையற்ற - சுற்றிவளைப்புகள் நடைபெறும்போது அப்பகுதி கிராமசேவையாளர் அங்கு பிரசன்னமாகி அது தொடர்பான விவரங்களைப் பதிவுசெய்து சகல தரப்பிற்கும் தெரியப்படுத்தவேண்டும். அதேபோல் சட்டபூர்வமாக இடம்பெறும் சுற்றிவளைப்பின்போதும் கிராம சேவையாளர்கள் பிரசன்னமாகியிருக்கவேண்டும்.

அச்சுற்றிவளைப்பின்போது விசாரணைக்கு உள்ளாக்கப்படுபவர் சட்டபூர்வமற்ற முறையில் நடத்தப்பட்டால், அது தொடர்பாக சகல தரப்புக்களுக்கும் அறிவிக்கவேண்டும் என்று கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் உரையாற்றிய யாழ். மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் தெரிவித்ததாவது:-

சட்டபூர்வமற்ற முறையில் - முறையற்ற விதமாக - இடம்பெறும் சுற்றிவளைப்புக்கள் சோதனைகளின்போது அங்கு கிராமசேவையாளர்கள் பிரசன்னமாகியிருக்கவேண்டும். அச்சுற்றிவளைப்புக்கள் தொடர்பான தகவல்களை கிராமசேவையாளர்கள் நீதிமன்றம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, மனித

(20ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் மறுப்பு!

கிளிநொச்சி, ஜன.22

மன்னார், அடம்பன் பகுதியில் நேற்றுக் காலை கிளைமோர் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டதாக வெளியாகிய ஊடகச் செய்திகளை விடுதலைப் புலிகள் மறுத்திருக்கின்றனர்.

இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையினர் அடம்பன் பகுதிக்குள் ஊடுருவி இந்தத் தாக்குதலை நடத்தினர் என்றும் -

விடுதலைப் புலிகளின் உயர் மட்டப் பிரமுகர்கள் இந்தத் தாக்குதலில் சிக்கி உயிரிழந்தனர் என்றும் தென்னிலங்கை ஊடகங்களில் நேற்றுச் செய்திகள் வெளியாகின.

(20ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறையில் படை முகாமினுள் குண்டுகள் வெடிப்பு

யாழ்ப்பாணம், ஜன.22

பருத்தித்துறையில் பஸ்நிலையத்துக்குச் சமீபமாக அமைந்துள்ள படை முகாமினுள்ளே நேற்றிரவு 7.15 மணியளவில் பெரும் வெடி ஓசைகள் கேட்டன. இதனால் அந்தப் பகுதிகளில் பெரும் அதிர்வு ஏற்பட்டது.

பாரிய சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்தது போல ஒரு சத்தமும் தொடர்ந்து மற்றொரு வெடிச்சத்தமும் கேட்டன என்று அயலில் வசிக்கும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இந்த வெடி ஓசைகள் தொடர்பாக மேலதிக விவரங்கள் தெரியவில்லை. எனினும்

(20ஆம் பக்கம் பார்க்க)

தேநீர் கடை முன்பாகச் சூடு! ஒருவர் பலி! மற்றொருவர் காயம்!!

மீசாலை - புத்தூர் சந்தி அருகே சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன-22

மீசாலை வடக்கு, புத்தூர்ச் சந்திப் பகுதியில் வீரசிங்கம் மகாவித்தியாலயத்துக்கு அருகில் தேநீர்ச்சாலை ஒன்றின் முன்பாக வைத்து ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமாலை 6.45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நடராஜா யோகேஸ்வரராஜா (வயது 40) என்ற வர்த்தகரே கொல்லப்பட்டவராவார்.

இவர் புத்தூர்ச் சந்திப் பகுதியில் வர்த்தக நிறுவனம் ஒன்றை நடத்தி வருபவர் என்றும் கூறப்படுகிறது.

இவர் வன்னிப் பகுதிக்கான போக்குவரத்துச் சேவையை நடத்திவருபவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(20ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா செட்டிகுளத்தில் படைநிலை தாக்கப்பட்டது!

பதில் தாக்குதலில் இருவர் உயிரிழப்பு

வவுனியா,ஜன.22

வவுனியா செட்டிகுளம் பகுதியில் உள்ள இராணுவக் காவலரண் மீது நேற்றுமுற்பகல் 10.30 மணிக்குத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது படையினர் திருப்பிச் சுட்டதில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்ட இருவரின் சடலங்களும் நேற்றுப்பிற்பகல் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டன. சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை.

காயமடைந்த பொலீஸ் கான்ஸ்டபிள் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இராணுவக் காவலரண் மீது கிரனேட் வீசி, துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது என்று கூறப்படுகிறது.

(ஐ-3)

துன்னாலையில் பணிப்பாளர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், ஜன.22

வடமராட்சி துன்னாலையில் நேற்றிரவு 10 மணியளவில் தனியார் வீதி அபிவிருத்தி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வீதி அபிவிருத்தி லிமிடெட் என்னும் நிறுவனத்தின் பணிப்பாளராக பணியாற்றும் இளையதம்பி இராதாகிருஷ்ணன் (வயது 61) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

வீட்டில் இருந்தவரை வெளியே அழைத்த நபர்கள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் என்று கூறப்பட்டது.

(ஐ-3)

மட்டு. நகரில் வான் சாரதி சுட்டுக் கொலை!

மட்டக்களப்பு, ஜன.22

மட்டக்களப்பு நகரில் நேற்று மாலை 6.30 மணியளவில் வான் சாரதியான இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு நகரப் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கிஷோத்குமார் (வயது 21) என்பவரே உயிரிழந்தவராவார்.

மாமாங்கம் கோயிலுக்கு அருகில் உள்ள கடை ஒன்றுக்கு சென்ற சமயம், மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்று கூறப்பட்டது.

(ஐ-3)

பொத்துவிலில் கட்டடத் தொழிலாளி சூடுபட்டு மரணம்!

மட்டக்களப்பு,ஜன.22

அம்பாறை மாவட்டம் பொத்துவில் கோமாரி பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் கட்டடத் தொழிலாளி ஒருவர் மரணமானார்.

அந்தப் பகுதியில் அமைந்துள்ள இராணுவக் காவலரண் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பதிலுக்குப் படையினரும் வேட்டுக்களைத் தீர்த்தனர்.

படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் சிக்கி கன்டியைச் சேர்ந்த சுனில் சந்தி லால் (வயது 45) என்ற கட்டடத் தொழிலாளி உயிரிழந்தார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வீடுகளை மீள அமைக்கும் பணியில் ஈடுபட்ட கட்டடத் தொழிலாளர் குழு ஒன்றுடன் இவர் அங்கு வேலைசெய்துவந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

முல்லைக் கடலில் மீனவரை நோக்கித் தாக்குதல்!

முல்லைத்தீவு,ஜன.22

முல்லைத்தீவு கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீன்பிடிப் படகுகள் மீது கடற்படையினர் 'டோறா' படகுகளில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தையடுத்து, கடலில் விரித்த வலைகளையும் அப்படியே கைவிட்டு விட்டு மீனவர்கள் கரைசேர்ந்துள்ளனர்.

அண்மைக்காலமாக முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இலங்கைக் கடற்படைப் படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாய் படுகொலைகளை அடுத்தே பீதியால் தமிழகத்துக்குத் தப்பிவந்தோம்!

இராமேஸ்வரம் சென்ற ஈழ அகதிப் பெண் தெரிவிப்பு

இராமேஸ்வரம்,ஜன.22

மானிப்பாயில் சில தினங்களுக்கு முன்னர் இலங்கை இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்தனர். இந்தச் சம்வத்தை அடுத்தே அச்சத்தினால் சுதுமலையில் இருந்து வெளியேறி தமிழகத்துக்குத் தப்பிவந்தோம்.

- இப்படிக் கூறியுள்ளார் சுதுமலையைச் சேர்ந்த நிர்மலா (வயது 24) என்ற யுவதி.

வியாழனன்று இராமேஸ்வரம் வந்தடைந்த ஈழ அகதிகளில் இவரும் ஒருவராவார்.

யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை பகுதிகளில் இருந்து 3 குடும்பங்களைச் சேர்ந்த இலங்கைத் தமிழ் அகதிகள் 9பேர் வியாழக்கிழமை ராமேஸ்வரம் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைப் பகுதிக்கு வந்தனர்.

இலங்கையில் போர் அபாயத்தால் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் பகுதிக்கு வருவது அதிகரித்துள்ளது.

இந்நிலையில் வியாழக்கிழமை 3 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆண்கள், 3 பெண்கள், 2 ஆண் குழந்தைகள், 2 பெண் குழந்தைகள் உட்பட 9 பேர் தனுஷ்கோடி அரிச்சல் முனை கடற்கரைக்கு வந்தனர். கடந்த சில நாள்களாக மன்னார், பேசாலை,செல்வபுரம் உள்ளிட்ட மன்னார் மாவட்டப் பகுதிகளிலிருந்து மட்டுமே அகதிகள் வந்துகொண்டிருந்தனர்.

முதல்முறையாக யாழ்ப்பாணம், திருகோணமலைப் பகுதிகளிலிருந்து தமிழ் அகதிகள் வந்துள்ளனர்.

திருகோணமலையைச் சேர்ந்த சந்திமதி (வயது 46) கூறியதாவது:-

1998ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தின் தாக்குதலில் எனது கணவர் கொல்லப்பட்டார். நான் கூலி வேலை செய்து பிழைத்துவந்தேன். தற்போது இலங்கை இராணுவத்தினர் கெடுபிடி செய்வதால் வேலைக்குச் செல்ல முடியவில்லை விரைவில் இலங்கை இராணுவத்திற்கும் புலிகளுக்கும் போர் நடக்கும் என அப்பகுதியில் உள்ளவர்கள் தெரிவித்தனர். எனவே நாங்கள் அங்கிருந்து தப்பி தமிழகம் வந்துள்ளோம். இங்கு ஏதேனும் கூலி வேலை கிடைத்தால் ஒருவேளை உணவாவது கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உள்ளோம் -என்றார்.

(ஐ)

பருத்தித்துறையில் சுற்றிவளைப்பு!

யாழ்ப்பாணம்,ஜன.22

பருத்தித்துறையின் சில பகுதிகள் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை தொடக்கம் பெரும் எண்ணிக்கையான படையினர் இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

பருத்தித்துறை பஸ்நிலையம், பத்திரகாளி வீதி, கல்லூரி வீதி ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகள் வர்த்தக நிலையங்கள் என்பனவற்றுக்குச் சென்ற படையினர் துருவித்துருவி சோதனையிட்டனர்.

சோதனை நடவடிக்கையின்போது குறிப்பிட்ட பகுதிகளுக்குச் செல்வதற்கோ, வெளியே செல்வதற்கோ எவரும் அனுமதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7-15)

சந்தகிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்கு விசேட நீதிபதிகள் குழு

கொழும்பு,ஜன.22

படைகளின் தளகர்த்தர் அட்மிரல் தயா சந்தகிரிக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய்வதற்கு மூன்று நீதிபதிகள் கொண்ட விசேட குழுவை நியமிக்கும்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு இந்த உத்தரவை ஜனாதிபதி விடுத்துள்ளார்.

ஆயுதக் கொள்வனவில் இடம்பெற்ற ஊழல்கள், 20 வருடங்கள் பழைமைவாய்ந்த கப்பல் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு ஆகியன தொடர்பாக விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறிய இந்த விசேட குழுவை நியமிக்கும்படி ஜனாதிபதி கோரியுள்ளார். (ஐ-3)

தேநீர் கடைப் பணியாளர் ஒருவர் புளியங்கூடலில் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஜன. 22

ஊர்காவற்றுறை புளியங்கூடல் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான துரைராசா ரவீந்திரன்(வயது 35) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

உயிரிழந்த நபர் புளியங்கூடல் பகுதியில் உள்ள தேநீர்சாலை ஒன்றில் பணிபுரிந்தவர் எனவும் நேற்று முன்தினம் மாலை 7.30 மணியளவில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் குறிப்பிட்ட தேநீர்சாலைக்கு வந்த துப்பாக்கிதாரிகள் ரவீந்திரன் மீது சரமாரியான வேட்டுக்களைத் தீர்த்துவிட்டுத் தப்பிச் சென்றனர் எனவும் அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான அவர் சிறிதுநேரத்தில் மரணமானர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் நேற்று நண்பகல் பொலீஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு மரண விசாரணையின் பொருட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-7-8-15-14-78)

இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் ஜனாதிபதியைச் சந்தித்தனர்

கொழும்பு,ஜன.22

இந்தியப் பாதுகாப்பு ஆலோசனைச் சபைப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் விசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சந்திப்பில் இலங்கையில் கணனிக் கல்வித்துறை மேம்பாடு, கலாசார அபிவிருத்தித் திட்டத்தை விருத்திசெய்தல் ஆகிய திட்டங்கள் தொடர்பாக இணக்கம் காணப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சந்திப்பில் இந்தியப் பாதுகாப்பு ஆலோசனைச் சபை உறுப்பினர் எம்.கே.ராஸ்கோத்திரா, சென்னை ஐ.ஐ.ரி. உறுப்பினர் பேராசிரியர் பி.வி.இந்திரேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இவர்களுடன் இலங்கைக்கான இந்தியத் தூதர் நிருபமாராவ் மற்றும் இந்தியாவுக்கான இலங்கை தூதர் றொமேஸ் ஜெயசிங்கவும் கலந்துகொண்டனர்.

(ஐ-12)

இழந்த கல்வியை மீட்டும் செயலமர்வு இரு தினங்கள் மருதனார்மடத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.22

யுனிசெவ் அனுசரணையுடனான இழந்த கல்வியை மீட்டல் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நாளையும் புதன்கிழமையும் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தரம் 4 முதல் தரம் 5 வரை மேற்படி கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்கும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கும் தரம் 6 முதல் 9 வரை கணிதம் மற்றும் தமிழ் ஆகிய பாடங்களுடாக மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் 5 மணி வரை நடைபெறுமெனவும் -

தரம் 10 மாணவருக்கு தமிழ்,கணிதம் ஆகிய பாடங்களுடாக மேற்படி நிகழ்ச் சித் திட்டத்தை முன்னெடுக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் புதன் கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறும். (3-69)

கடவுச்சீட்டு வழங்கும் அதிகாரம் பிரதேச செயலர்களிடம் ஒப்படைப்பு

கொழும்பு,ஜன. 22

கடவுச்சீட்டுக்களை வழங்கும் அதிகாரம் வடக்கு - கிழக்கு உட்பட நாட்டில் உள்ள சகல பிரதேச செயலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதென்று குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டாளர் பீ.பி.அபயகோன் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய நடைமுறையானது பொது மக்களின் நன்மைகருதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பாக நாட்டிலுள்ள சகல பிரதேச செயலர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கடவுச்சீட்டுக்களைப் பெறவிரும்புவோர் தத்தமது பகுதி பிரதேச செயலர்களிடம் அதற்கான விண்ணப்பப் படிவங்களை இலவசமாகப் பெற்றுப் பூர்த்திசெய்து மீண்டும் பிரதேச செயலர்களிடம் ஒப்படைக்கவேண்டும். அதனை மூன்று தினங்களுக்குள் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதன் மூலம் 10 தினங்களுக்குள் கடவுச்சீட்டை உரியவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

கடவுச்சீட்டுக்கான விண்ணப்பங்களை 'இல.4. ஆனந்தராசா, கருணா மாவத்தை, புஞ்சிபொரளை, கொழும்பு 08' என்ற முகவரியில் அமைந்துள்ள மேற்படி அலுவலகத்திலோ அல்லது -

தமது பிரதேசத்திலுள்ள பிரதேச செயலகங்கள், கிராம சேவையாளர் அலுவலகங்கள், வணக்கஸ்தலங்கள், அரச திணைக்களங்கள், அரச வங்கிகள் மற்றும் அஞ்சல் அலுவலகங்கள் ஆகியவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும் - என்றார்.

இதேவேளை -

வெகுவிரைவில் வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் நான்கு பகுதிகளில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கிளை அலுவலகங்கள் திறப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. (ஐ-6)

முன்னாள் கடற்படை அதிகாரி புதிய ஆளுநராக நியமனம்

கொழும்பு,ஜன.22

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக முன்னாள் கடற்படை அதிகாரியான றியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம நியமிக்கப்பட்டுள்ளார்

இந்த நியமனக் கடிதத்தினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ றியர் அட்மிரல் மொஹான் விக்கிரமவிடம் கையளித்தார்.

இதுவரை காலமும் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராகக் கடமையாற்றிவந்த டிரோன் பெர்னாண்டோ ஜனாதிபதியின் வெளிவிவகாரத்துறை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனக்கான நியமனக் கடிதத்தினை ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ளார். (ஐ-7)

சிறுவர்கள் ஐவரும் வீடு திரும்பினர்

யாழ்ப்பாணம்,ஜன.22

நேற்றுமுன்தினம் காணாமற்போயினர் என்று கூறப்பட்ட குருநகர் பகுதியைச் சேர்ந்த பாடசாலைச் சிறுவர்கள் ஐவரும் வீடு திரும்பி இருக்கின்றனர்.

இவர்கள் பாடசாலை செல்வதாகக் கூறிவிட்டு கடற்கரைப் பகுதி ஒன்றுக்குச் சென்று உல்லாசமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தனர் என்று கூறப்பட்டது. (ஐ-190)

கொடிகாமம் புதிய பஸ் நிலையம் இன்று வைபவ ரீதியாகத் திறப்பு

சாவகச்சேரி,ஜன.22

கொடிகாமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய பஸ் நிலையமும் இரு மாடிக் கட்டடத் தொகுதியும் இன்று ஞாயிற்றுக்கிழமை [illegible]ண்பகல் 12 மணிக்கு சம்பிரதாயபூர்வமா[illegible]திறந்துவைக்கப்படவுள்ளன.

[illegible]ந்தப் புதிய கட்டத் தொகுதி சாவகச்சேரி பி[illegible]டையால் சுமார் 40 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள திறப்பு விழாவில் யாழ்.அரச அதிபர் க.கணேஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு புதிய பஸ் தரிப்பு நிலையத்தையும் கட்டடத் தொகுதியையும் திறந்துவைக்கவுள்ளார். (ஐ-31)

இரவில் சோதனை நடக்காது என்று உறுதி: பேசாலையில் இடம்பெயர்ந்தோர் திரும்பினர்

கொழும்பு,ஜன.22

மன்னார், பேசாலை நூறு வீட்டுத்திட்டம், துள்ளுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து கடந்த ஒரு மாதகாலம் வேறு இடங்களில் தங்கியிருந்த குடும்பங்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர இணக்கம் தெரிவித்துள்ளன.

பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் தங்கியுள்ள இந்த 131 குடும்பங்களின் மீளக்குடியமர்வு தொடர்பாக மன்னார்ப் பகுதி பாதுகாப்பு உயர் அதிகாரிகள், சிவில் அதிகாரிகள், மன்னார் ஆயர், பொதுமக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடியதன் பயனாகவே இந்த இணக்கம் காணப்பட்டது.

பொதுமக்களுக்கு எவ்வித இடையூறுகளும் ஏற்படாது என்றும் இரவில் வீடுகளில் சோதனை நடத்தப்படமாட்டாது என்றும் - பாதுகாப்புத் தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

அவ்வாறு இரவில் சோதனை இடம்பெறநேர்ந்தால் பங்குத் தந்தை, கிராம அலுவலர், பெண் பொலீஸார் ஆகியோருடன் இணைந்தே தேடுதல் நடத்தப்படும் எனவும் உறுதி அளிக்கப்பட்டது.

இதனையடுத்தே மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப இணக்கம் தெரிவித்தனர் என்று மன்னார் ஆயர் அதிவண இராயப்பு ஜோசெப் ஆண்டகையும், மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரெனி டிமெலும் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 23ஆம் திகதி மன்னாரில் கடற்படையினருக்கு எதிராக இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் பாதுகாப்புப் படையினரால், பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டனர். பொதுமக்கள் மீது இராணுவக் கெடுபிடிகள் கட்டவிழ்த்துவிடப்பட்டமையை அடுத்தே இப்பகுதிப் பொதுமக்கள் இடம்பெயர்ந்தனர். (ஐ-12)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

நோர்வேயில்தான் பேச்சு என்று புலிகள் வலியுறுத்துவது ஏன்?

"விடுதலைப் புலிகளுடனான உத்தேச சமாதானப் பேச்சுக்களின் முதலாவது சுற்றை விடுதலைப் புலிகள் கேட்டுக் கொண்டபடி நோர்வேயில் நடத்த முடியாது. எக்காரணம் கொண்டும் ஒஸ்லோவில் பேச்சுக்களை நடத்த இணங்க மாட்டேன். அப்படி ஒஸ்லோவில் நடத்த நாம் இணங்கினால் அது புலிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சி நாம் அடிபணிந்ததாகவே அமைந்துவிடும். புலிகளின் மிரட்டல்களுக்குப் பயந்து எந்த நடவடிக்கையையும் நான் எடுக்க மாட்டேன்" – இவ்வாறு திட்டவட்டமாக – உறுதியாக – கூறியிருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளின் ஆசிரியர்களிடமே இந்தக் கருத்தை அவர் கூறியிருப்பதாலும் –

எங்கு பேச்சு நடத்துவது என்ற விவகாரத்தை முடிவு செய்வதற்காக நோர்வே அனுசரணைத் தரப்பின் விசேட பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்ம் வரவிருக்கையில் – இந்த விவகாரத்தில் இறுதி முடிவு எட்டப்படுவதற்கான காலத்துக்கு இன்னும் ஒருசில தினங்கள் இருக்கையில் இந்தக் கருத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டிருப்பதாலும் –

பேச்சை எங்கு நடத்துவது என்பதில் அரசின் இறுதி நிலைப்பாடு இதுவே என்றே கொள்ள வேண்டியுள்ளது.

இதே சாரப்பட்ட தகவலை நோர்வேத் தரப்பு மூலம் புலிகளின் உயர்வட்டாரங்களுக்கு நேற்றுமுன்தினமும் அரசுத் தரப்பு கோடி காட்டியிருப்பதாகவும் உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

ஆகவே, நோர்வே தவிர்ந்த வேறு ஓர் இடத்தில்தான் முதல் சுற்றுப்பேச்சு என்ற இறுக்கமான நிலையில்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசுத் தரப்பினரும் இருக்கப் போகின்றார்கள் என்பது தெளிவாகிவருகின்றது.

அதுதான் நிலைப்பாடு என்றால் பேச்சுக்கு வாய்ப்பேயில்லை என்றுதான் அர்த்தம். அதுவே இன்றைய யதார்த்தம்.

நோர்வேயில் பேசவேண்டும் என்று புலிகள் கோருவதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் – அது வெறுமனே விடுதலைப் புலிகளின் வரட்டுப் பிடிவாத நிலைப்பாடு என வெளியே காட்டுவது போல – தென்னிலங்கை அர்த்தப்படுத்தி நிற்பதுதான் இன்றைய இக்கட்டு – தேக்க – நிலைக்கு முழுக்காரணமாகும்.

நோர்வேயில்தான் முதல் சுற்றுப்பேச்சு என விடுதலைப் புலிகள் ஏன் பிடிவாதமாக நிற்கின்றார்கள்?

ஏதோ இலங்கை அரசு, ஆசிய நாடு ஒன்றில்தான் பேச்சு என்று ஒன்றைக்கூற, புலிகள் அதற்குப் போட்டியாக ஒஸ்லோவில்தான் பேச்சு என்று பதில்கூற, இப்போது அரசு தனது நிலைப்பாட்டிலிருந்து கீழிறங்கி, வேறு எந்த ஐரோப்பிய நாட்டிலும் பேசலாம் என்று விட்டுக் கொடுத்து விட்டது போலவும், புலிகள் மட்டும் தங்கள் நிலைப்பாட்டிலிருந்து கீழிறங்காமல் – விட்டுக்கொடுக்காமல் – 'தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால்' என்பது போல பிடிவாதமாக நிற்கிறார்கள் என்ற மாதிரியும் கதைகள் பரப்பப்பட்டுவருகின்றன.

இந்த விடயத்தில் உண்மையைப் புரிந்து கொள்வதற்கு இந்த அமைதி முயற்சிகளின் – சமாதான நடவடிக்கைகளில் – தரப்புகளின் தரமட்டம் பற்றிய கணிப்பை நாங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் சமதரப்புகள் என்ற அந்தஸ்து நிலவினால் – பேணப்பட்டால் – மட்டுமே அமைதித் தீர்வுக்கான நேரடிப் பேச்சுக்களில் புலிகள் தரப்பு பங்குபற்றும் என்ற உறுதிப்பாட்டோடுதான் இந்த சமாதான முயற்சிகளுக்குப் புலிகள் உடன்பட்டார்கள். அது ஏற்றுக்கொள்ளப்பட்டதால்தான் தமது ஆயுதவழிப் போராட்டத்தை சற்றுக் காலம் இடைநிறுத்தி கலந்துரையாடல், நல்லிணக்கம், புரிந்துணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் தீர்வு ஒன்றைக் காணும் தற்போதைய சமாதான எத்தனங்களுக்கு அவர்கள் உடன்பட்டார்கள்.

புலிகள் மீதான தனது தடையை நீக்கி, புலிகள் அமைப்பை சமதரப்பாக ஏற்றுப் பேசுவதற்கு இலங்கை அரசு இணங்கியதாலேயே இலங்கை அரசுடன் ஒரு மேசையில் அமர்ந்திருந்து பேசுவதற்கு புலிகள் சம்மதித்தார்கள்.

சமதரப்புகளுக்கு இடையே தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கவேண்டுமானால், ஒரு தரப்பு மற்றைய தரப்பைப் பேச்சுக்கு அழைக்க வேண்டும். 'வாருங்கள்! இரண்டு தரப்புகளும் கருத்துக்களைப் பரிமாறி பொருத்தமான ஓர் இடத்தைத் தெரிவுசெய்து அங்கிருந்து பேசுவோம். அப்படிப் பேசுவதற்கு உகந்ததாக சில இடங்களை நீங்களும் பிரேரியுங்கள். நாங்களும் பிரேரிக்கின்றோம். இரு தரப்புக்கும் ஏற்புடைய இடத்தில் பேசுவோம்" – என்று அழைக்க வேண்டும். அல்லது இன்ன இடத்தில் பேச நாங்கள் விரும்புகிறோம். உங்களுக்குச் சம்மதமா என்று கேட்கவேண்டும்.

அதைவிடுத்து, இந்த விடயத்தில் எடுத்த எடுப்பில் நிபந்தனை விதித்தது யார்? ஆசிய நாடு ஒன்றில் தான் பேச்சு என்று கட்டுப்பாடு போட்டவர்கள் யார்?

இந்தக் கட்டுப்பாடுகள், நிபந்தனைகள் போடும் அதிகாரம் – வலு – தனக்கு இருப்பதாக இலங்கை அரசு கருதுமானால் – அந்த நிபந்தனைக்கு புலிகள் தரப்பும் இணங்குமானால் – சமதரப்பு என்ற நிலைமையே அடிபட்டுப் போய்விடும். அரசுக்குக் கீழ், அதன் அதிகார செல்வாக்குக்கு கீழ், இயங்கும் ஓர் அமைப்பாகப் புலிகள் கருதப்படும் நிலைமை ஏற்படும்.

அதனால்தான், எங்கு, எப்படி, என்ன மாதிரிப் போவது என்ற விடயங்களில் நிபந்தனைக்கு இடமில்லாமல் – இடமளிக்காமல் – உறுதியாக நிற்கின்றது புலிகள் அமைப்பு.

"எங்கு பேசுவது என்ற விடயத்தில் அரசுத் தரப்பாகிய நீங்கள் தான் நிபந்தனை விதித்தீர்கள். அதனால், அதனை நாம் நிராகரித்தோம். இப்போது நிபந்தனையை விட்டு விட்டு வாருங்கள். நாங்கள் இரு தரப்பினருமே (அரசு,புலிகள் ஆகிய இரு தரப்பினருமே) சம அந்தஸ்துடன் அமர்ந்திருந்து கலந்துரையாடி, பேச்சுக்கு ஓரிடத்தைத் தெரிவு செய்வோம்" – என்பதுதான் புலிகளின் நிலைப்பாடு.

"அப்படி ஆரம்பத்தில் நாம் அமர்ந்திருந்து பேசுவதற்கு – எதிர்காலப் பேச்சுக்குரிய இடத்தைத் தெரிவுசெய்வதற்கான பேச்சை நடத்துவதற்கு – எமக்கு அனுசரணைப் பணி வழங்கும் நோர்வேயே பொருத்தமான இடம். இரு தரப்பும் அனுசரணைப் பணிக்கு ஏற்றுக் கொண்ட நாடு நோர்வே என்பதால் இடம் குறித்து சர்ச்சை இருக்கும் போது பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக் கூடிய நடுநிலையான மையம் அனுசரணையாளர்களின் இடம் தான். அதனால், அங்கிருந்து பேசி, அடுத்த கட்டம் குறித்துத் தீர்மானிப்போம்" – என்பதே புலிகளின் கருத்து. இந்த நியாயம் புரியாமல், பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளைத் திருப்திப்படுத்துவதற்காக – ஒஸ்லோவில் பேச முடியாது என்று வறட்டுப் பிடிவாதம் பிடிக்கின்றது இலங்கை அரசு.

இந்தப் பிடிவாதத்திலிருந்து அரசு இறங்கி வராவிட்டால், உரிய வழியில் அரசை இறங்கிவர வைப்பதே ஒரே மார்க்கமாகும்.

வலிந்து போர் தொடுக்க ஸ்ரீலங்கா அரசு முயற்சி

பொறுமை போதும்; போருக்கு ஆணையிடுங்கள்!

மட்டக்களப்பு எழுச்சிப் பிரகடனத்தில் தலைவரிடம் வேண்டுகோள்

மட்டக்களப்பு,ஜன.22

தமிழர்கள் மீது வலிந்து போரைத் தொடங்குவதற்கு ஸ்ரீலங்கா அரசு முனைகின்றது. இந்த நிலையில், இனியும் பொறுத்திருக்காமல் போரைத் தொடங்க ஆணையிடுங்கள்.

இவ்வாறு தமிழீழ தேசியத் தலைவரிடம் மட்டக்களப்பு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

மட்டக்களப்பு, அம்பிலாற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் கண்டன எழுச்சி நிகழ்வு ஒன்று நடைபெற்றது. இந்த நிகழ்வின் இறுதியில் எழுச்சிப் பிரகடனம் ஒன்றும் வெளியிடப்பட்டது. இந்த எழுச்சிப் பிரகடனத்திலேயே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரகடனம் வருமாறு:-

ஸ்ரீலங்கா அரசு எம்மீது வலிந்து போர் தொடுக்க கங்கணம் கட்டி நிற்கின்றது. சர்வதேசத்தின் மத்தியில் எமது இனத்துக்கு களங்கம் ஏற்படும் வகையில் பரிப்புரைகளை முன்னெடுத்துச் செல்கிறது. தற்போதைய அரசும், இனவெறிக் கூட்டமும் எமது உயிரினும் மேலான விடுதலையைப் பயங்கரவாதமாக்க முனைந்து செயற்படுகின்றன.

நாளுக்கு நாள் எமது உடன்பிறப்புகள் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். மென்போக்குக் கொண்ட தமிழ் புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், சாதாரண தொழிலாளிகள் அனைவரும் தமிழினம் என்ற ஒரே காரணத்துக்காகக் கோழைத்தனமாக, கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

இன்றைய சமாதான சூழலை நன்கு பயன்படுத்தி சர்வதேசம் எங்கும் தமிழினத்துக்கு எதிரான நாகரிகமற்ற கபடத் தனமான கருத்துகளை முன்னெடுத்துச் செல்வதுடன் எம்மினத்தைச் சீண்டிப் பார்க்கவும் முனைகிறது ஸ்ரீலங்கா அரசு.

சமாதானப் பேச்சுக்கு அனுசரணை மட்டும் நோர்வே நாடு வழங்கினால் போதும். அதன் தலைநகரில் பேச்சுகள் நடைபெறக்கூடாது எனவும் சர்வதேச நாடுகள் எல்லாம் எம் இனத்தின் உண்மைத் தன்மையை விளங்கிக் கொள்ளக் கூடாது என்றும் பொய்ப்பிரசாரம் செய்கிறது ஸ்ரீலங்கா அரசு.

எமது தமிழ்ப் பெண்கள், மாணவிகள் பாலியல் வல்லுறணர்வுக்கு ஆளாக்கப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு நடு வீதிகளிலும் பாழ் கிணறுகளிலும் தூக்கி வீசப்படுகின்றனர். இன்றைய சமாதானச் சூழலில் புங்குடுதீவில் சகோதரி தர்சினிக்கு நடந்த அவலமும் மன்னாரில் பச்சிளம் குழந்தைகளுடன் பெற்றோரையும் சேர்த்து எரிக்கப்பட்ட கொடுமையையும் எண்ணிப் பார்க்கின்ற போது எம் நெஞ்சங்கள் வெடிக்கின்றன.

நீண்ட காலமாக தமிழ் மாணவர்களுக்குக் கல்வி, தொழில் வாய்ப்புகளில் பாரபட்சம் காட்டி வருவதே சிங்கள இனவாத அரசுகளின் இனவெறிப் போக்குகளாகும். இப்படியான பாரபட்சத்துக்கு சவாலுடன் முகம் கொடுத்து கல்வியில் வெற்றிகாணும் தமிழ் மாணவர் சமூகத்தை சிங்கள இனவெறியர்கள் பொறுக்க முடியாமல் நயவஞ்சகமாகக் கொலை செய்துவருகின்றனர்.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் நாள் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான எமது தாயகப் பிரதேசத்துக்குள் நிராயுதபாணிகளாக அரசியல் பணியாற்றச் சென்ற 200இற்கும் மேற்பட்ட போராளிகளும், 500 இற்கும் அதிகமான அப்பாவித் தமிழர்களும் சிங்கள இனவெறியர்களால் கொடூரமாகச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இத்தகைய சம்பவங்கள் நெஞ்சங்களை உலுக்கி நிற்கின்றன. இந்நிலையில் தமிழர் தாயகமெங்கும் நிழல்யுத்தம் ஒன்றை சிங்களப் பேரினவாத அரசு திட்டமிட்டு நடத்திவருகின்றது.

வீரம் விளை நிலத்தின் வித்துக்களே!

எம் இனிய உறவுகளே! நாம் பொறுமை காத்தது போதும்! பொங்கியெழுவோம்!!

சர்வதேச சமூகமே! ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் கபட நடவடிக்கைகளை நன்கு விளங்கியும் நீ மௌனம் சாதிப்பது ஏன்?

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் பேச்சுகள் உடன் நடைபெற அழுத்தம் கொடு!

எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மைத் தன்மையை அங்கீகரி!

இல்லையேல்....!

காலம் காலமாக அழிந்து போய் அழிவின் விளிம்பில் நிற்கும் எம் இனம் தனது எதிர்கால வாழ்விற்கும் நிலையான இருப்புக்கும் தேசியத் தலைவரின் வழிப்படுத்தலில் பொங்கியெழுவதைத் தவிர்க்க முடியாது.

எமது தமிழீழத் தேசியத் தலைவரின் மேலான கவனத்திற்கு...

இன்றைய கண்டன எழுச்சிப் பேரணி மூலம் மட்டக்களப்பு மாவட்ட வெகுஜன ஒன்றியம் தங்களுக்குத் தயவாக விடுக்கும் அவசர வேண்டுகோள்:-

மீண்டும் போரை எதிரி வலிந்து தொடங்க முனைகின்றான். இனியும் கைகட்டி, வாய்பொத்தி பேசா மடந்தைகளாக பொறுத்துக் கொண்டிருந்தது போதும். போரைத் தொடங்க ஆணையிடுங்கள். ஓயாத அலையெனப் புயலாகப் புறப்படும் பொங்கியெழும் மக்கள் படை.

'தமிழரின் தாயகம் தமிழீழத் தாயகம்'

– என்று அந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

எழுச்சி நிகழ்வில் பிரகடனம் வெளியிட்டு வைக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டுள்ளோரின் ஒருபகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

மக்கள் இடம் பெயர்ந்ததை அடுத்து மயான பூமியாகியது தோப்புக்காடு

வலி.மேற்கு, ஜன.22

வன்னிக்கு மக்கள் இடம்பெயர்ந்து சென்றதை அடுத்து, காரைநகர் தோப்புக் காடு பகுதி நடமாட்டமற்ற மயானம் போன்று வெறுமையாகக் காட்சியளிக்கின்றது-

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து வன்னிப் பகுதியில் வசித்து வந்த காரைநகர் தோப்புக் காட்டைச் சேர்ந்த மக்கள், விடுதலைப் புலிகளுக்கும், அரசிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை அடுத்து மீளவும் தமது சொந்த இடங்களிற்குத் திருப்பியிருந்தனர்.

இவ்வாறு மீளக் குடியமர்ந்தோர் பற்றைக்காடாக புதர் மண்டிக்கிடந்த தமது வீடுகளையும் பொது மண்டபங்களையும், வீதிகளையும் துப்புரவு செய்து இயல்புவாழ்வுக்குத் திரும்பியவேளையில் மீண்டும் இடம்பெயர்வு ஏற்பட்டுள்ளது-

இதேவேளை- தோப்புக்காடு கிராமத்துக்கான பிரதான வீதியை கடற்படையினர் பொதுப் போக்குவரத்துக்குத் தடை செய்துள்ளனர். அதுடன், மேற்படி வீதியில் புதிது புதிதாகக் காவலரண்களையும் அமைத்துவருகின்றனர். (எ-6,175)

வடமராட்சியில் 28 பேருக்கு படையினர் சைக்கிள் அன்பளிப்பு

படைத் தலைமையகம் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.22

வடமராட்சிப் பகுதியில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களில் 28 பேருக்கு படையினர் சைக்கிள்களை வழங்கியுள்ளனர்.

இதுவிடயமாக, பலாலி படைத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்:-

யாழ்.பாதுகாப்பு படைத் தளபதியின் உத்தரவுக்கு அமைய பருத்தித்துறை, கற்கோவளம் பகுதி மக்களுக்கு கடந்த 2ஆம் திகதியும் 17 ஆம் திகதியும் படையினரால் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

'ஹீரோ' ரகத்தைச் சேர்ந்த சைக்கிள்களே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 18 சைக்கிள்கள் ஆண்களுக்குரியவை. ஏனைய 10 சைக்கிள்கள் பெண்களுக்குரியவை.

மக்களின் அன்றாடத் தேவைக்கு உதவும் வகையில் இந்தச் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பில் உள்ள நிறுவனம் ஒன்று நன்கொடையாக இந்தச் சைக்கிள்களை வழங்கியிருந்தது.

இந்தச் சைக்கிள்கள் அப்பகுதியில் நிலைகொண்டுள்ள படைப் பிரிவின் அதிகாரிகளினதும் சிப்பாய்களினதும் ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டன – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-7)

நாளை

தை 10
திங்கட்கிழமை
23.01.2006
திதி: நவமி
பின்னிரவு: 5.15 வரை
நட்சத்திரம் : சுவாதி
பிற்பகல் : 2.43 வரை
சுபநேரம் : 12.36 - 02.06
ராகுகாலம் : 08.00 - 09.30
(யாழ்ப் பஞ்சாங்க நேரப்படி)

உதயவாக்கு

தமக்கென செலவிடாமல் சேர்த்து வைக்கும் செல்வம் பிறரையே சென்று அடையும் - பிறரே வள முடன் வாழ்வர்.

– சீராக்கின் ஞானம்- விவிலியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டு. - அம்பாறையில் அமைதி குலைந்தது; எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற பீதி

வடக்கு - கிழக்கின் இன்றைய சூழ்நிலைக்கு அம்பாறை மாவட்டமும் விதிவிலக்கல்ல. அதற்கேற்ப இவ்வாரம் இங்கு

வெறிச்சோடிய நிலையில் அம்பாறை நகரம்

அமைதியிழந்த நிலை காணப்பட்டது. அதனால் மக்களின் அன்றாட இயல்பு வாழ்வு கூடப் பாதிக்கப்பட்டிருந்தது.

அக்கரைப்பற்றுப் பகுதியில் வைத்து இரு தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டதன் காரணமாக மறுநாள் ஆலையடி வேம்புப் பகுதியில் வைத்து ஒரு முஸ்லிம் கொலை செய்யப்பட்டார்.

ஏட்டிக்குப் போட்டியான இந்த நடவடிக்கைகளால் மொத்தமாக இந்த இரு பிரதேசங்களுமே நிம்மதியிழந்தன. அக்கரைப்பற்றுப் பிராந்தியத்தில் அமைதி, சமாதானம் நிலவவேண்டும் என்பதற்காக இரு சமூகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு, சமாதான சபை ஏற்படுத்தப்பட்ட இரு நாள்களில் இச்சம்பவங்கள் அடுக்காக இடம்பெற்றன.

இவை மீண்டும் பதற்ற நிலையை ஏற்படுத்தின. இதனால் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு என்றிருந்த பதற்றநிலை திருக்கோவில், ஒலுவில் வரை விஸ்தரித்தது. இதனால், கடந்த 5 நாள்களில் அங்கு பாடசாலை, அலுவலகம், கடைகள் என்று எதுவுமே திறக்கப் படவில்லை. போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டிருந்தது. மொத்தத்தில் மக்கள் அமைதியிழந்திருந்தனர்.

அதிரப்படையினர் பலத்த பிரயத்தனத்தைச் செலுத்தி அலுவலகங்கள் சிலவற்றைத் திறக்க முற்பட்ட போதிலும் பெரிதாக அது பலனளிக்கவில்லை.

இதனிடையே தினமும் பயணிக்கும் திருக்கோவில் - வவுனியா தனியார் பஸ், மூன்றாம் நாள் அதிகாலை அக்கரைப்பற்றில் வைத்து தாக்குதலுக்கு இலக்காகியது. பின்புறக் கண்ணாடி முற்றாகச் சேதமடைந்

அம்பாறைமடல்

தது. இது தமிழரின் பஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும் அப்பகுதியில் தமிழர் - முஸ்லிம் தரப்புக்கள் அவரவர்கள் பகுதியிலேயே நடமாடித்திரிகிறார்கள்.

இதனிடையே அதிரடிப்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. கல்முனை நகரில் திடீர் திடீரென வீதியை மறித்து சோதனை நடத்தப்படுகிறது. பாண்டிருப்புத் தமிழ்க் கிராமம் அடிக்கடி சுற்றிவளைப்பிற்கு இலக்காகி வருகின்றது. வெள்ளியன்று மாலையும் அங்கு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆள் நடமாட்டம் அற்ற வீதி

கல்லோயா குடியேற்றத் திட்டத்தின் கீழ் உள்ள தமிழ்க் கிராமத்தில் படையினர் வீடு வீடாகசோதனை செய்து வருகின்றனர். கொக்கட்டிச்சோலை - மண்டூர் மார்க்கத்தில் இக்கிராமங்கள் அமைவதால் இங்கு படையினரின் தலையீடு கூடுதலாக வுள்ளது. கல்முனை நகரில் படையினரின் ரோந்து 24 மணிநேரமும் உள்ளது.

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் ஜோசப் பரராசசிங்கத்தின் இழப்பையடுத்து சோகத்தில் ஆழ்ந்திருந்த மட்டு நகரம் வியாழனன்று மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் மீண்டும் அதிர்ந்திருக்கின்றது.

இந்தச் சம்பவத்தில் மூன்று பொலீஸாரும், ஒரு பொதுமகனும் கொல்லப்பட்டதோடு, 25 பேர் காயமடைந்தனர். இச்சம்பவத்தின் பின்னர் படையினரின் அட்டகாசம் அங்கு அதிகரித்துள்ளது. மட்டுநகர் தற்போதெல்லாம் மாலை 5 மணியானதும் ஓடி அடங்கிவிடுகின்றது. சனநடமாட்டமே காணமுடியாத நிலை.

தொலைபேசி மிரட்டல்களும் பரவலாக இருந்து வருவதாக கூறப்படுகின்றது. மக்கள் ஒருவித பயப் பீதியில் வாழ்ந்து வருகின்றனர்.

மட்டு-திருகோணமலை வீதியில் படையினர் குவிக்கப்பட்டு வீதி ரோந்து நடவடிக்

வி.ரி.சகாதேவராஜா

கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பயணிப்பதற்கு அச்சமாக உள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

ஆழிப் பேரலை பீதி போய் போர்ப்பீதி மக்களை ஆட்கொண்டிருப்பதாக தெரிகின்றது. கொக்கட்டிச்சோலையில் இருந்து வரும் 'ஈழநாதம்' பத்திரிகையை கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அப்பால் எடுத்து வர படையினர் அனுமதிப்பதில்லை. அதனால் அப்பத்திரிகை படுவான்கரை மக்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. மொத்தத்தில் மட்டு.- அம்பாறை மக்கள் நிம்மதி குறைந்து பயப்பீதியோடு இருப்பதைக் காணலாம். ✱

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சொல்ஹெய்மின் வருகையை தேவ தூதராகப் பார்க்கும் கொழும்பு

சமாதானத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது இப்போதைக்கு சாத்தியம் இல்லை என்றும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிப்பதற்கான முயற்சியில்



ஈடுபடுவதுதான் இப்போதைக்குள்ள ஒரு தெரிவென்றும், நோர்வே அமைச்சரும், சமாதான ஏற்பாட்டாளருமாகிய எரிக் சொல்ஹெய்ம் வியாழனன்று கருத்து வெளியிட்டார். அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கு மூன்று நாள்களுக்கு முன் வெளியிட்ட இக்கருத்தானது, அவர் இலங்கையின் அரசியல் யதார்த்தத்தை தெளிவாகப் புரிந்துள்ளார் என்பதைக் காட்டுகின்றது. யதார்த்தத்தைச் சரியாக மதிப்பீடு செய்வதே ஒரு இராஜதந்திரியுடைய முதன் நிலைத் தகுதியாகும். அது சொல்ஹெய்மின் வார்த்தைகளில் தெளிவாகப் புலப்படுகின்றது.

சொல்ஹெய்மிற்கு எதிரான இத்துணைப் பெரும் கண்டனங்களை கொழும்பு தொடர்ச்சியாக வெளியிட்டு வந்த போதிலும், இப்போது சொல்ஹெய்மின் வரவை தேவதூதாகப் பார்க்கும் நிலையிலேயே கொழும்பு உள்ளது. கொழும்பில் அரச கட்டிலில் அமர்ந்திருப்பவர் யதார்த்தத்திற்கு வெகு தூரத்தில் நின்றுகொண்டு, தன்னை மீட்பராகக் காட்டிய ஒருவராவர். கொழும்பு தனது சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இதுவரை துரதிருஷ்ட உள்ள ஒரு தலைவனைத் தானும் பெற்றதில்லை.

இனப்பிரச்சினையை நவீன கண்ணோட்டத்தில் அணுகவல்ல சிங்களத் தலைவர்களையோ, சிங்கள ஊடகவியலாளர்களையோ கொழும்பு இதுவரை கொண்டிருக்கவில்லை. தற்போதைய ஜனாதிபதியாகிய ராஜபக்ஷவிடமோ அல்லது இதற்கு முன்பிருந்த சிங்கள தலைவர்களிடமோ இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கேற்ப சிந்தனைப் போக்கோ, துணிச்சலோ, ஆளுமையோ அன்றி அர்ப்பணிப்போ இல்லை. இவையின்றி எந்த ஒருவராலும் தமிழ் பேசும் மக்களுக்குரிய நியாயபூர்வமான உரிமைகளை- அணுகமுடியாது.

சொல்ஹெய்மை நோர்வேயின் பிரதிநிதியாகப் பார்க்காமல் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதியாகப் பார்க்க வேண்டுமென விமானப் படையின் முன்னாள் தளபதி குணதிலகா கூறியிருப்பது மிகவும் சரியான கூற்றாகும். இப்படி யதார்த்தத்தைத் பிரதிபலிக்கும் கூற்றுக்களை சில வேளைகளில் சில சிங்களப் பிரமுகர்கள் அரிதாகக் கூறுவதுண்டு. ஆனால், கொள்கை வகுப்பாளர்களையோ அன்றித் தீர்மானமெடுக்கும் வட்டத்தினரையோ இத்தகைய கருத்துகள் பாதிப்பதில்லை.

கொழும்பில் தற்போது அரச கட்டிலில் அமர்ந்திருக்கும் அனைவரும் இனவாத சுருதியில் சுகம் காண்பவர்கள். புலி எதிர்ப்பு கோசத்தை முன்வைத்து தமிழருக்கு எதிராக பாமர சிங்கள மக்களைத் தூண்டி விட்டுள்ள மேற்படி ராஜபக்ஷ - ஜே.வி.பி. - ஹெல உறுமய அணியினரால் தமிழ் மக்களுக்கான நியாயமான உரிமையைப் பற்றி எடுத்துக் கூறுவதோ அன்றி ஒரு தீர்வைக்கான முயல்வதோ சாத்தியமற்றதாகும்.

தமிழ் மக்களின் உணர்வு

ராஜபக்ஷ தமிழரின் வாக்குகளைப் பெற்றவர் அல்லர் என்பதுடன் தமிழருக்கெதிரான கருத்துக்களின் அடிப்படையிலான சிங்கள வாக்குகளினால் மட்டுமே ஜனாதிபதியானார். அவரை இரண்டாகப் பிளவுபட்டிருக்கும் தீவின் சிங்கள ஜனாதிபதியாகவே தமிழ் மக்கள் கருதுகின்றார்கள். நடைமுறை அர்த்தத்தில் ராஜபக்ஷவும் அவரது இராணுவமும் சிங்கள உணர்வுகளைத் தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவே தவிர தமிழ் மக்களையல்ல என்ற உணர்வு பரந்தளவில் தமிழ் மக்களிடமுண்டு.

1947 ஆம் ஆண்டு இந்தியாவில் முஸ்லிம்களை இந்துக்கள் வெட்டிப் படுகொலை புரிந்தபோது காந்தி முஸ்லிம்களுக்கு ஆதரவாக இந்துக்களுக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தார். அதேபோல, இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்தபோது இந்திய அரசின் திறைசேரியிலிருந்து பிரிந்து செல்லும் பாகிஸ்தானுக்கென உரிய அளவிலான நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் பிரிந்த பின்பு பாகிஸ்தான் அப்பணத்தைக் கொண்டு யுத்த விமானங்களை வாங்கி இந்தியாவின் மீது குண்டு பொழியப் போகின்றது என்ற ஒரு வாதத்தை முன்வைத்து நேரு-பட்டேல் அரசாங்கம் பாகிஸ்தானுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கொடுக்க மறுத்தது.

ஆனால், அதை காந்தி மிக வன்மையாக எதிர்த்து பாகிஸ்தானுக்குரிய ஒப்புக் கொள்ளப்பட்ட நிதியைக் கையளிக்குமாறு கோரி நேரு-பட்டேல் அரசாங்கத்திற்கு எதிராகச் சாகும் வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். இறுதியில் அதில் காந்திவெற்றி பெற்றார்.

ஒரு தலைப்பட்சமாகக் கிழித்தெறியப்பட்ட ஆழிப்பேரலை நிவாரணக் கட்டமைப்பு

இப்படி, தமிழ்மக்களின் உரிமைக்காக எந்தவொரு சிங்களத் தலைவரும் மேற்படி முன்மாதிரியைப் பின்பற்றியதாய் இல்லை. ஆழிப்பேரலை நிவாரணப் பணிக்கான கட்டமைப்பை உருவாக்கப் புலிகளுடன் சந்திரிகா அரசு ஓர் எழுத்து ரீதியிலான உடன்பாட்டைச் செய்திருந்தது. ஆனால், அவ்வுடன்பாட்டை ராஜபக்ஷ அரசாங்கம் அனைத்து ஜனநாயக, சர்வதேச ஒப்பந்த வழிமுறைகளுக்கும் முரணாக ஒரு தலைப்பட்சமாய் கிழித்தெறிந்துவிட்டது. செய்து கொண்ட ஒப்பந்தத்தை இவ்வாறு கிழித்தெறிந்தமைக்கு எதிராக எந்தவொரு சிங்களத் தலைவர் தானும் நேரடிப் போராட்ட நடவடிக்கையிலும் ஈடுபட்டதில்லை. அதேவேளை, புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக ரணில் விக்கிரமசிங்காவின் கையிலிருந்த மூன்று முக்கிய அமைச்சுப் பதவிகளையும் ஜனாதிபதியாயிருந்த சந்திரிகா பறிமுதல் செய்தபோது, ரணில் அதற்காகத் தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பெயரால் சாத்வீக வழியிலான போராட்டத்தில் ஈடுபடத் தவறினார். இப்பின்னணியில் சிங்களத் தலைவர்கள் மீது தமிழ் மக்கள் நம்பிக்கையற்றவர்களாய் மாறியுள்ளதுடன், இலங்கைத் தீவு இரு அரசுகளைக் கொண்டது என்ற மன உறுதியைப் பெற்றுள்ளனர். களநிலை யதார்த்தம் இப்படியிருக்கையில் புலி எதிர்ப்பு அரசியலைத் தான் சிங்களத் தலைவர்களும் சிங்கள புத்திஜீவிகளும் பேசுகின்றனரே தவிர தமிழ் மக்களின் உரிமைகளைப் பற்றியல்ல. சிங்கள ஆட்சியாளர் பேசும் புலி எதிர்ப்பின் உள்ளடக்கம் என்பது தமிழின எதிர்ப்பேயாகும். புலிகளின் [illegible] சொல்ஹெய்மின் வருகையைப் பரிசீலிக்க வேண்டும்.

கொழும்பின் கண்களைத் திறக்க வைக்க புதுடில்லி, வாஷிங்ரன் என்பவற்றால் தான் முதலில் முடியும். அப்படி அவர்களது கூட்டு வாய்மொழி சாத்தியமற்றுப் போனால் துப்பாக்கிகளின் மொழிதான் காதைத் துளைக்கும் நிலை தோன்றும்.

சந்திப்புகள் புலப்படுத்தும் செய்திதான் என்ன?

சொல்ஹெய்ம் - ராஜபக்ஷ, சொல்ஹெய்ம் - பிரபாகரன் சந்திப்புக்கள் என்பன இலங்கையின் இன்றைய நெருக்கடி நிறைந்த நிலையில் மிகவும் ஆர்வமாகப் பார்க்கப்படும் விடயங்களாகும். சொல்ஹெய்ம் - பிரபாகரன் என்போருக்கிடையான சந்திப்புக்கு ஏற்பாடு இருப்பதானது புலிகள் சொல்ஹெய்மின் வார்த்தைகளை மதிப்புடன் பரிசீலிக்கத் தயாராக உள்ளனர் என்ற செய்தியை புலப்படுத்தவல்ல ஒரு விடயமாகும்.

அதேவேளை, புலிகளிடம் ஒரு முக்கிய தலைமைத்துவ இயல்பு உண்டு. அதாவது நெருக்கடிகள், அழுத்தங்கள், திணிப்புகள் என்பன புலிகள் மீது ஏற்படுத்தப்படுமிடத்து கடந்த கால தியாகங்களின் பெயரால் அவர்கள் வாழ்வா சாவா என்ற நிலையில் எத்தகைய முடிவையும் எடுக்க வல்ல திராணியுள்ளனர். அடிமைகளாக அழிவதை விடவும் போராடி கௌரவமாக சாவதே மேல் என்ற கருத்தோட்டம் புலிகளிடம் எப்போதும் உண்டு. அதேவேளை, தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடிப்படையும் இதற்கு பொருத்தமானதாய் உள்ளது. தன்னை ஒறுத்து வாழல், விரதம் இருத்தல், தின்னாமல் உண்ணாமல் சீதனத்திற்காகத் தம் நிகழ்கால வாழ்வை அர்ப்பணித்தல் போன்ற கலாசார பண்பிற்கூடாக தமிழ் மக்கள் எத்தகைய நெருக்கடிக்கும் முகம் கொடுக்கும் மன உணர்வை கொண்டவர்

மு.திருநாவுக்கரசு
அரசியல் ஆய்வாளர்

கள். இத்தகைய சமூகப் பின்னணி புலிகளின் மிக இறுக்கமான கொள்கைப் பிடிப்பிற்கு சேவை செய்யவல்லது.

வெளிநாடுகள் ஏதாவது தமது அரசியல் பொருளாதார நலன்களின் அடிப்படையில் நின்றுகொண்டு தமிழ் மக்களின் நியாயமான உரிமைக்கு எதிராக நடப்பதாக புலிகள் கருதுமிடத்து அவர்கள் எத்தகைய விளைவையும் எதிர்நோக்கி இறுக்கமான தீர்மானங்களை எடுக்கும் இயல்புள்ளவர்கள்.

ராஜபக்ஷ எதிர்கொள்ளும் முதலாவது தமிழ்த் தலைவர் பிரபாகரன். ஆனால் பிரபாகரன் எதிர்கொள்ளும் ஏழாவது சிங்களத் தலைவரே ராஜபக்ஷ. அதேவேளை, தலைவர் பிரபாகரனும், அரசியல் ஆலோசகர் பாலசிங்கமும் கால் நூற்றாண்டுக்கு மேற்பட்ட நீண்ட அனுபவத் தொடர்ச்சியுடன் ஒன்றாக சிந்தித்துப் பழகிப் போயிருப்பவர்கள். ஆனால் ஜனாதிபதி ராஜபக்ஷவோ, குடும்ப ஆதிக்கத்தின் நோக்க நிலையில் நின்று பண்டார நாயக்க குடும்பத்தால் தீர்மானம் எடுக்கும் வலயத்திற்குள் அனுமதிக்கப்படாது நீண்ட காலவெளி விளிம்பில் வைக்கப்பட்டிருந்தவர். ராஜபக்ஷவின் அரசியல் வாழ்வு மிகவும் நீண்டதாயினும் அவரது அரச ரீதியான தீர்மானம் எடுக்கும் அனுபவம் மிகச் சிறியது. யதார்த்தத்திற்கு மிகவும் தூரத்திலிருக்கும் ராஜபக்ஷ முதிர்ச்சியான தீர்மானங்களை எடுக்கத் தயார் இல்லையென்றால் நிலைமைகள் மேலும் சீர்கேடடையவே முடியும். ஆனால், இந்த இடத்தில் நிலைமைகளை இட்டு நிரப்பவல்ல சக்தி சர்வதேச சமூகம் தான்.

சர்வதேச சமூகம் ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு இராணுவரீதியில் பச்சைக் கொடி காட்ட மறுத்தால் மட்டுமே போதும் ராஜபக்ஷ அரசாங்கம் யதார்த்தத்தில் கால் வைப்பதற்கு.

✱

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் பின்பற்றும் முயற்சிகளை மட்டுமே இப்போதைக்கு செய்யமுடியும்

சர்வதேச சமூகம் இராணுவ ரீதியில் பச்சைக்கொடி காட்ட மறுத்தாலே அரசு யதார்த்தத்தில் கால் வைக்கும்

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் பின்பற்றும் முயற்சிகளை மட்டுமே செய்யமுடியும்

தீர்வை எட்ட ராஜபக்ஷ அரசாங்கத்தால் ஒருபோதும் முடியாது. ஆனால், சொல்ஹெய்ம் கூறியுள்ளது போல,யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பின்பற்றக் கூடிய முயற்சிகளைத் தான் மேற்கொள்ளலாம். அதுவும் ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு வெளிநாடுகள் இராணுவ ரீதியில் உதவாத பட்சத்தில் தான் சாத்தியப்படமுடியும்.

யதார்த்தத்தின்படி விடுதலைப் புலிகள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அவர்கள் ஏறுநிலை வளர்ச்சியைத்தான் அடைந்திருக்கின்றார்கள். உள்நாட்டு இராணுவமோ அல்லது வெளிநாட்டு இராணுவமோ இதில் தோல்வியடைந்துள்ளன. அந்தளவிற்கு அரசு மேற்கொள்ளும் இராணுவத்திற்கு அப்பால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனையும் அரசியல் யதார்த்தமும் வேறு விதமாய் இருக்கின்றது.

இலங்கையில் ஏதோவொரு யுத்த நிறுத்தம் நிலவுகின்றது என்றால் அதில் சர்வதேசத்தின் கரம் கணிசமான பங்கை வகிக்கின்றது. இனியும் அப்படித்தான் அமைய முடியும். மேற்படி பின்னணியில் வைத்துத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

2000 km பாவித்த மோட்டார் சைக்கிள் (C.B Set) விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: 077 - 3126744, 077 6524974. (43849)

பஜாஜ் பல்சர் 180cc NPMA இலக்கம் (அலோவீல்) விற்பனைக்குண்டு. 4500 km மட்டும் ஓடியது. தொடர்பு: 0776365950. (45863)

கினிக்கோழி, பால் ஆடு குட்டியுடன் (ஒரு போத்தல்), முட்டை இடும் கோழிகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 9/1, பிளச்சர் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. No. 0776403259 (45775)

கோழி எரு விற்பனைக்குண்டு. தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (45873)

காணி விற்பனைக்கு

சரசாலை தெற்கு, கனகம்புளியடிச் சந்தி-சுன்னாகம் வீதியில் நன்னீர் கிணற்றுடன் கூடிய 20 பரப்புத் தென்னங்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கு உகந்தது. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: இ.கங்கா மௌலீசன், 'அன்பு வாசா,' அச்செழு மெதடிஸ்த மிசன் பாடசாலை முன்பாக, நீர்வேலி. (45423)

வயல்கள், வீடுவளவு விற்பனைக்கு

கைதடி வடக்கில் உள்ள நாவக்கியான் வயல் 14 பரப்பு, இந்தனை வயலும் புலமும் 10 பரப்பு, வில்லிபுலம் திக்கம்பிட்டி 31 பரப்பு, தம்பெழவு வயலும் புலமும் (கொட்டையடி) 27 பரப்பு, கூத்ததிடலீ வயலும் புலமும் (குண்டடி) 25 பரப்பு, கைதடி தெற்கு தெகின் காடு வீடு கட்டக்கூடிய நிலம் 5 பரப்பு, A-9 வீதியில் அமைந்துள்ள (நாவற்குழி) வீடு வளவு 15 பரப்பு ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: இலங்கையர் கணேசன், இல.41/5, அரச வீதி, நல்லூர் . T.P. 0714 - 068807, 0777-144322. (45773)

பந்தல் விற்பனைக்கு

40' தகரப் பந்தல் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.K. துரைசிங்கம், 270, கனகரத்தினம் வீதி, நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணம். (45408)

இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (45386)

கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 23.01.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, கரன்- அரசடி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-47305)

வீடு வாடகைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலியில் சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பிற்கு: T.P.No.0776087896.(45804)

ICRC சந்திக்கு அண்மையில் யாழ். கோயில் வீதியில், சகல வசதிகளும் கொண்ட பெரிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 0773 221413, 0112386699. (சி-47053)

கார் வாடகைக்கு

திருமண வைபவங்களிற்கும் வேறு பாவனைகளிற்கும் கார் வாடகைக்கு உண்டு. தொடர்பிற்கு: 0773 126902, 0777-222180, 0777 - 283595. (45850)

Refresh System

புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை, மானிப்பாய். 077-6279671, 077-3253104.
(44848)(21.16.17)

கொங்கிறீற் கற்கள் விற்பனை

தரமான முறையில் கொங்கிறீற் கற்கள், தூண்கள் 100 அடி நீளம், 40 அடி அகலம் கொண்ட தொட்டிகளில் அறுக்கப்பட்டு பின்னர் நீரில் ஊறவிட்டு விற்பனை செய்யப்படுகிறது. 1 அடி நீளம் 4'' அகலக் கல்லின் விலை ரூபா 26-மட்டும். நேரடியாகப் பார்வையிட்டுப் பெற்றுச் செல்லவும்.

இடம்:- VNC
கும்பளாவளைப் பிள்ளையார் கோயில் அருகில்
அளவெட்டி மத்தி, அளவெட்டி
(45425) (26-16-19)

மணமகன் தேவை

நல்லூர் இந்து கௌரவ குடும்பம் 1966, சதயம், கும்பராசி, 2இல் செவ்வாய் 47½ கிரகபாவம், G.C.E O/L படித்த வீட்டுப் பணியில் உள்ள மணமகளுக்கு மணமகன் தேவை. சுயதொழில், வியாபாரம் மற்றும் தாரம் இழந்தவர்,விவாகரத்தான பிள்ளைகள் இல்லாத மணமகனும் விரும்பத்தக்கது. தொடர்பு: 'சிவாலயா' இல.11, யமுனா வீதி, நல்லூர். T.P. No. 0776528641. (45775)

மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 30 அகவை உடைய இசை உபகரணங்களை உற்பத்தி செய்தலும், கணனிவேலை, திரை அச்சுக்கலை வேலைகள் போன்றவற்றை மேற்கொள்ளும் நிறுவனம் ஒன்றின் தொழில் அதிபரும் மென்மையான குணபாவனை உடைய மணமகனுக்கு மணமகள் தேவை (இசை, கணனி, ஆங்கில ஆசிரியர்கள் விரும்பத்தக்கது) தொடர்பு: விளம்பர இல. 2785 மே/பா உதயன், E.mail Rajan 0770 @ yahoo.com. (45441)

1964 ஆம் ஆண்டு புனர்பூசம் 2ஆம் பாதம் 5 இல் செவ்வாய், யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளருக்கு மணமகள் தேவை. தொடர்பு: பூணாவளை தோட்டம், கரணவாய், கரவெட்டி. T.P 021-226 3846. (45441)

இந்து கௌரவ குடும்பம், பிரித்தானிய குடியுரிமையுடைய 1969 உத்தராடம் மகர ராசி 28 கிரகபாவம் 5'10'' உயரம் வர்த்தக முகாமைத்துவ பட்டதாரி மணமகனுக்கு 1976 இற்கு மேல் பட்டதாரி அழகான மணப்பெண் தேவை. தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம் இல.11, யமுனா வீதி, நல்லூர். E.mail sk.Shivagaran @ yahoo.com T.P. 0776528641. (சி.45852)

திருமண சேவை

வீட்டைக் கட்டிப்பார் கல்யாணத்தைக் கட்டிப்பார் என்பது பழமொழி. வேல் அமுதனின் கடிதக் கோப்புகளுள் தேடிப்பார் என்பது புதுமொழி. நேற்றுவரை சிரமம் நிறைந்ததாக இருந்த வாழ்க்கைத் துணைதேடல் இன்று வேல்அமுதனின் சுயதெரிவு முறையால் இலகுபடுத்தப்பட்டுள்ளது. மேலதிக விவரம் பெற இன்றே சுயதெரிவு முறை முன்னோடி, திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் வேல் அமுதனுடன் திங்கள், புதன், வெள்ளி நாள்களில் மாலை 4.30இற்கு மேல் தொடர்பு கொள்க! தொலைபேசி 2360488, 4514396. (சி-47443)

தவறிவிட்டது

டச்வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வி லோகநாயகி நடராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (575700624X) சாவகச்சேரிக்கும் நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ந.முத்துலிங்கம், கென்ஸ்மன் ஒழுங்கை, சாவகச்சேரி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (சி-47461)

சதாநந்த கதிர்காமநாதன் அபிராம் என்பவரது தே.அ.அட்டை (872731970V) யாழ். இந்துக்கல்லூரிக்கும் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல.91, மணல்தரை ஒழுங்கை, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (45865)

206 - 1925 இலக்க முச்சக்கர வண்டியின் பதிவுப்புத்தகம், காப்புறுதிச் சான்றிதழ், வாகன வரிச் சான்றிதழ் என்பன யாழ்ப்பாணம் நாகவிகாரைக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து S. தங்கராசா, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (45867)

இரவீந்திரசர்மா ஜனார்த்தன் என்பவருடைய தே.அ.அ. (851961534V) தவறியதற்கான பொலீஸ் அறிக்கை (லெமனற்ரிங்), புதிய அடையாள அட்டை விண்ணப்பதுண்டு. (படம் ஒட்டியது) என்பன திருநெல்வேலிக்கு அண்மித்த பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.3,முருகன் தெரு, (முதல் குறுக்குத்தெரு) பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P. No. 0777046643 (ஏதாவது ஒன்றைக் கண்டெடுத்தாலும் ஒப்படைக்கவும்). (45871)

ஓடருக்கு

மங்கள வைபவங்களுக்குத் தேவையான மதிய உணவு (சோறு), மரக்கறி புரியாணி, இட்லி, இடியப்பம், பயிற்றம் உருண்டை, அரியதரம், சிற்பி, முறுக்கு, பருத்தித்துறைவடை, வடை, ரிச்கேக், Box cake ஆகியவற்றை முன் கூட்டிய ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம். மற்றும் ரெஜிவோம் கேக் வகைகளும் அலங்கரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு:
வேல் மிக்சர்
(VEL MIXTURE)
இல.57, K.K.S.வீதி.(கொக்குவில் சந்திக்கு அருகில்)
(45869) T.P.: 077670146

வலுக்குறைந்த மின்சாரம் என முறைப்பாடு

வடலியடைப்பு கலைவாணி வீதிப் பகுதிக்கு இரவு வேளையில் வலுக் குறைந்த மின்சாரம் கிடைப்பதாகவும்-

இதனால் மின் குமிழ்கள் மிகவும் குறைந்த ஒளியில் ஒளிர்வதாகவும் - அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வலுக்குறைந்த அளவில் கிடைக்கும் மின்சாரம் காரணமாக இப்பகுதி மாணவர்கள் இரவு வேளைகளில் கல்விகற்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடலியடைப்பு பல்லசுட்டி பகுதியில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்று வருவதாகவும் -

இதனால் இப்பகுதிகளிலும் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருவதாகவும்- தெரிவிக்கப்படுகின்றது.

(எ-135)

33ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 09 - 01 - 1924



மறைவு 21 - 12 - 2005

அமரர் **சீனிவாசகம் பரமேஸ்வரன்**

(ஓய்வுபெற்ற பொது சுகாதாரப் பரிசோதக மேற்பார்வையாளர்)
[S.P.H.I]

21-12-2005 புதன்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி, தந்தி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அயலவர்கள், நண்பர்கள், உறவினர்கள், கண்ணீர் அஞ்சலி வழங்கியவர்களுக்கும் உதவிகள் பல புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று (22-01-2006) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இளவேனில்,
இராசவீதி, நவக்கிரி,
புத்தூர்.

(45870)(26-11-17)

Sri Lanka Red Cross Society (SLRCS)
Working in conjunction with the Australian Red Cross (ARC)
JOB VACANCY - ARC/SLRCS FIELD OFFICERS (2) KILINOCHCHI

The Australian Red Cross in cooperation with the Sri Lanka Red Cross Society is implementing a housing reconstruction project in Vadamarachy East, Jaffna District.

Australian Red Cross is seeking people with the appropriate skills and experience for the position of Field Officer for its Program Coordination Office based in Kilinochchi. This Field Officers will be required to live and travel within the Kilinochchi District and un - cleared area of Jaffna District.

Qualifications:

- Formal post-secondary qualifications in engineering, architecture or other construction related discipline. Alternatively trade qualifications and experience equivalent.
- At least 3 years work experience in a similar position.

Competencies:

- Knowledge of construction industry practices.
- Demonstrated discussion / negotiation skills, a strong grasp of concepts of community participation in decision - making, and an ability to work independently.
- Good working ability (written, oral and aural) with the Tamil and English languages.
- An ability to work with and for a team of professionals, of both foreign and local origin.
- Ability to ride a motorcycle and holder of a current motorcycle licence essential. Car licence an advantage.

Responsibilities

- Acting as the primary contact between the ARC Construction Delegate responsible for the housing program and beneficiary communities.
- Representing ARC to authorities with jurisdiction in the project area.
- Holding regular meetings with community representatives in order to gauge their opinion and wishes.
- Ensuring that the communities' viewpoints are clearly articulated in the process of house and infrastructure design.
- Prepare and implement community surveys, and analyse the data collected.
- To contribute to project management and work with varied stakeholders that include architects, engineers, project managers, and local authorities.

Application including Curriculam Vitae:

Should be submitted to the Director of the Srilanka Red Cross Society in Jaffna (73 Kandy Road) or Kilinochchi (Railway Station Road). Full details of educational background, work experience and referees must be provided.

Application deadline: 28 January 2006 (C/47455)(21.45.34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் நாளை தொடர்கிறது அரசியல் நகர்வுகள்

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கை நெருக்கடிக்குள்ளாகி, யுத்த மேகம் சூழ்ந்துள்ள நிலையில் –

சுமுக நிலையை – யுத்தமற்ற நிலையை – தோற்றுவிப்பதற்காக அனுசரணையாளர்களான நோர்வே சமாதானக் குழுவினர் நாளைய தினம் இலங்கை வருகின்றனர்.

அந்த நாட்டின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் சமாதானக் குழுவின் தலைவருமான எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினரே வருகின்றனர்.

இலங்கை விவகாரத்தில் நன்கு பரீட்சகமானவரான அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள முன்பே, இங்குள்ள களநிலைவரங்களை மதிப்பிட்டுக் கருத்து ஒன்றை வெளியிட்டுள்ளார்.

''இலங்கை விஜயத்தின் போது சிறியளவிலான முன் நகர்வு ஏற்பட்டாலேயே பாரிய திருப்தியைக் கொடுக்கும்'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

தெற்குத் தலைமைகளின் விடாப்பிடியான நிலைப்பாடு, படைத்தரப்பின் அச்சுறுத்தும் செயற்பாடுகள் ஆகியவற்றை உற்று அவதானித்து அவர் வெளியிடும் இந்தக் கருத்து சமாதான முயற்சிகள் அடுத்து கட்டத்துக்கு நகருமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

சொல்ஹெய்ம் தனது விஜயத்தின் போது சிங்களத்தரப்பின் தலைவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும்

வேண்டிய நிலையையே உருவாக்கியுள்ளது.

பத்திரிகை ஆசிரியர்களுடன் ஜனாதிபதி நடத்திய சந்திப்பில்...

தெற்கில் இருந்து வெளிவரும் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை ஜனாதிபதி அன்று சந்தித்துள்ளார்.

''நோர்வேயில் பேச்சு நடத்த நாம் விரும்பவில்லை. ஆசிய நாட்டில்தான் பேச்சு நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை'' என்று அவர் களிடம் ஜனாதிபதி கூறியுள்ளார்.

''நோர்வேயில் பேச்சு நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு நாங்கள் இணங்கவேண்டும் என்பதற்காகவே எம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்

அரசுக்குப் பாடம் புகட்டினர் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

தமிழ்த்தரப்பின் தலைவரான தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் சந்திக்கப் போகின்றார்.

தற்சமயம் அவசர தேவையாகவுள்ள, அரசு – விடுதலைப் புலிகளுக்கு இடையிலான நேரடிப் பேச்சுத் தொடர்பான விடயத்துக்கு இறுதி வடிவம் கொடுக்கும் பணியை முன்னெடுத்தே அவர் பேச்சுகளை நடத்தவுள்ளார்.

பேச்சு நடக்குமாயின் அது எங்கே?

நேரடிப் பேச்சை எங்கு நடத்துவது, பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதற்கான புறச்சூழலை ஏற்படுத்துவது ஆகிய விடயங்களே இந்தப் பேச்சுகளில் முக்கிய இடம்பிடிக்கப்போகின்றன.

முதலாம் கட்டப் பேச்சை நோர்வேயில் நடத்த வேண்டும் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்தி உள்ளனர். அனுசரணையாளராக நோர்வேயே இருப்பதால், அங்கேயே புதிய அரசுடனான முதற்கட்டப் பேச்சை நடத்துவது உகந்தது என விடுதலைப் புலிகளின் தலைமை கூறியுள்ளது.

ஆசிய நாடு ஒன்றில்தான் இந்தப் பேச்சுகளை நடத்த வேண்டும் என்று அரசுத் தரப்பு உத்தியோகபூர்வமாகக் கூறியுள்ளது. ஐரோப்பிய நாடு ஒன்றில் இந்தப் பேச்சை வைக்கலாம் என்று உத்தியோகப் பற்றற்ற முறையில் கருத்துகளை அரசுத் தரப்பு கசியவிட்டுள்ள போதிலும், ஆசிய நாட்டில் பேச்சு நடத்த வேண்டுமென்பதில் உறுதியாக நிற்கின்றது.

கடந்த வியாழக்கிழமை சர்வகட்சிகளின் கூட்டம் ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையில் நடத்தினார்.

பேச்சுகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று வலியுறுத்திய அரசியல் கட்சிகள், பேச்சு இடம்பெறும் இடத்தைத் தெரிவுசெய்யும் பொறுப்பை ஜனாதிபதியிடம் விட்டுள்ளன.

இலங்கை வரும் சொல்ஹெய்ம் மூலம் இந்தப் பேச்சுகளை நோர்வேயில் நடத்த ஜனாதிபதி அறிவிப்பு விடுவார் எனப் பல் வேறு தரப்புக்களிலும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், வெள்ளியன்று அவர் வெளியிட்ட கருத்து, அரசின் பக்கத்தில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை என்று கருத

களை நடத்திவருகின்றனர். அதற்காக நாங்கள் இறங்கிப்போய் எமது நிலைப்பாட்டை மாற்றமுடியாது'' – என்றும் அவர் பத்திரிகை ஆசிரியர்களுக்கு கூறியுள்ளார்.

சர்வகட்சிமாநாடு கொடுத்த ஆணையை – பொறுப்பை – ஜனாதிபதி எந்த வகையில் பயன்படுத்தப் போகின்றார் என்பதனை எதிர்வுகூறுவதாக அவரின் இந்தக் கருத்து அமைந்துள்ளது.

சொல்ஹெய்ம் வருகையுடன் அரசு – விடுதலைப் புலிகளின் நேரடிப் பேச்சுக்கான சூழல் உருவாகும் என தமிழ் மக்களாலும், சர்வதேச சமூகத்தாலும் தெற்கில் சமாதானத்தில் நாட்டம் கொண்டதரப்புகளாலும் எதிர்பார்க்கப்பட்டமை புஷ்வாணமாகப் போகும் போலவே தெரிகின்றது.

நாடு யுத்தத்தில் மூழ்குவதைத் தவிர்க்கும் வகையிலான காய்நகர்த்தலைத் தெற்குத்தலைமை செய்யாது விட்டால், நாட்டின் எதிர்காலம் இருள்மயமாவது தவிர்க்கமுடியாத ஒன்றாகவே அமையும்.

நோர்வேயில் முதற்கட்டப் பேச்சுகளை நடத்தி, அதன் மூலம் நெருக்கடி நிலையில் உள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்த ஏதுவாக உருப்படியான செயற்பாட்டை தெற்குத் தலைமை அவசரமாக மேற்கொள்ள வேண்டிய அவசர காலகட்டம் இது. இந்த நிலையை அரசு உணர்ந்து செயற்படுமா என்பதை அடுத்து வரும் நாள்களில் அறியலாம்.

போருக்கு அறைகூவல் விடுக்கிறது ஜே.வி.பி.

பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய ஆகியவற்றின் கருத்துகளுக்கு மசிந்துகொடுத்து அரசாங்கம் செயற்பட முனையுமானால் நிலைமை மோசமடையும் என்பது மட்டும் உண்மை.

''ஜனாதிபதித் தேர்தலின் பின் நாடு எதிர்நோக்கும் சவால்'' என்ற தொனிப்பொருளில் ஜே.வி.பியினர் கருத்தரங்குகளைச் சிங்கள மக்களுக்கு நடத்திவருகின்றனர். அக்கருத்தரங்கில் [illegible] படும் கருத்துகள் யுத்தத்துக்கான அறை[illegible]

எதிர்நோக்கி நிற்கின்றது.

இன்றுள்ள நெருக்கடியான நிலையால் மக்கள் கட்டடவேலைகளை நிறுத்தியுள்ளதாலும் பாரிய திட்டங்களைத் தொண்டு நிறுவனங்கள் நிறுத்தியதாலும் கட்டடப் பொருள் வியாபாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கட்டடத் தொழில்சார் உழைப்பாளிகளும் வேலையிழந்துள்ளனர்.

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது, குடாநாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகள் சீர்குலைந்துபோய்விட்டன.

நாடாளுமன்றத்தில் தமிழ் எம்.பிக்கள் நடத்திய போராட்டம்

குடாநாட்டின் நிலைமையை, தமிழர் தாயகத்தின் ஏனைய பிரதேசங்களின் நிலைமையைச் சீராக்கவேண்டும் என்று கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஏனைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து சபையில் பெரும் போராட்டங்களை நடத்தினர். இதன் காரணமாக நாடாளுமன்ற அமர்வுகள் முடக்கப்பட்டுள்ளன.

நிதி தொடர்பான விடயங்கள், பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள் உட்பட முக்கிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும். நாடாளுமன்றம் முடக்கப்பட்டால் அரசநிர்வாகமே முடங்கும்.

நாடாளுமன்றச் செயற்பாடுகளை முடக்குவதன் மூலம், தமிழ்மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு புரிந்துவரும் செயற்பாட்டைச் சர்வதேசத்துக்குத் தெரியப்படுத்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போராட்டத்தை நடத்தியுள்ளனர் எனலாம். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்தப் போராட்டத்தின் மூலம் பெரும் நெருக்கடி ஒன்றை அரசுத் தலைமை எதிர்நோக்கியிருக்கின்றது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி, ஐ.தே.கவின் ஒரேயொரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் இணைந்து தமிழர் பலத்தைத் தெற்குத்

போர் முரசு அறைகிறது ஜே.வி.பி.

குடநாட்டில் கொலைகள், கைதுக்ள், தேடுதல்கள் தீவிரமாகியுள்ளன. மக்களின் இயல்புவாழ்வுசீர்கெட்டுப்போயிருக்கின்றது.

இவ்வாரம் மானிப்பாயில் வீடு ஒன்றுக்குள் புகுந்து ஆயுததாரிகள் நடத்திய தாக்குல் குடாநாட்டு மக்களை பீதியில் உறைந்துவிடச் செய்துள்ளது. வெள்ளைவானில் வந்து ஆள்கள் கடத்தப்படுதல் அதிகரித்துள்ளது.

ஊரடங்கு இல்லாத போதிலும் தானாகவே அடங்கும் ஊர்

ஊரடங்கு உத்தரவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாதபோதும், இரவில் ஊர் தானாகவே அடங்கிப் போகும் நிலையே காணப்படுகின்றது.

இதன் காரணமாகக் குடாநாட்டில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதுகாப்பான பிரதேசங்களை நோக்கி நகரத் தொடங்கிவிட்டன.

கடற்றொழில் செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், அத்தொழிலை நம்பி வாழ்ந்த குடும்பங்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்துள்ளன. அங்கு அவர்கள் மீளத் தொழிலை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

தற்போதைய அசாதாரண நிலை காரணமாக விவசாய நிலங்களுக்கு அதிகாலையில் சென்று விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், விளைந்த பொருள்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்லவும் விவசாயிகள் அச்சம் கொண்டுள்ளனர்.

வர்த்தக நிறுவனங்களை மாலையில் [illegible] வேண்டிய சூழ்நிலை [illegible] முறையும் பெரும் பாதிப்பை

தலைமைக்குக் காட்டியுள்ளனர்.

தமிழ்மக்கள் நினைத்தால் நாடாளுமன்றத்தை முடக்கமுடியும் அதன் மூலம் அரச நிர்வாகத்தை முடக்க முடியும் என்பதை இந்தப் போராட்டம் மூலம் தெற்குத் தலை மைக்குப் பாடம் புகட்டியுள்ளனர்.

நாடாளுமன்றத்தை இயக்க முடியாமல், 15 நாள்களுக்கு இடைநிறுத்த வேண்டிய நிலையை தெற்குத் தலைமைக்கு மேற்படி போராட்டம் உருவாக்கியுள்ளது.

மீண்டும் நாடாளுமன்றம் கூடும் போதும் தமிழர் தரப்பினர் தமது போராட்டத்தை முன்னெடுக்கப் போகிறார்கள். அந்த நிலையைத் தவிர்க்க வேண்டுமானால், தமிழர் தாயகப் பகுதியில் சுமுகநிலையை

வாராந்த அரசியல் அலசல்
குகா

உருவாக்க அரசு முனைப்புடன் செயற்படவேண்டும்.

அந்த நிலையை உருவாக்க அரசு முனையாவிடின் நாடாளுமன்றம் என்ன; முழு நாட்டின் இயக்கமும் முடங்கும் நிலையே உருவாகும்.

அத்தகைய நிலையை நோக்கி நாட்டைக்கொண்டு செல்லாமல், அதனைச் சீரான பாதையில் கொண்டு செல்வதற்கான காய் நகர்த்தல்கள் ஜனாதிபதியிடம் இருந்து வரவேண்டும்.

நாட்டின் எதிர்காலத்தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் நகர்வுகள் அடுத்த வாரங்களில் இடம்பெறப்போகின்றன.

அவற்றின் விளைவுகள் எப்படியாகும் என்பதனைப் பொறுத்திருந்து பார்க்கலாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச ஊடகங்களின் விஷமப் பிரசாரத்திற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கண்டனம்

வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணியாற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நற்பெயரைப் கெடுக்கும் நோக்குடன் இலங்கை அரசுக்குச் சார்பானதும், தமிழர் விரோதப் போக்குடைய சில ஊடகங்கள் பொய்யானதும், முற்றிலும் புனையப்பட்டதுமான தகவல்களை வெளியிடுவதை வன்மையாகக் கண்டிப்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கொழும்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் விஷமப் பிரசாரத்தின் மூலம் வடக்கு-கிழக்கில் சிறப்பாக செயற்படும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பெயரைக்கெடுக்கும் முயற்சிகளை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் இந்த விடயத்தில் தாம் சட்ட ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்த அறிக்கையில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவிலும் இலங்கையிலும் பதிவு செய்யப்பட்ட தொண்டர் நிறுவனமாக தாம் செயல்படுவதையும், வடக்கு -கிழக்கில் தாம் செயற்படும் திறனை இலங்கை வந்த தலைவர்கள் கிளின்டன், கொபி அனான் உட்பட்ட பல பிரமுகர்களும், வெளிநாட்டு அரச அமைப்புகளும், அங்கீகரித்ததையும், முன்னாள் அரச தலைவர் சந்திரிகா கூட தமக்கு விருது வழங்கிப் பாராட்டியதையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

Management Trainees

பிரபல தனியார் நிறுவனமொன்றுக்கு இலக்கினை அடையக்கூடிய ஆய்வுத்திறன் கொண்ட முகாமைத்துவப் பயிலுநர்கள் தேவை. 30 வயதுக்கு உட்பட்ட ஆங்கிலத்தில் தேர்ச்சியுடைய B.Com/B.B.A பட்டதாரிகள் விரும்பத்தக்கது சுய விவரக்கோவை மற்றும் தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும்

Penpals Limited
545, Sri Sanagaraja Mawatha, Col-10
Fax:0112448211

Study in UK, Cyprus Malaysia, Singapoor

(O/L) 3C, 3S தகமையுடன்

All College Applications free of charge

Free Consulting

Canada, Australia போன்ற நாடுகளில் குடியுரிமை பெறுவதற்கான இலகுவான வழிவகைகள் செய்து தரப்படும்.

Tel: 0773175767

Diploma & Undergraduate Courses...

- Architecture, Art, Fasion Design & Music
- Business Management, Accounting & Finance
- Law, Law with Business
- Engineering Design - Aerospace, Automotive, Mechanical
- Biological, Chemical & Pharmaceutical Science
- Computer Information Systems Design
- Information Systems, Electronic Commerce.
- Software Engineering, Computer Science
- Arts, Social Science and Humanities - Psychology
- Foundation Degree in Aircraft Engineering
- Engineering Systems Management
- Education - Primary Teaching
- Mechanical Engineering
- Information Technology

தற்போது 2006 January, February பதிவுகள் இடம்பெறுகின்றன.

SKY LINE TRAVELS & SERVICES

PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSULTANTS

No. 7-1/2, W.A.De Silva Mawatha, (Facing Galle Road) Colombo 06. Sri Lanka.

Mobile: 0773175767

MECHANICAL ENGINEER

VACANCY exists for Mechanical Engineer with a Degree/Diploma in Mechanical Engineering with 5 years post qualification experience in Mechanical Engineering workshop with at least 2 years in the management capacity.

We are looking for proactive self motivated person with pleasent qualities.

The selected candidate will be offered an attractive package.

Please forward your application within 2 weeks to:

The Managing Director
Promoters Engineering Co.Ltd.
844, Point Pedro Road
Nallur, Jaffna.

(C/47447)

விருந்தாவன் கல்லூரி

பெங்களூர் பல்கலைக்கழகங்களுடன் இணைந்தது

அல்லது

ஏ/எல் முடிவை எதிர்பார்ப்போர் — ஏ/எல் சித்திபெற்றோர்

பி.எஸ்.சி — பி.பி.எம்

பி.சி.ஏ

ஏடெக்ஸ் 2006 கண்காட்சி அறைக்கு வருக!

20-22 திகதிகளில் பி.எம்.ஐ.சி.எஃ் கொழும்பு

24 மற்றும் 25 ஆம் திகதிகளில் குயீன்ஸ் ஹோட்டல், கண்டி.

எஸ்.பியின் எம்.பி.பதவி பறிபோனதாக அறிவித்தல்

கொழும்பு, ஜன.22

ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸநாயக்க நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி தொடர்ச்சியாக மூன்றுமாத காலம் நாடாளுமன்றக் கூட்டத்தொடர்களுக்குச் சமூகமளிக்காத காரணத்தினால் அரசமைப்பின் 66 (ஈ) பிரிவின் கீழ் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி காலியாகியிருப்பதாக நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் திருமதி ப்ரியாணி விஜேசேகர தேர்தல் ஆணையாளருக்கு எழுத்துமூலம் அறிவித்திருக்கிறார்.

இதன்படி, இது விடயத்தில் உரிய நடவடிக்கையை எடுக்குமாறும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தேர்தல் ஆணையாளரைக் கோரியிருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

எஸ்.பி.திஸநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி குறித்து ஜே.வி.பி. பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸகட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எழுப்பிய சர்ச்சையை அடுத்தே மேற்படி அறிவித்தல் தேர்தல் ஆணையாளருக்கு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

(க-7)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04-02-1925
மறைவு 02-02-2005

திருமதி தம்பிஜயா அன்னலட்சுமி

திதி: 22.01.2006

அன்பிற்கே அன்னையான நீங்கள்
ஆழ்ந்த தூக்கம் கொண்டதேன்?
இயற்கையின் நியதி இறைவனடி சேர்தல்
எம்முடன் நீங்கள் என்றும் வாழ்வீர்கள்!

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

துர்க்காபுரம்,
மல்லாகம்.
(45837) (39)

மூன்றாம் ஆண்டு நினைவு நாள்

மண்ணக வாழ்வில் 05-01-1934
விண்ணக வாழ்வில் 22-01-2003

அமரர் **கார்த்திகேசு கந்தசாமி** (கமிலஸ்)

(முன்னாள் உப அதிபர், யா/இமையாணன் அ.த.க.வி.)

பாசத்தின் திரு உருவே
பாரை விட்டு நீங்கள் மறைந்து
ஆண்டுகள் மூன்று ஆகினாலும்
உங்கள் நினைவுகள் எங்களில் என்றும்
நிறைந்திருக்கும்.

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி, காரவெட்டி.
(45799) (39)

மனைவி, மக்கள்,
மருமக்கள்.

நீங்காத நினைவுகள்

3 ஆம் வருட நினைவஞ்சலி — 14 ஆம் வருட நினைவஞ்சலி

மலர்வு 1918-12-14
உதிர்வு 2003-01-25

அமரர்
A.R. சிவகுருநாதன்

மலர்வு 1924-08-09
உதிர்வு 1992-09-06

திருமதி
தவமணி சிவகுருநாதன்

உயிரினில் உறைந்துவிட்ட உங்களை நமது
இதயத்தின் ஒவ்வொரு துடிப்பிலும் உணர்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

102, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
(க.47426) (39)

உங்கள் நினைவில் வாழுகின்றோம்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பின்னுறுதித் தீர்வை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

உமாசுதன் பெண் அகல்யா,
கட்டப்பிராய், கல்வியங்காடு
வழக்காளி

எதிராக

வழ இல. நீக்கம்/ 520

சிதம்பரநடேசன் உமாசுதன்
17, Mc Gehan Close
Mt Albert, Auckland, New Zealand.
எதிராளி

இவ்வழக்கு 2005ஆம் ஆண்டு மார்கழி மாதம் 7ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி திரு.திருமதி லிங்கா துரைராஜா அவர்களும் பிரசன்னமாயிருக்க வழக்காளியின் பதிவுபெற்ற சட்டத்தரணியின் சமர்ப்பணத்தை வழக்கேட்டுடன் சேர்த்தும் பரிசீலித்து எதிராளிக்கு உதயன் தினசரிப்பத்திரிகை மூலம் பகிரங்க அறிவித்தல் பதில் சேவகம் செய்து இருப்பதையிட்டு மன்று திருப்திப்படுவதால் வழக்காளியின் பதிவுபெற்ற சட்டத்தரணியின் சமர்ப்பணத்தில் குறிப்பிட்ட காரணங்கள் எதிராளிக்கு பதில் சேவகம் செய்து திரும்பல் திகதியான 09.11.2005 எதிராளி மன்றுக்கு சமுகமளிக்காமையால் குடியியல் நடவடிக்கைக் கோவையின் பிரகாரம் இவ்வழக்கை ஒருமுக விளக்கத்திற்கு நிர்ணயித்து 09.11.2005 ஆம் திகதிய தினக் குறிப்பில் காணப்படும் கூற்றுகளை இரத்துச் செய்து இட்ட கட்டளைக்கு அமைய வழக்காளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜா அவர்கள் வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த மன்றின் அனுமதியைக்கோரி மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் வழக்காளியின் பிராது வ1 ஆவணம் மற்றும் இவ்வழக்கில் இணைக்கப்பட்ட சத்தியக்கூற்று வழக்காளி இன்று மன்றுக்கு அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்துப் பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணத்தைப் பெற தகுதியுடையவர் எனக்கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 2003ஆம் ஆண்டு மார்கழி மாதம் 8ஆம் திகதி நிறைவேறிய பதிவுத்திருமணத்தை எதிராளி வேண்டுமென்றே வழக்காளிகளை விட்டு என்ம உறவறுப்புச் செய்த குற்றத்திற்காக இத்தால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாக்கி கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் பதில் சேவகம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதகாலத்துக்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் குறித்த பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

2005ஆம் ஆண்டு மார்கழி மாதம் 7ஆம் திகதி

2006 தை 17

இ.த. விக்னராஜா
மாவட்ட நீதிபதி

நீதிமன்றக் கட்டளைப்படி துரைராஜா
பதிவுபெற்ற சட்டத்தரணி
(45846)

நீதிமன்றக் கட்டளைப்படி து. சிறிமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய - பாகிஸ்தான் இடையிலான முதலாவது டெஸ்ட்: ஓட்டங்களைக் குவிக்க களம் சமைத்தது லாகூர் மைதானம்

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் லாகூரில் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தாலும், இதில் அணி மற்றும் தனியாள் என்ற வகையில் பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

இரு அணிகளுக்கும் ஓட்டங்களைக் குவிக்கும் களமாக மாறியிருந்தது லாகூர் மைதானம். இதில் ஆரம்பத் துடுப்பாட்டத்தில் இணைப்பாட்டமான 413 ஓட்டங்கள் என்ற உலக சாதனை இந்திய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களால் முறியடிக்கப்படும் என்று கிரிக்கெட் ஆர்வலர்கள் பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. அந்தோபரிதாபம் 410 வரை நின்று நிலைத்து விளையாடி பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களின் பந்துகளை நொருக்கிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களால் வெறும் 4 ஓட்டங்களால் கோட்டைவிடப்பட்டது.

இருந்தாலும், இந்த டெஸ்ட் சாதனைக்கென்றே விளையாடப்பட்டது. இங்கு நிகழ்த்தப்பட்ட சாதனைகள் சில வருமாறு:-

✱முதல் விக்கெட்டுக்காக எடுக்கப்பட்ட அதிகபட்ச ஓட்டம் என்ற சாதனையை ராகுல் - ஷேவாக் ஜோடி பாகிஸ்தானில் முறியடித்தது. 1997 - 1998ஆம் ஆண்டு கராச்சியில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக பாகிஸ்தான் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான அமீர் சொகைல் - இயாஸ் அகமது இருவரும் சேர்ந்து 298 ஓட்டங்களைக் குவித்ததே உலக சாதனையாக இருந்து வந்தது. ஆனால், இந்திய அணியின் ஆரம்ப ஜோடி 410 ஓட்டங்களைக் குவித்து புதிய சாதனையை நிலைநாட்டியது.

✱பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியாவின் அதிக பட்ச ஆரம்பத் துடுப்பாட்டச் சாதனை. 1986 - 1987 இல் சென்னை டெஸ்டில் சுனில் கவாஸ்கர், கிருஷ்ணமாச்சாரி, ஸ்ரீகாந்த் ஜோடி முதல் விக்கெட்டுக்காக 200 ஓட்டங்கள் எடுத்ததே முந்தைய சாதனை.

✱லாகூரில் ஆரம்பத் துடுப்பாட்டத்தில் எடுக்கப்பட்ட அதிகபட்ச ஓட்ட சாதனை சுனில் கவாஸ்கர் - சேந்தன் சவுகான் ஜோடி. 1978 - 1979 இல் 192 ஓட்டங்கள் குவித்ததே இதுவரையான சாதனையாக இருந்தது.

✱பாகிஸ்தான் அணிக்கு எதிராக எடுக்கப்பட்ட ஆரம்பத் துடுப்பாட்ட இணைப்பாட்டம் ஓட்டம் குவிப்பு இதுதான். இதற்கு முன்னர் தென்னாபிரிக்காவின் கிரம் ஸ்மித் - ஹேர்ஷல் கிப்ஸ் (2002 - 2003) 368 ஓட்டங்கள் என்பதுதான் சாதனை.

இதில் அதிரடி ஆட்டம் மூலம் வீரேந்தர் ஷேவாக்கினால் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் வருமாறு:-

✱93 பந்துகளில் சதம் அடித்து புதிய சாதனை படைத்தார். 94 பந்துகளில் கவாஸ்கர் அடித்ததுதான் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அடித்த சதங்களே வேகமான சதமாக இருந்தது. இச் சாதனை சுமார் 23 வருடங்கள் நீடித்தது. ஆனால், 93 பந்துகளில் சதமடித்து முறியடித்தார் சேவாக்.

✱மிகக் குறைந்த பந்துகளில் அதிவேக இரட்டைச் சதங்களை விளாசியவர்களில் இரண்டாமிடத்தைப் பிடித்துள்ளார் ஷேவாக். இவர் 182 பந்துகளிலே இரட்டைச் சதத்தைப் பெற்றார். நியூஸிலாந்து வீரர் நாதன் ஆஸ்பே இங்கிலாந்து அணிக்கெதிராக (2001 - 2002) 153 பந்துகளில் இரட்டைச் சதம் விளாசினார். பாகிஸ்தானுக்கு எதிராக கேப்டவுனில் தென்னாபிரிக்க வீரர் கிப்பஸ் 211 பந்தில் இரட்டைச் சதம் அடித்து இரண்டாம் இடத்தில் இருந்தார். அதனை ஷேவாக் முறியடித்தார்.

பவுண்டரிகள் மூலமாக அதிகபட்ச ஓட்டம் குவித்த இந்திய சாதனையும் ஷேவாக்கின் ருத்ரதாண்டவத்தில் மண்ணோடு மண்ணாது. ஷேவாக் லாகூர் டெஸ்டில் இதுவரை எடுத்துள்ள 254 ஓட்டங்களில் 47 பவுண்டரிகள் (75 சதவிகிதம்) விளாசியுள்ளார். முன்னதாக வி.வி.எஸ்.லக்ஷ்மன் கொல்கத்தாவில் ஆஸி. அணிக்கெதிராக (2000 - 2001) 2ஆவது இன்னிங்சில் 281 ஓட்டங்கள் குவித்த போது 44 பவுண்டரிகள் அடித்ததே அதிகபட்ச சாதனையாக இருந்தது. ✱

டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் துடுப்பாட்டம், பந்து வீச்சில் ஆஸி. வீரர்கள் முன்னிலையில்

ஐ.சி.சியின் டெஸ்ட் கிரிக்கெட் தரப்படுத்தல் பட்டியலில் பந்து வீச்சு, துடுப்பாட்டம் ஆகியவற்றில் ஆஸ்திரேலிய வீரர்கள் முதலாமிடத்தைப் பிடித்துள்ளனர்.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அணித் தலைவர் றிக்கி பொன்டிங் 886 புள்ளிகளைப் பெற்றுத் தரவரிசையில் முதலாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்திய அணியைச் சேர்ந்த ராகுல்ராவிட், ஷேவாக், சச்சின் ஆகியோர் முறையே 6ஆம், 7 ஆம் மற்றும் 9 ஆம் இடங்களைப் பிடித்துள்ளனர். முதல் பத்து இடங்களிற்குள் இலங்கை வீரர் எவரும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பந்து வீச்சில் ஆஸி.அணியைச் சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன், தமது சகவீரரான மெக்ராத்தை பின் தள்ளி முதலாமிடத்தை தட்டிப் பறித்துக்கொண்டார். இவர் 867 புள்ளிகளைப்பெற்றுள்ளார். 845 புள்ளிகளைப் பெற்ற இலங்கை அணியின் சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார்.

சகலதுறை ஆட்டக்காரர் பட்டியலில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஜக்கலிஸ் முதன்மை இடத்தைப் பிடித்துள்ளார்.

ஒவ்வொரு துறையிலும் முதல் 10 இடங்களையும் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

துடுப்பாட்டம்

தரம்	வீரர்	புள்ளி
01.	றிக்கி பொன்டிங் (ஆஸி.)	886
02.	பிறைன் லாரா (மே.தீவு)	874
03.	இன்ஸமாம் உல்ஹக் (பாக்.)	870
04.	மத்தியூ ஹெய்டன் (ஆஸி.)	870
05.	ஜக் கலிஸ் (தென்.ஆ.)	866
06.	ராகுல் ராவிட் (இந்.)	830
07.	வீரேந்தர் ஷேவாக் (இந்.)	800
08.	திரஸ் கோதிக் (இங்.)	768
09.	சச்சின் டெண்டுல்கர் (இந்.)	740
10.	முகமது யூசுப் (பாக்.)	736

பந்து வீச்சு

தரம்	வீரர்	புள்ளி
01.	ஷேன் வோர்ன் (ஆஸி.)	867
02.	கிளன் மெக்ராத் (ஆஸி.)	860
03.	முத்தையா முரளிதரன் (இல.)	845
04.	சொஹைப் அக்தர் (பாக்.)	796
05.	மக்காயா நிற்னி (தென்.ஆ.)	786
06.	ஷேன் பொலக் (தென். ஆ.)	782
07.	பிளின் ரொப் (இங்.)	781
08.	சமிந்தவாஸ் (இல.)	775
09.	அனில் கும்ளே (இந்.)	774
10.	அன்ரூ நெல் (தெ.ஆ.)	759

சகலதுறை வீரர்

1.	ஜக் கலிஸ் (தெ. ஆ.)	4763
2.	பிளின்ரொப் (இங்.)	4537
3.	ஷேன் பொலக் (தெ.ஆ)	3425
4.	இர்பான் பதான் (இந்.)	3016
5.	டானியல் வெட்டோறி (நியூ)	2788

2011 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் தெற்காசிய நாடு ஒன்றில் நடத்துவதற்கு இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நான்கு நாடுகளும் இணைந்து அனுமதி கோருவதற்குத் திட்டமிட்டுள்ளன.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறுகின்ற உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் அடுத்த ஆண்டு மேற்கிந்தியத்தீவில் நடைபெறவுள்ளது. அதற் கடுத்த போட்டியை எங்கு நடத்துவது என்ற விவரத்தை சர்வதேச கிரிக்கெட் சபை முடிவு செய்து அறிவிக்கவுள்ளது.

தெற்காசியாவிலுள்ள நாடுகளில் கிரிக்கெட் அதிகளவில் விளையாடப்படுகின்றது. இங்கு இந்த விளையாட்டே பிரதான இடத்தைப் பிடித்துள்ளது. எனவே 2011 ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ணத்தை இங்கு நடத்துவது நல்லது என நான் உணர்கிறேன் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் சரத்பவார் தெரிவித்தார்.

அதேவேளை, இந்தத் தொடரை நடத்த ஆசியாவிற்குப் போட்டியாக ஆஸ்திரேலியாவும் களத்தில் உள்ளது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் சஹாரியாகான் " நாங்கள் இணைந்து நடத்துவதற்கு எண்ணியிருப்பது போல ஆஸ்திரேலியாவும் அத்தகைய முயற்சிகளில் எங்களுக்கு போட்டியாக இருக்கலாம் என்று கூறினார்.

அடுத்த ஆண்டு இடம் பெறவுள்ள போட்டியை நடத்துவதற்கு மேற்கிந்தியத் தீவுகளுடன் ஆஸ்திரேலியாபோட்டியிட்டது. ஆனால் தோல்வியடைந்தது. எனவே, அதற்கடுத்த போட்டியை தமது நாட்டில் நடத்த அது ஆவலாகவுள்ளது.

ஆசியநாடுகளில் பாகிஸ்தானும் இந்தியாவும் 1987 இலும் அவற்றுடன் இலங்கை அணி இணைந்து 1996 ஆம் ஆண்டிலும் உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்தியுள்ளன.

2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணக் கிரிக்கெட் இந்நாடுகளிடம் வழங்கப்பட்டால் முதன் முறையாக மூன்று நாடுகளுக்கு மேற்பட்டவை இணைந்து உலகக்கிண்ணத்தை நடத்தும் சர்ந்தர்ப்பம் ஆசிய நாடுகளுக்குக் கிடைக்கும். ✱

தோல்விகளால் துவண்டு விழும் இலங்கை அணி புதிய தெரிவுக்குழுவின் வருகையால் மீட்சி பெறுமா?

தொடர் தோல்விகளால் துவண்டுகொண்டிருக்கும் இலங்கை அணியின் கிரிக்கெட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகவுள்ளது.

1996 ஆம் ஆண்டு உலகக் கோப்பையை வென்றது முதல் கடந்த வருடம் வரை எதிர் அணிக்கு சிம்மசொப்பனமாக விளங்கியது. இலங்கை அணிஅதுமட்டுமல்ல களத்தடுப்பு, பந்துவீச்சு மற்றும் துடுப்பாட்டம் ஆகிய மூன்று துறைகளிலும் எதிரணியினரைத் திணறடித்தவர்கள். ஆனால் அந்த அணியின் இன்றைய நிலையை நோக்கும் போது மிகவும் பரிதாபகரமாகவுள்ளது.

உலகத் தரப்படுத்தல் வரிசையில் உலக சம்பியனான ஆஸ்திரேலியாவுக்கு அடுத்த நிலையில்- அதாவது இரண்டாவது இடத்தில் நீண்டகாலமாக இருந்து வந்தது. ஆனால் இன்று அதன் நிலை சிம்பாப்வே, பங்களாதேஷ் அணிகள் போன்ற நிலைக்கு உள்ளாகி ஏழாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது என்றால் அதன் நிலையை எண்ணிப்பாருங்கள்.

ஒரு நாள் போட்டிகளில் மட்டும் அன்றி டெஸ்ட் போட்டிகளிலும அந்த அணி மோசமாக விளையாடி வருகின்றது.

கடந்த வருடம் இந்தியாவில் இடம்பெற்ற ஒரு நாள் போட்டித் தொடரில் 6-1 என்ற அடிப்படையிலும் அடுத்து நடைபெற்ற நியூஸிலாந்து அணியுடனான போட்டியில் 4-1 என்ற அடிப்படையிலும் படுதோல்வியை அவ்வணி சந்தித்ததுடன் அண்மையில் ஆரம்பமான வி.பி.கிண்ண முக்கோணத் தொடரின் ஆரம்ப ஆட்டத்தின் ஆரம்பப் போட்டியில் இலங்கை அணி படுமோசமாக தோல்வி அடைந்தது. ஒரு நாள் போட்டியில் தான் இந்நிலை என்றால் டெஸ்ட் தொடரிலும் அவ்வாறான நிலையே காணப்படுகின்றது.

அந்த அணியில் தற்போது சீரான துடுப்பாட்ட வரிசை மற்றும் பந்து வீச்சு என்பன சிறப்பாக இல்லை. குறிப்பாக மஹேல ஜெயவர்த்தன, அத்தப்பத்து, குமார் சங்கக்காரா, டில்ஷான், ஆனர்ட் போன்றவர்களைத் தவிர ஏனையோர் துடுப்பாட்டத்தில் பெரிதாக எதனையும் சாதிக்கவில்லை. அது போலவே பந்து வீச்சைப் பொறுத்தவரை சமிந்த வாஸைத் தவிர மற்றைய முன்னணி வீரர்களான முத்தையா முரளிதரன், [illegible] போன்றவர்களும் பிரகாசிக்கவில்லை.

இதனால்தான் தோல்வியில் சிக்கித் தவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இலங்கை அணியின் தலைவர் மார்வன் அத்தப்பத்து கருத்துத் தெரிவிக்கையில் - இலங்கை அணிவீரர்கள் வெளிநாடுகளில் பொறுப்புணர்ச்சி இல்லாமல் விளையாடி வருவதால்தான் நாம் தொடர்ச்சியாகத் தோல்வியடைந்து வருகின்றோம். - என்றார்.

அதேபோல அணியைத் தெரிவு செய்யும் போது அணியின் பயிற்றுவிப்பாளரிடமோ அல்லது அணித்தலைவருடனோ தெரிவுக்குழு எவ்வித ஆலோசனைகளையும், கருத்துக்களையும் பெறுவதில்லை. இதனால் அணியில் பல குளறுபடிகள் ஏற்படுவதாக அணியின் பயிற்றுவிப்பாளர் ரொம் மூடி குற்றம் சுமத்தியுள்ளார்.

- இதற்கிடையில் இலங்கை அணியை செப்பனிடுவதற்கு- சீர் செய்வதற்கு- உச்சத் திறமையை வெளிக்காட்டுவதற்கும் ஏதுவாக அணியில் மறுசீரமைப்புச் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன் முதல் நடவடிக்கையாக இலங்கை அணியின் தெரிவுக்குழுவை மறு சீரமைத்துள்ளது இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சு.

அந்த அடிப்படையில் அணியின் தேர்வுக் குழுவுக்கு 6 பேர் கொண்ட புதிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன் தலைவராக இலங்கை அணியின் முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அசந்த டிமெல் நியமிக்கப்பட்டுள்ளார். அவருடன் ललித்களுப் பெருமா, கே.டி.எம்.சொய்ஸா, டொன் அருளசிறி, சுஜீப ராஜபக்ஸ மற்றும் சுபீர் அஸ்கரலி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் புதிய தெரிவுக்குழு இலங்கைக்கான- திறமை கொண்ட- ஓர் அணியைத் தெரிவுசெய்யுமா? தெரிவு செய்யப்படும் அணி முன்பு போல சாதிக்குமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் கொத்மலை திட்டமும் - தலவாக்கலை தமிழரது அச்சமும்

தலவாக்கலையை மையமாகக்கொண்டு அமைக்கப்படுகின்ற மேல் கொத்மலை திட்டமானது தலவாக்கலை தமிழரிடையே தமது இருப்பு குறித்த அச்சத்தை தோற்றுவித்துள்ளது. இது குறித்து அம்மக்கள் எம்மிடம் இவ்விதம் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

சிவனு அழகர்சாமி - தலவாக்கலை

"இப்பிரதேசத்தில் இந்த மேல்கொத்மலை திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது நிச்சயமாக பாதுகாப்பை பலப்படுத்தி விடுவார்கள். பாதுகாப்பை பலப்படுத்திய பின்பு இன்று இருக்கின்ற சூழ்நிலை நாளை இருக்காது. இராணுவ கெடுபிடிகள், சோதனைகள், தடுத்து வைத்தல் என்பன இடம்பெறும். குறிப்பிட்ட நேரத்திற்குள் உள்ளே வரவேண்டும் என்பார்கள். நண்பர்கள், உறவினர்கள் யாராவது வீட்டிற்கு வந்திருந்தால் கையெழுத்திட்டு பதியச் சொல்வார்கள்." என்றார்.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த அந்தனிசாமி பீற்றர் போல் கூறும் போது :

"ஏற்கனவே மலையகத்தைப் பொறுத்தவரையில் வடகிழக்கு யுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு மலையக இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும் இப்பிரதேசத்தில் அந்த திட்டத்தை பாதுகாத்து கொள்வதற்காக 5 பாதுகாப்பு முகாம்களை அமைப்பதற்காக இராணுவத்தினர் திட்டமிட்டிருக்கின்றனர். மலையக தமிழர்களை பொறுத்தளவில் தலவாக்கலை நகரம் என்பது மலையகத்தின் இதயமாக கருதப்படுகின்றது. அத்தோடு ஏற்கனவே தலவாக்கலை நகரில் விழிப்புணர்வான பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இவ்வாறான நிலையில் பாதுகாப்பு வலயமாக இப்பிரதேசம் ஆக்கப்பட்டு முகாம்கள் அமைக்கப்படுவதனால் எமது உரிமைகள் பாதிக்கப்படும். அதாவது எமது உரிமைகள் கொடூரமாக பாதிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் கூட புரட்சிகரமான போராட்டங்களை மேற்கொள்ள முடியாத நிலை இனிவரும் காலங்களில் ஏற்படும் என்பது எமது கருத்தாகும்." என்றார்.

வடகிழக்கில் யுத்த முனைப்புகள் ஆரம்பித்துள்ள இந்த சூழலில் நீர்த்தேக்கத்திற்கான பாதுகாப்பு வலயத்தின் மூலமாக தமது பாதுகாப்பிற்கும், சுதந்திரத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்படுமென இப்பிரதேச மக்கள் கருதுகின்றனர். அத்தோடு இத்திட்டத்தினூடாக இப்பிரதேசத்தில் ஏற்படுத்தப் போகும் சிங்கள குடியேற்றங்கள் மூலமாக தமது இருப்பும், எதிர்காலமும் கேள்விக்குரியதாக மாறிவிடுமென இங்கு வாழும் தமிழர்கள் அச்சம் கொண்டிருக்கிறார்கள். இத்திட்டத்தினை உருவாக்குகின்ற சந்தர்ப்பத்தில் இத்திட்டத்திற்கான வேலை

– ஜீ.யோகப்பிரியா

வாய்ப்பில் பெருமளவில் விண்ணப்பித்திருக்கும் தொழிலாளர்கள் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். தமிழ் இனத்தை சேர்ந்தவர்கள் குறைவாகவே இருக்கிறார்கள். இதனடிப்படையில் பார்க்கின்ற போது தமிழ் மக்களின் இனச்செறிவினை குறைத்து இந்த பிரதேசத்தில் தமிழ் மக்களின் ஆதிக்கத்தை குறைக்கச் செய்கின்ற திட்டமாகவே தாம் இதனை கருதுவதாக இம்மக்கள் கூறுகின்றனர்.

மேலும் இந்த நாட்டில் சிறுபான்மை மக்களுக்குள்ள ஒரே பலம் வாக்குப்பலம் மட்டுமே என நம்பப்படுகின்ற சூழலில் இத்திட்டத்தின் மூலம் இங்குள்ள தமிழ் மக்களது குடியிருப்புகளும், குடிப்பரம்பலும் சிதறடிக்கப்படுவதால் தற்போதுள்ள வாக்குப்பலம் குறைந்துவிடும் என்ற கருத்து இம்மக்களிடையே பரவலாக உள்ளது. இதனால் தமது அரசியல் உரிமைகளும் சுதந்திரமும் பாதிக்கப்படுமென இவர்கள் கருதுகின்றனர்.

இது குறித்து அந்தனிசாமி பீற்றர் போல் கூறுகையில் :

"மலையகத்தில் பொதுவாக தேர்தல் காலங்களில் அவதானிக்கின்ற போது இலங்கையில் காணப்படுகின்ற பெரும்பான்மை கட்சிகளை விட மலையகத்தில் காணப்படுகின்ற இன ரீதியான தனித்துவமான சில கட்சிகள் மலையக தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதில் முன்னணியில் இருக்கின்றன. இந்த தமிழ் கட்சிகளின் ஆதரவை நம்பியே பெரும்பான்மை கட்சிகள் போட்டியிடக்கூடிய நிலையில் இருக்கின்றன. இச்சூழலில் இங்கு சிங்கள மக்களின் குடியேற்றங்கள் அதிகரிக்கப்படுகின்ற போது தமிழ் கட்சிகளின் பலம் குறையும் என்பதும் ஒரு கருத்தாக இருக்கிறது. எனவே இந்த மலையக பிரதேசத்தில் தமிழ் கட்சிகளை முறியடிக்க செய்வதற்கான ஒரு முயற்சியாகக்கூட இத்திட்டம் காணப்படுகிறது." எனத்தெரிவித்தார்.

எவ்வாறெனினும் இந்த நாட்டின் பிரஜைகளான இந்த மலையக தமிழ் மக்களது வாழ்வு குறித்தும் எதிர்கால இருப்பு குறித்தும் ஏற்பட்டுள்ள அச்சமானது ஜனநாயக நாடொன்றில் புறந்தள்ளக் கூடிய ஒன்றல்ல. கடந்தகால திட்டங்களினால் ஏற்பட்டுள்ளதாக நம்பப்படும் இந்த அச்சமான நிலை மிக உணர்வு பூர்வமான ஒரு விடயமாகும். எனவே அதனை உணர்வு பூர்வமாகவும், இனங்களுக்கு இடையிலான எதிர்கால நலன்களையும், நல்லுறவையும் கருத்தில் கொண்டும் அணுகவேண்டியது அவசியமாகும்.

கேட்டது.. கேட்டது.. படித்தது..

இலங்கையில் சுமார் 60 வருடங்களுக்கு மேலாக தொடர்கின்ற இனமுரண்பாடுகளை தீர்ப்பது தொடர்பில் கல்விமான்களும், அரசியல் அறிஞர்களும் பல்வேறு கோட்பாட்டு ரீதியான சிந்தனைகளை முன்வைத்துள்ளனர். கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் பீடத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றும் கலாநிதி. எஸ். ஐ கீதபொன்கலன் இவ்வாறான ஒரு முயற்சியாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட இலங்கை கிளையின் உதவியுடன் அவர்களின் உதவியுடன் இந்த நூல்கள் வெளியிடப்பட்டன."

கலாநிதி. கீதபொன்கலன், சமாதான செயற்பாடுகள் மோதல் தீர்வுகள் குறித்து மேற்கத்தைய நாடுகளில் பல கோட்பாட்டு ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும், இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இவ்வாறான கற்கைகள் குறித்த ஆய்வுகள் மேற்கொள்வது அரிதான விடயமாக இருப்பதாகவே கருதுகிறார்.

சமாதான கல்விக்கான நான்கு புத்தகங்கள்

மோதல் தீர்வு தொடர்பான அடிப்படை கோட்பாடுகளை நான்கு புத்தகங்களாக வெளியிட்டுள்ளார். அவை 'மோதல் தீர்வு எண்ணக்கருக்கள்,' 'மோதல் தீர்வும் சமாதான செயன்முறைகளும்,' 'சமூக மோதல் தீர்வும் வன்முறையும்,' 'சமூக மோதல்கள் ஓர் கோட்பாட்டு அறிமுகம்' என்ற தலைப்புக்களில் அமைந்துள்ளன. தற்போதைய சூழலில் முக்கியத்துவம் கொண்டதாக அமைகிற இப்புத்தகங்களின் வெளியீடு குறித்து அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"இலங்கையில் பல நாடுகளுடன் ஒப்பிடும் போது வன்முறையின் மட்டம் அதிகமாக காணப்படுகின்றது. இதன் காரணமாக மேற்கு நாடுகளில் அபிவிருத்தி அடைந்திருக்கின்ற இந்த மோதல் தீர்வு தொடர்பாக அபிவிருத்தி அடைந்திருக்கின்ற கோட்பாடுகளை இலங்கையில் அறிமுகப்படுத்துவது பயனுடையதாக இருக்கும் என்று கருதப்பட்டமையினால் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் என்னிடம் இந்த நூல்களை வெளியிடுவது தொடர்பாக ஆராய்ந்திருந்தது.

அந்த வகையில் இலங்கையில் இனமோதல் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்கின்ற ஆய்வாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சாதாரண மக்கள் இனப்பிரச்சினை தொடர்பான யதார்த்த நிலையினை இந்த நூல்களின் மூலம் விளங்கிக் கொள்ளக்கூடிய சாத்தியப்பாட்டினை இந்த நூல்களில் காணக்கூடியதாக உள்ளது.

மேலும் இலங்கையின் அரசியல் பொருளாதார நிலைப்பாட்டில் இன மோதல் மற்றும் சமாதான செயற்பாடுகள் செல்வாக்கு செலுத்துகின்ற நிலையில் சமாதான செயன்முறைகள், மோதல் தீர்வு எண்ணக்கருக்கள் என்பவற்றை அடிப்படையாகக்

– எஸ். ரொமேஷ்

கொண்ட கோட்பாடுகளை சமாதானக்கல்வியினூடாக பாடசாலை மாணவர்களுக்கு போதிப்பதன் மூலம் எதிர்கால பிரஜைகளிடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் குறைத்துக்கொள்ள முடியும் என்பது கலாநிதி. கீதபொன்கலனின் எதிர்பார்ப்பாக அமைகின்றது.

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை - 14

1. வேறு நாடுகளுக்கு செல்வதன் மூலம் துன்புறுத்தலிலிருந்து புகலிடம் நாடுவதற்கும், துன்புறுத்தலிலிருந்து புகலிடம் துய்ப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

2. அரசியற் குற்றங்கள் அல்லாத குற்றங்கள் சம்பந்தமாக அல்லது ஐக்கிய நாடுகளின் நோக்கங்களுக்கும், தத்துவங்களுக்கும் முரணான செயல்களில் இருந்து உண்மையாக எழுகின்ற வழக்கு தொடுப்புகள் சம்பந்தமாக இவ்வுரிமை கேட்டுப்பெறப்படலாகாது.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

யுத்த பீதியில் யாழ் விவசாயிகள்

யாழ், திருநெல்வேலி சந்தையானது அருகிலுள்ள கிராமங்களைச்சேர்ந்த விவசாயிகள் தமது உற்பத்திப்பொருட்களை சந்தைப் படுத்துகின்ற இடமாக காணப்படுகிறது. இச்சந்தை வியாபாரிகளும், நுகர்விற்காக வருகின்ற பொது மக்களும் நிறைந்து கலகலப்பாக காணப்படுவது வழமையாயினும் தற்போது நிலமை அவ்வாறு சுமூகமாக இல்லை.

சுமார் 25 வருடங்களாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ் விவசாயமானது கடந்த 3 வருட சமாதான காலத்தில் பெருமளவு வளர்ச்சி கண்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மேலும் சிவம்பரித்துரை போன்ற விவசாயிகள் கடந்த இரு தசாப்தத்திற்குள் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் பல முறை வன்னிக்கு இடம் பெயர நேரிட்டது. எனினும் காலங் கடந்தாவது ஏற்பட்ட இந்த யுத்த நிறுத்தமே மீண்டும் தாம் யாழ் மண்ணில், தமது வேளாண்மை நிலத்திற்குள் கால்களை வைக்கலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது என்கிறார்கள். மேலும் யாழ்-கண்டி பாதை மூடப்பட்டிருந்த காலங்களில் கப்பல் மூலமே தமது விளைபொருட்களை தெற்கிற்கு அனுப்ப வேண்டியிருந்தமையினால் விவசாயம் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது என்றும் யாழ்-கண்டி பாதை திறக்கப்பட்டதன் பின்னர் தமது வாழ்விலும் வசந்தம் ஏற்பட்டதாகவும் கூறுகிறார்கள்.

எல்லா துறைகளையும் போலவே வடபகுதி விவசாயத்துறையும் சமாதான காலத்தில் சிறப்பான வளர்ச்சியை எட்டியிருந்த போதிலும் தற்போது நிலமைகள் மாறத்தொடங்கியுள்ளன. தொடருகின்ற வன்முறைகள், யுத்த நிறுத்த மீறல்கள் என்பன இம்மக்களது இயல்பு வாழ்க்கையைப்போலவே விவசாயத்தையும் பாதிக்கத் தொடங்கியுள்ளது. குறிப்பாக மீண்டுமொரு யுத்தம் மூளுமோ என்ற பயம் இவ்விவசாயிகளையும் பிடித்தாட்டுகிறது.

– இக்பால் அஜீட்

இதுகுறித்து சிவம்பரித்துரை குறிப்பிடும்போது "யுத்தம் யுத்தம் என தொடர்ந்தால் எமது விவசாயம் பாதிக்கப்படும். தொழில் துறைகள் பாதிக்கப்படும். மக்கள் பசி பட்டினிகளை அனுபவிக்க வேண்டியேற்படும். எனவே எங்களுக்கு பிற நாடுகளாவது முன்வந்து சமாதானத்தைக் கொண்டு வந்தால் நன்றாகும்.' என்கிறார்.

இன்னுமொரு விவசாயியான கார்த்தி தங்கராஜா கூறுகையில்,

"யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் இன்றைய நிலையில் இவ்வாறு பேச்சுவார்த்தைகள் குழம்பிக்கொண்டு சென்றால் எதிர்காலத்தில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவே தெரிகிறது. நாங்கள் பத்திரிகைகளை பார்க்கும் போது அப்படித்தான் கருத வேண்டியிருக்கிறது. இனிமேலும் நாங்கள் கஷ்டப்படவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றுதான் நினைக்கிறேன்." எனக்குறிப்பிட்டார்.

இலங்கை கணக்கெடுப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தகவலின்படி நாட்டின் மொத்த தேசிய நெல் உற்பத்தியில் வட மாகாணத்தின் நெல் உற்பத்தியானது யுத்தம் இடம்பெற்ற 1996 இலிருந்து 2001ம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 2.52 வீதமாக காணப்பட்டது எனினும் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்ட 2002 இலிருந்து 2004 வரையான காலப் பகுதியில் இதன் வீதமானது 4.83 வீதமாக உயர்ந்துள்ளது. இது இரு மடங்கான அதிகரிப்பாகும்.

இவ்வார விழிப்பில்...

- சமாதான பேச்சை ஆரம்பிக்கும்படி சிவில் அமைப்புக்கள் கோரிக்கை
- ஊடக சுதந்திரம் கோரி ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்
- கொழும்பில் இடம்பெற்ற யாழ் ஓவியரின் ஓவியக்கண்காட்சி
- அதிகார பரவலாக்கல் தொடர்பிலான இளைஞர் கருத்தரங்கு
- தெற்கு ஊடகவியலாளர்களின் திருமலை விஜயம்

வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன. அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல் முகவரி :- villippu@yatv.net

விழிப்பின் பதிவுகள்

YATV இதயம்

'விழிப்பு' தொலைக்காட்சி நிகழ்ச்சி செவ்வாய் இரவு 7.25 மணிக்கு TNL அலைவரிசையில் ஒளிபரப்பாகிறது. விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.
தொலைபேசி இல:- 0112787041-9 தொலைநகல் இல:- 0112787051 மின்னஞ்சல் முகவரி:- villippu@yatv.net இணையத்தள முகவரி:- www.yatv.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்க வடிவமைப்பு (கணனி) - சிற்றம்பலம் கணேசன்

வனமே வாழ்வு வனமே அழிவு

கடந்த வாரம் உலக வெப்பவேற்றப் பிரச்சினை உலகளாவிய பொதுப் பிரச்சினையாதலால் மனித செயற்பாடுகளால் உலக வெப்பநிலை உயர்வடைவதைக் கட்டுப்படுத்த உலகப் பொது நிறுவனமான ஐ.நா. சபையின் ஏற்பாட்டில் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் பற்றியும் கியோட்டோ (1997), மொன்றீல் (2005) மாநாடுகளில் ஏற்பட்ட இணக்கங்கள் பற்றியும் அறிந்துகொண்டோம்.

மொன்றீல் மாநாட்டின் உபசரிப்பு நாடான கனடாவின் சுற்றுச் சூழல் அமைச்சர் மாநாட்டில் காணப்பட்ட இணக்கப்பாடுகளை மொன்றீல் செயன்முறைத் திட்டம் (Montreal Action Plan (MAP) எதிர்காலத்திற்கானவொரு வரைபடம் என வருணித்துள்ளார்.

மொன்றீல் மாநாடு பச்சை வீடு வாயுக்கள் வெளிவிடுதலைக் கட்டுப்படுத்தும் நிபந்தனைகள் பற்றியும் கியோட்டோ இலக்குகளை எட்டத்தவறும் நாடுகளைத் தண்டிப்பதற்கும் இணக்கம் கண்டிருப்பதால் பல வழிகளில் இம்மாநாடு வெற்றியடைந்துள்ளதாகவே கருதப்படுகிறது.

தூய அபிவிருத்திக்கும் தட்பவெப்பத்திற்குமான ஆசிய - பசிபிக் கூட்டுமுயற்சி (Asia – Pacific Partnership on Clean Development and Climate (APPCDC))

இவை இவ்வாறிருக்க, உலகை அதிகளவு மாசுபடுத்தும் நாடுகளில் சிலவான ஜக்கிய அமெரிக்க நாடுகள் (USA), சீனா, இந்தியா, ஜப்பான், தென்கொரியா, ஆஸ்திரேலியா ஆகிய ஆறு நாடுகள் (இவற்றிற்கு AP6 நாடுகள் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது) 2005ஆம் ஆண்டு ஜுலை மாதம் "தூய அபிவிருத்திக்கும் தட்பவெப்பத்திற்குமான ஆசிய-பசிபிக் கூட்டுமுயற்சி (Asia – Pacific Partnership on Clean Development and Climate (APPCDC))" என்றோர் அமைப்பை ஏற்படுத்திக்கொண்டுள்ளன. இவர்களது நோக்கம் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்காது தன்னிச்சையாக கூட்டுமுயற்சி மூலமும் தொழில்நுட்பம் மூலமும் வளிமண்டலத்தின் பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துதலாகும். இவர்களது கூட்டு ஐ.நாவின் வழிமுறைகளின் முதன்மையை அங்கீகரிக்கின்றபோதிலும், காபன்

வெளிவிடற் குறைப்புக்கான ஐ.நாவின் வழிமுறைகளுக்குப் போட்டியானவொரு தளமாகவே பலராலும் கருதப்படுகிறது.

AP6 நாடுகள் இம்மாதம் (2006 ஜனவரி) பதினொராம் பன்னிரண்டாம் திகதிகளில் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உலக வெப்பவேற்றத்திற்கான உயர் தொழில் நுட்பத் தீர்வுகள் பற்றி இருநாள் கூட்டமொன்றைச் சர்வதேச வியாபாரப் பெருச்சாளிகளுடன் நடத்தியுள்ளன. இம்மாநாட்டில் Exxon Mobil, Rio Tinto, Peabody Energy, BP, Shell போன்ற மிகப்பெரிய சுரங்கத் தொழில், சக்தித்தொழில் கம்பனிகளின் உயர்மட்ட நிறைவேற்று அதிகாரிகள் பங்குபற்றினர்.

உலக வெப்பவேற்றப் பிரச்சினையைக் கையாள்வதற்கான நிதியமொன்று தூய சக்தி நிதியம் (Clean Energy Fund) என்ற பெயரில் இக்கூட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த அங்குரார்ப்பண மாநாட்டின் உப

சரிப்பு நாடான ஆஸ்திரேலியா இந்நிதியத்திற்குப் பத்துக் கோடி ஆஸ்திரேலியன் டொலர்களை (ஏழரைக் கோடி அமெரிக்க டொலர்கள்) கொடுத்து நிதியத்தை ஆரம்பித்து வைத்துள்ளது.

இக்கூட்டம் பச்சை வீடு வாயுக்களையும் நிலத்தடி எரிபொருள் படிமங்களை எரிப்பதால் வெளிவிடப்படும் இதர வாயுக்களையும் அங்கத்துவ நாடுகள் கட்டுப்படுத்துவதற்கான காலவரையறையுடன் கூடிய இலக்குகள் எதனையும் நிர்ணயிக்கவில்லை. இவ்வாறான இலக்குகளும் காலவரையறைகளும் அற்ற முயற்சிகள் தூரநோக்குடையனவல்ல எனவும் தோல்வியில் முடியுமெனவும் கூறும் சில விமர்சகர்கள் இம்மாநாட்டை உலகின் மிகப்பெரிய நிலத்தடி எரிபொருள் உற்பத்தியாளர்களினதும் பாவனையாளர்களினதும் தொழில் பற்றிய அர்த்தமற்ற பேச்சு என வருணிக்கின்றனர்.

ஆனால், பொருளாதார வளர்ச்சி, வறுமை ஒழிப்பு, பச்சை வீடு வாயுக்கள் குறைப்பு மூன்றும் இணைந்த செயற்றிட்டத்தை வலியுறுத்தும் இந்நாடுகள் வர்த்தக சமூகத்தின் தீவிரமானதும் விசுவாசமுள்ளதுமான பங்களிப்பின்றி இவ்விலக்குகளை அடைய முடியாதென்கின்றன.

உலக வெப்பநிலையேற்றமும் காடுகளும் :

உலக வெப்பவேற்றத்திற்கு நிலத்தடி எரிபொருள் படிமங்களின் அதிகரித்த பாவனை முக்கிய பங்களிக்கின்றபோதிலும் அதுமட்டும்

> யுத்தத்தின் வெடி ஓசைகளும் குண்டுத்தாக்குதல்களும் மனிதனையும் உலகளாவிய ரீதியில் பயத்தில் ஆழ்த்திய காலம் மெல்லமெல்ல மாறிவருகிறது எனலாம். எனினும் இயற்கையும், இயற்கையின் கோரத் தாண்டவங்களும் இன்று உலகை ஆட்டிவைக்கின்றன. மனிதனால் மனிதன் கொல்லப்பட்ட காலம் மாறி இயற்கையே தன் குழந்தைகளை பலியெடுக்கும் நிலைமை தலைதூக்கியுள்ளது.
> இத்தகைய இயற்கையின் மூர்க்கத்தினால் உறங்கியுள்ள எரிமலைகளும் உயிர்ப்புப் பெறுகின்றன. இதன் காரணமாக எரிமலைகள் மீளுயிர்ப்பு பெற்று வெடிக்கின்றன; பலியெடுக்கின்றன. அவ்வேளைகளில் எல்லாம் மனிதன் மரணவலி உணர்கின்றான்.
> இந்தச் சிறப்புக் கட்டுரைத் தொடரின் முதல் ஏழு பாகங்கள் ஏற்கனவே உதயனில் வெளியாகி இருந்தன. இங்கு எட்டாவது பாகம் பிரசுரமாகிறது.

தான் பங்களிப்பதாகக் கருதிவிடக்கூடாது. காடுகளை (வனங்களை) அழித்தல் போன்ற இதர மனித செயற்பாடுகளும் வளிமண்டலத்திலுள்ள பச்சைவீட்டு வாயுக்களின் அளவை அதிகரிப்பதில் கணிசமானவளவு பங்களிப்புச் செய்கின்றன. காடுகளை அழித்தல் பல குறுகியகால, நீண்டகால தீய விளைவுகளை ஏற்படுத்தும். இங்கு காடுகளின் அழிப்பினால் பச்சை வீடு விளைவு துரிதப்படுத்தப்படுவது பற்றி மட்டுமே கவனத்திற்கெடுப்போம்.

தாவர ஒளிச்சேர்க்கையின்போது வளியிலுள்ள காபனீர் ஒக்சைட்டிலுள்ள காபன் மூலக்கூறுகள் தாவர பதார்த்தத்துடன் இணைக்கப்படுவதால் வளிமண்டலத்திலுள்ள காபனீர் ஒக்சைட்டின் அளவு குறைக்கப்படுகின்றது. ஆகவே, அதிகளவில் காடுகள் இருப்பின் காட்டு மரங்கள் வளிமண்டலத்திலுள்ள காபனீர் ஒக்சைட்டின் குறிப்பிடத்தக்க பகுதியை எடுத்துக்கொள்ளும்.

காடுகள் எரியும் போது காபனீர் ஒக்சைட் வெளிவிடப்படுவதால் காடுகளை அழித்து எரிப்பது வளிமண்டலத்திலுள்ள பச்சைவீட்டு வாயுக்களின் அளவை அதிகரிப்பதில் கணிசமானவளவு பங்களிப்புச் செய்கிறது. வளிமண்டலத்தில் பிரதி வருடமும் சேர்ப்பிக்கப்படுகின்ற காபனீர் ஒக்சைட்டின் இருபது

பேராசிரியர் இ.குமாரவடிவேல்
விஞ்ஞான பீடாதிபதி
(யாழ். பல்கலைக்கழகம்)

முதல் இருபத்தைந்து வீதமானது காடுகள் - முக்கியமாக உஷ்ணவலய மழைக்காடுகள் - எரிவது காரணமாக வெளிவிடப்படுகிறது எனக் கணிக்கப்பட்டுள்ளது. காடுகளை அழிப்பது இப்பங்களிப்பை இரு மடங்காக்குகிறது.

இப்போது புவி மேற்பரப்பில் ஐந்தில் இரண்டு பங்கு காடுகளாக இருக்கின்றது. இது பயிர்ச்செய்கை பண்ணப்படும் பரப்பளவின் மூன்றரை மடங்கு. கடந்த ஒரு நூற்றாண்டில் பூமி தனது வனவளத்தில் அரைவாசியை இழந்துவிட்டது. மிதவுஷ்ண வலயங்களில் (Temperate Zones) காடழிப்பும் காடுவளர்ப்பும் ஏறத்தாழச் சமநிலையிலுள்ள போதிலும் உஷ்ண வலயங்களில் (Tropical Zones) காடுகள் வேகமாகச் சுருங்கிக் கொண்டு போகிறது.

ஆயிரமாயிரம் வருடங்களாக மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டு வந்த போதிலும் இருபதாம் நூற்றாண்டில் இயந்திர சாதனங்களின் அறிமுகம் காடுகள் அழிக்கப்படும் வேகத்தைப் பெரியளவில் அதிகரிக்கவைத்துள்ளது. தென்கிழக்காசியாவிலேயே உலகின் ஏனைய பகுதிகளிலும் பார்க்க மிகவேகமாக காடழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையில் 1950களில் 50 முதல் 60 வீதமான பகுதி காடுகளாகவிருந்தது. 1980களில் இது 25 வீதமாகக் குறைந்தது.

விவசாய நிலங்களை உருவாக்குவதற்கும் குடியிருப்புக்கள், பாதைகள் அமைப்பதற்குமாக மட்டுமன்றி மரக்குற்றிகளை விற்று பணம் சம்பாதிப்பதற்காகவும் பல வளர்முக நாடுகளில் காட்டுமரங்கள் எதுவித திட்டமிடலுமின்றி அழிக்கப்படுகின்றன. நன்கு திட்டமிடப்படாத அபிவிருத்தித் திட்டங்களில் குடியேறுபவர்களுக்குக் காடழிப்பதற்குப் பணவுதவி வழங்கப்படுவதால் அவர்களிற் பலர் வனவளத்தை முற்றாக அழித்துவிடுகின்றனர். சில நாடுகளில் கோடைகாலங்களில் காட்டுத் தீ பெருமளவு காடுகளை எரித்து விடுகிறது. காடுகள் அழிக்கப்படுவதைக் கட்டுப்படுத்துவது மூலமும் புதிய காடுகளைத் திட்டமிட்ட முறையில் வளர்ப்பது மூலமும் வளிமண்டலத்திலுள்ள காபனீர் ஒக்சைட்டின் அளவைக் கணிசமான அளவு குறைக்கமுடியும்.

வளர்ச்சியடைந்த நாடுகளும் வளியை மாசுபடுத்தும் பெரும் தொழில் நிறுவனங்களும் அழிக்கப்பட்ட காடுகளை மீள உருவாக்கவும் புதிய காடுகளை வளர்க்கவும் நிதியுதவி செய்வது மூலம் வளிமண்டலத்திலுள்ள காபனீர் ஒக்சைட்டின் அளவைக் கட்டுப்படுத்தும் இலக்கை அடைவதற்குப் பங்களிப்புச் செய்யமுடியும். பொருளீட்டும் நோக்குடனேயே பெருமளவு காடுகள் அழிக்கப்படுவதால், காடழிப்பைத் தவிர்க்கும் செயற்றிட்டங்களுக்கு ஊக்குவிப்பு (பண) வெகுமானம் அளித்தல் மூலம் காடுகளைப் பாதுகாக்கமுடியும் என ஒரு சாரார் கருதுகின்றனர்.

மழைக்காடுகள் நாடுகளின் கூட்டமைப்பின் (Coalition for Rainforest Nations) பணிப்பாளர் கெவின் கொன்றாட் (Kevin Conrad) ஊக்குவிப்பு வெகுமதியளிப்பது மூலம் உஷ்ண வலயக் காடழிப்பு வேகத்தை குறைக்கலாம் என வாதிடுகிறார். இந்தோனேசியா, பிறேசில் ஆகிய இரு நாடுகளில் மட்டும் காடழிப்பை நிறுத்தினாலேயே கியோட்டோ இணக்கம் காண விளையும் காபன் வெளிவிடல் குறைப்பு அளவின் எண்பது வீத இலக்கை அடைந்துவிடலாமெனக் கணிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில நாடுகளையும் இதில் சேர்த்துக் கொண்டால் கியோட்டோ [illegible] ஒற்றவொன்றாகிவிடும் என்பது கொன்றாட் அவர்களின் வாதம்.

காடழிப்பைத் தவிர்ப்பதற்கு வெகுமானம் அளித்தல் என்றொரு திட்டம் நடைமுறைப்படுத்தப்படின் அத்திட்டத்தின் கீழ்வரும் காடுகள் மட்டும் பாதுகாக்கப்பட்டு வெகுமானம் பெறப்படும் எனவும் திட்டத்துள் அடங்காத இதர காடுகள் அழிக்கப்பட்டுவிடும் எனவும் வாதிடும் சூழல் பாதுகாப்பு ஆர்வலர்கள் வெகுமானம் அளிப்பதை ஆதரிக்கவில்லை.

இவ்விடயம் கியோட்டோ மாநாட்டு உடன்பாடுகளில் தவிர்க்கப்பட்டிருப்பது ஆச்சரியத்தைத் தருகிறது. மொன்றீல் மாநாட்டில் பப்புவா நியூகினி அரசாங்கம் காடுகளைப் பாதுகாக்கும் வளர்முக நாடுகளுக்கு ஊக்குவிப்புப் பண வெகுமானம் அளிக்கும் திட்டமொன்றை முன்வைத்தது. அத்திட்டம் மேற்குறிப்பிட்ட குறைபாட்டை நிவர்த்தி செய்வதாக அமைந்திருந்தது. இந்த யோசனைப்படி தனித்தனித் திட்டங்களை (Projects) நடைமுறைப்படுத்துவுற்கு வெகுமானம் அளிப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு நாடும் தனது தேசிய வனவள இழப்பை குறைப்பதில் ஈட்டும் வெற்றியை (Performance) அடிப்படையாகக் கொண்டு காபன் வெளியேற்றல் பண வெகுமதியைப் பெற்றுக்கொள்ளமுடியும். கெவின் கொன்றாட்டின் கூற்றுப்படி இது வளர்முக நாடுகளின் அபிவிருத்திக்கு அதிகமாகத் தேவைப்படும் நிதியைக் கொடுப்பதுடன் உஷ்ணவலயக் காடழிப்பு வேகத்தையும் குறைக்கும்.

உஷ்ணவலய வனவழிப்பைக் கையாள ஒவ்வொரு வருடமும் ஐம்பது பில்லியன் டொலர் தேவைப்படுமென ஐ.நா. நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. இப்போது அரை பில்லியன் டொலரே செலவிடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரச்சினைக்குத் தீர்வென்ன?

அரசியல் ரீதியாக என்ன நடந்தாலும் 1 - 2° ஊ புவி வெப்ப அதிகரிப்பும் அதனால் உலகின் சில பகுதி களில் - முக்கியமாக வறிய நாடுகளில் - ஏற்படும் பாரதூரமான விளைவுகளும் தவிர்க்கமுடியாதவை எனவே நம்பப்படுகிறது.

பிரச்சினைக்கு வெளிப்படையாகத் தெரியக்கூடிய தீர்வு நிலத்தடியில் புதைந்து கிடக்கும் எரிபொருள்

படிமங்களை உபயோகிப்பதை நிறுத்திவிட்டு காற்று, சூரியன், நீர், ஐதரசன் போன்ற தூய சக்தி முதல்களை (Clean energy sources) உபயோகப்படுத்துவதாகும். ஆனால், இது பற்றிப் பேசுவதற்குச் சுலபமாக இருக்கின்ற போதிலும் நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்களுண்டு.

எண்ணை, வாயு, நிலக்கரி ஆகியன உலகில் நீண்ட காலமாக நிலைநிறுத்தப்பட்டுவிட்ட சக்தி முதல்கள். அவை செலவு, வினைத்திறன் (நுககஉைநைஉெல) ஆகியவற்றில் பெருமளவு அனுகூலமானவை. காற்று சக்தி, சூரியசக்தி, ஐதரசன் வாயு ஆகியவற்றை உபயோகிக்கும் தொழில்நுட்பம் இன்னும் குழந்தைப் பருவத்திலேயே உள்ளது. அத்துடன், இவை காரணமாக நிலத்தடி எரிபொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவது இலகுவான காரியமாக இல்லை - இருக்கபோவது

மில்லை.

வினைத்திறன் மிக்க எரிபொருள் பாவனை (Efficient fuel usage), கலப்பு இன வாகனங்களின் (Hybrid Vehicles) உபயோகத்தை ஊக்குவித்தல், நிலக்கரியை எரிப்பதால் வெளிவிடப்படும் காபனீர் ஒக்சைட்டை நிலத்தினடியிலேயே (வளிமண்டலத்திற்கு செல்லவிடாது) சேமித்து வைத்தல், காடுகளை வளர்த்தல், காடுகள் அழிக்கப்படுவதைக் கட்டுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளே அடுத்த சில தசாப்பங்களுக்கு இடைக்காலத் தீர்வுகளாக அமையமுடியும். காற்றுசக்தி, சூரியசக்தி, ஐதரசன் வாயு ஆகியவற்றை உபயோகிக்கும் தொழில்நுட்பத்தை வளர்த்தெடுக்க தீவிர முயற்சிகள் எடுப்பது பிரச்சினைக்கான நீண்டகாலத் தீர்வாக அமையும். இவற்றைக் காலந்தாழ்த்தாது தீவிரமாக அமுலாக்கினால் அவை அதிக செலவு தராத ஏற்பாடுகளாயமையும். இம்முயற்சிகள [illegible] காலந்தாழ்த்தினால் ஏற்படும் நட்டங்கள் இத்தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்படும் செலவைப்போல் பல மடங்காக இருக்கும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூர்வமான மூலிகைகளின் ஒன்றிணைப்பு பரிபூர்ணமான நோய் நிவாரணத்திற்கான வழி.

பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது

Baraka
பரகா

தற்பொழுது உங்கள் யாழ் நகரிலும்!

ஆயுர்வேத திணைகளத்தின் அனுமதி இலக்கம் 3/1/5/4/94/30

DIABsol
(Black Seed Oil)

இயற்கையாக நீரழிவு நோயிலிருந்து நிவாரணம் பெற வேண்டுமா?

Baraka கருஞ்சீரகத்தினால் தயாரிக்கப்பட்ட வில்லைகள் மருத்துவ ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்ட 100% இயற்கையான கருஞ்சீரக எண்ணெய்யினால் தயாரிகப்பட்டு நீரிழிவு நோயிலிருந்து நிவாரணத்தை தருவதோடு உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றது. ஏனைய ஆங்கில மருந்துகளுடன் உபயோகிக்கலாம்.

GarliCHOL
(Garlic)

இயற்கையாக கொலஸ்ட்ரோலின் அளவை கட்டுப்படுத்த வேண்டுமா?

Baraka வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக எண்ணெய் வில்லைகள் 100% இயற்கையாக வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக கூட்டமைப்பில் தயாரிக்கப்பட்டு உடலிலுள்ள மேலதிக கொலஸ்ரோல் அளவை கட்டுப்படுத்துகின்றது.

Picasso Ads

CODseas
(Cod Liver Oil)

உடலை ஆரோக்கிய நிலையில் பேண வேண்டுமா?

கருஞ்சீரகத்துடன் கூடிய மீன் எண்ணெய் (Cod Liver Oil) வில்லைகள் உடலுக்கு தேவையான ஒமேகா-3 மூலகத்துடன், விற்றமின்கள், கனியுப்புக்கள் மற்றும் மேலதிக கல்சியத்தை வழங்கி, உடலை ஆரோக்கியமாக பேண உதவும் மேலும் தடிமன், இருமல் என்பவற்றை தவிர்த்து கண்பார்வை என்பு, பல் என்பவற்றின் தொழிற்பாட்டை அதிகரிக்கும்.

BeeVIT
(Bee Honey)

இயற்கை மூலிகைகளின் மூலம் உடலுக்கு தேவையான புரதங்கள், விற்றமின்கள், கனியுப்புக்களை பெற வேண்டுமா?

பிரபலமான இரு மூலிகைகளான கருஞ்சீரகம் மற்றும் தேன் என்பவற்றின் கூட்டமைப்பில் தயாரான Baraka கருஞ்சீரக தேன் வில்லைகள் நாளாந்தம் உடலுக்கு தேவையான ஆரோக்கிய சக்தியை வழங்குகின்றது மேலும் உடலுக்கு தேவையான மேலதிக புரதங்கள்,விற்றமின்கள், கனியுப்புக்களை வழங்கி உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை பாதுகாக்கின்றது.

EXPO LANKA
EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.
11A, Mile Post Avenue, Colombo - 03 Tel :- 0112 676398/9
email. expopharma@expo.sit.lk, www.barakaoil.com
Baraka
Your health partner in life

புதிய அ.அட்டை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளையினால் இந்த ஆண்டுக்கான புதிய அடையாள அட்டைகள் தொண்டர்களுக்கு வழங்கப்படவுள்ளன. தொண்டர்கள் புதிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு சங்க பருத்தித்துறைக் கிளை செயலாளர் தெரிவித்துள்ளார்.

(ஒ-78)

சிங்கப்பூரில் வசிப்பதற்கு அரிய வாய்ப்பு

சிங்கப்பூரில் உள்ள யுனிவெக் நிறுவனத்தின் இணை நிறுவனமான ''சிஸ்ரம் கொம்பியூட்டர்'' நிறுவனம் ஊடாக இலகுவாக ''Student Pass'' பெற்று மாணவர்கள் சிங்கப்பூரில் பாதுகாப்பான சூழலில் மாதம் 60,000 ரூபா சம்பளத்துடன் வேலை செய்துகொண்டு படிக்கலாம்.
சிங்கப்பூரில் உள்ள யுனிவெக் நிறுவனத்தில் தங்குமிட வசதி, உணவு, வேலைவாய்ப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
குடும்பமாக சிங்கப்பூர், மலேசியாவில் வசிக்க விரும்புவோர்களுக்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

யுனிவெக், 213, 2ஆம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/47433)(26-42-16) T.P.:0776176476

DAIDO

RS. 47800/- +VAT

சகல விதமான (CHINA) சீனா மோட்டர் சைக்கிள்களுக்குமான உதிரிப்பாகங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மொத்த விற்பனையாளர்களுக்கு விசேட கழிவு

செரென்டிப் மோட்டர் என்டர்பிரைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
608, ஜி சங்கராஜ மாவத்தை கொழும்பு- 10
அலுவலகம்: 01-2341580-1, 2438779
விற்பனை: 01- 2454608, 2438425
E-mail: zme@slt.lk

குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு

- திருமணம் (சோடனையுடன்)
- சுற்றுலா
- விசேட வைபவங்கள்

போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீனகார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:
22, சோமசுந்தரம் அவனியூ.
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

T.P.: 0777 - 903090
0777- 246117
077 - 9172730

(45779)(26-34)

சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலைப்பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையும் உப உணவுமாகும். குருதியில் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் கட்டுப்படுத்தும் காரணியுடன் விற்றமின் A,C உடன் இதயம், நாகம், குரோமியம், கல்சியம், நார்ப் பொருள்கள் போன்ற நன்மை பயக்கக்கூடிய பொருள்களும் உண்டு.

BIOTEC INTERNATIONAL
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி [பாம் ஸ்கூல் அருகில்]
T.P. 021 4590907
32/5 ரெயில்வே அவனியூ கொழும்பு 05 T.P. 0112 852269
(21.11.19) (44990)

விழா நாள் சேவைகள்

திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழாக்களுக்குரிய
- Make-up
- Facial
- Eye brow Shapping
- Icing cake

ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

அழகுக்கலை, மனையியல் பயிற்சி வகுப்புகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

துரிகை
ம.ம.வி.வீதி, நெல்லியடி,
T.P.: 077 9691380
077 9143171

இலங்கையிலுள்ள திருத்தலங்கள் மீது பாடப்பட்ட கீர்த்தனைகள் அடங்கிய

கீர்த்தனை மாலை

இயற்றியவர்
கலாபூஷணம் W.S. செந்தில்நாதன்
(சுட்டத்தரணி)

யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் இடங்கள்:
1. பூபாலசிங்கம் புத்தகசாலை
2. ஸ்ரீலங்கா புத்தகசாலை
3. ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை

(சி/47408)(42-16)

லைசின் அடங்கிய எப்பட்டன் உடன் உணவருந்தும் நேரம் மகிழ்ச்சியான நேரம்

சிறு பிள்ளைகளின் குறைவாக உணவு உண்ணும் பழக்கம் எல்லாத் தாய்மார்களுக்கும் பெரும் வேதனையாகும். இதனை லைசின் அடங்கிய எப்பட்டனின் உதவியால் தவிர்த்துக்கொள்ள முடியும்.

பானியாகவும், சப்பிச்சாப்பிடக்கூடிய வில்லைகளாகவும் கிடைக்கும் லைசின் அடங்கிய எப்பட்டன் உங்கள் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியளித்து உணவு உண்ணும் தன்மையை அபிவிருத்தியடையச் செய்கிறது. நேராகவோ அல்லது உணவுடன் கலந்தோ சிபாரிசு செய்யப்பட்டுள்ள அளவின்படி கொடுக்கவும். உங்கள் பிள்ளைகளின் உடல் வளர்ச்சிக்குத் தேவையான உயிர்ச்சத்துக்களை அதுதருகிறது.

ஆகவே லைசின் அடங்கிய எப்பட்டனுடன் உணவருந்தும்நேரம் வேடிக்கையான நேரம்.

APPETON
Health For Life

the ad factory

ஏக பிரதிநிதிகள்
Suri Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251

எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் கிடைக்கும்.

SEED

Social, Economical and Environmental Developers is looking for
A Technical Officer/Construction Supervisor

SEED is a national non - governmental organization that is committed to teamwork, people oriented programs, gender equality, and working with vulnerable people. We are now working with Tsunami affected people and are looking a Technical Officer / Construction Supervisor. The T.O. will provide supervision for all of SEED's construction in Mullaitivu district. He/She will report to the team representative and SEED management.

Dutied and Responsibilities

- Supervision of building construction
- Preparation of field monitoring reports
- Cooperation with community leaders/government officers/other NGO's INGO's
- Organization of site meetings
- Preparation of progress and evaluation reports
- Preparation of bills of quantity and plans

Qualifications and Experience Required

- NDT, NCT, or HNDE in civil Engineering
- Three years work experience in related field
- Ability to work in English and Tamil
- Computer literate with MS Office Excel

An attractive and negotiable compensation package consistent with qualifications and experience will be offered.
Interested candidates should forward their CV including contact telephone number and 2 non - related references by 31st January 2006 to:

SEED
No. 15, Karappankadu,
Vavuniya.
Telephone: 024 222 2911
E-Mail: seedva@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக அரங்கில் அரசியல் அதிகாரம் பெண்களின் கைகளுக்கு மாறும் போக்கு!

உலக வலம்

உலகின் பல பாகங்களிலும் இன்று பெண்கள் தலைமைத்துவ பதவிகளுக்குத் தெரிவுசெய்யப்படுவதும் அப்பதவிகளில் அவர்களை மக்களே தெரிவுசெய்து அமர்த்துவதும் பரவலாக இடம்பெற்றுவருவதைப் பார்க்கின்றோம்.

கடந்த காலங்களிலும் இவ்விதமான ஒரு போக்கு உலகில் பல நாடுகளில் தென்பட்டதுண்டு. அந்தவகையில் இந்தியாவின் இந்திராகாந்தி, பிரித்தானியாவின் மார்கரெட் தட்சர், இஸ்ரேலின் கோல்டா மெயர் ஆகியவர்கள் உலக வலாற்றில் முக்கிய சில திருப்பங்களுக்குக் காரணமாகியிருந்தார்கள்.

இவர்களில் மார்கரெட் தட்சரும் இந்திராகாந்தியும் கால் நூற்றாண்டுகளுக்குமேலாக உலக விவகாரங்களில் முக்கியமான பங்களிப்பைச் செய்திருந்தார்கள். குறிப்பாக இந்திராகாந்தி அம்மையார் இலங்கை மக்களால் அதுவும் தமிழ் மக்களால் ஒருபோதும் மறக்கமுடியாத ஒருவர். ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் நரித்தந்திரங்களுக்குள் சிக்கிவிடாமல் இலங்கை தமிழ் விவகாரத்தில் ஓர் இறுக்கமான நிலைப்பாட்டை எடுத்து தமிழர்களுக்கு உதவ முன்வந்தவர் அவர். துரதிருஷ்டவசமாக இடையில் மரணமானதால் அவரது தொலைநோக்கான ராஜதந்திரம் அனுபவமற்ற அவரது புதல்வரால் சிதறடிக்கப்பட்டுவிட்டது. அவரைச் சுற்றியிருந்த பிரகிருதிகள் தமது அனுபவம், ஆற்றல் மற்றும் அயல்நாட்டுக் கொள்கைகள் தொடர்பான தமது ராஜதந்திர மேதாவிலாசங்களைப் பிரமாதப்படுத்திக் காட்டி இந்தியாவின் இலங்கை தொடர்பான தமிழர் தொடர்பான கொள்கையையே மாற்றிவிட்டார்கள். அதனால், இலங்கைத் தமிழர்களின் 'தாய் நாட்டுப் பாசத்தையும்கூட மழுங்கடித்தார்கள்.

அது இருக்கட்டும், ஆசியாவிலும் ஏனைய நாடுகளிலும் அவ்வப்போது பெண்கள் தலைமைப் பதவிகளுக்கு தெரிவாகித்தான் இருந்தார்கள். அந்தவகையில் பாகிஸ்தானில் பெனாஸீர் பூட்டோ, இலங்கையின் சிறிமாவோ பண்டாரநாயக்க அவர் புதல்வி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க போன்றவர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் இருவரும் அனுதாபத்தின் மீதும் சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும் பதவிக்கு வந்தவர்கள்.

பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகார் அலிபூட்டோ சர்வாதிகார ஆட்சியாளர்களால் தூக்கிலிடப்பட்டதையடுத்து எழுந்த மக்கள் பேரெழுச்சியினால் பதவிக்கு வந்தவர் பெனாஸீர் பூட்டோ. அவரால் சில பல காரணங்களால் பதவியில் நீடித்திருக்க முடியவில்லை.

இந்திராகாந்தியும் அவரது தந்தையாரான ஜவஹர்லால் நேருவின் மரணத்தின் பின் பதவிக்கு வந்தவர்தான். ஆனால், தந்தையாரின் அருகில் இருந்து நாட்டின் - உலகின் அண்டை நாடுகளின் விவகாரங்களையெல்லாம் நன்கு அறிந்துவைத்திருந்தவர். இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் பால்ய பருவத்திலிருந்தே ஊறித் திளைத்தவர். அதனால், மக்கள் மனங்களைக்கவர்ந்து கொலைகாரர் கையால் உயிர் துறக்கும் கணம் வரை நாட்டுக்காகவும் உலக மேம்பாட்டுக்காகவும் உழைத்தவர் - இடைக்காலத்தில் பதவி ஆசையும் அதிகார மோகமும் கொண்ட மூத்த அரசியல்வாதிகளால் அவரை நாட்டு சேவையிலிருந்து அகற்றிவிட முடியவில்லை.

சிறிமாவோ பண்டாரநாயக்கா வீட்டில் முடங்கிக்கிடந்தவர். அரசியல் அனுபவமற்ற அவரை அவரது கணவரால் ஆரம்பிக்கப்பட்ட கட்சி சிதறிப்போகாமல் இருப்பதற்காக அரசியலுக்குள் தள்ளப்பட்டவர்; இழுத்து வரப்பட்டவர். ஒரு தாய் என்ற முறையில் இந்த நாட்டின் மக்கள் அனைவரையும் ஒரு வயிற்றுப்பிள்ளைகளைப் போல் பாவித்து, விரிந்து கிடந்த இனப்பாகுபாடுகளைக்களைந்து தேசத்தை ஒற்றுமையாக்கிச் சிறந்ததொரு தலைவியாக அவர் பிரகாசித்திருக்கமுடியும். மாறாக அவர் தமது கணவரின் பிற்காலக் கொள்கைகளைக் கூட கைவிட்டு, சிங்கள இனத்தை மட்டும் காப்பாற்றுவதற்குச் சத்தியம் செய்தவர் போல் விகாரமாதேவியின் பாணியில் தமிழரின் உரிமைகளைப் பறிப்பதையே நோக்கமாகக் கொண்டு செயற்படலானார். தமிழருக்கிருந்த சலுகையான சோல்பரி திட்ட ஷரத்துக்களையும் இல்லாமல் செய்தார். இறுதியில் தாம் கொண்டுவந்த புதிய அரசியல் திட்டத்தின் கீழேயே அரசியல் உரிமைகளையும் அதிகாரங்களையும் இழந்து பல வருடங்கள் முடங்கிப்போனார். துட்டுகைமுனு இளவரசன் என்று தாம் கனவு கண்ட புதல்வர் அவர் தயவிலும் இவர் தயவிலும் பதவிகளைப் பெற்று இன்று வாழ்வை நகர்த்திக்கொண்டிருக்கின்றார்.

உலகம் முழுவதும் ஆங்காங்கே பெண்கள் அவ்வப்போது நெடுங்காலமாகவே பெரிய பதவிகளை வகிக்கவே செய்துள்ளார்கள். ஆனால், ஆண் வர்க்கத்தினரின் அதிகரித்த ஆக்கிரமிப்பினால் அவர்களால் அரசியல் மற்றும் சர்வதேச மட்டத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை.

டார்பரில் தீவிரவாதிகளின் கொடுமை: ஐ.நா. அதிகாரி அறிக்கை

இந்த நிலையில் தற்போது உலக மட்டத்தில் உருவாகிவரும் ஒரு போக்கினைப் பார்க்கும்போது பெரிய பதவிகளில் அதுவும் பொறுப்பான பதவிகளில் பெண்கள் அமரப் போகிறார்கள் என்பதைக் காட்டுவதைப் போல் தோன்றுகிறது.

ஐரோப்பாவில்...

ஐரோப்பாவில் கடந்த சில மாதங்களுக்கு முன் ஜேர்மனியில் முதல் பெண் பிரதமரான அஞ்செலா மெர்கெல் தெரிவுசெய்யப்பட்டார். பின்லாந்தில் தார்ஜாலொனென் மீண்டும் அதிபராகத் தெரிவுசெய்யப்படக் கூடிய சாத்தியம் தென்படுகிறது. அயர்லாந்திலும் லட்வியாவிலும் ஏற்கனவே பெண் அதிபர்கள் பதவியில் இருந்துவருகிறார்கள். பிரான்ஸில் 2007இல் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் எதிர்க்கட்சியான சோஷலிசக் கட்சியின் வேட்பாளராக செகொலெனி ரோயல் நிற்கவிருக்கின்றார்.

ஆசியாவில்...

ஆசியாவில் கடந்த ஐந்த ஆண்டுகளில் பிலிப்பைன்ஸ் அதிபராக குளோரியா அரொயோவும் பங்களாதேஷில் பிரதம மந்திரியாக 2001ஆம் ஆண்டு பேகம் கலீதா ஷியா தெரிவு செய்யப்பட்டார். நியூஸிலாந்தின் பிரதம மந்திரியாக ஹெலென் கிளார்க் அம்மையார் 1999ஆம் ஆண்டிலிருந்து பதவி வகித்துவருகின்றார்.

பெண்களை அரசியல் வாழ்விலிருந்து வெகுகாலமாக ஒதுக்கிவைத்திருந்த ஆபிக்காவிலும்கூட இப்பொழுது சாவோ ரொமெ எற்பிரின்சிப்பே நாட்டின் மரியா டொகர்மோ சில்வீராவும் மொஸாம்பிக்கில் லுயிஸா டியோகோவும் பிரதமர்களாகப் பதவி வகிக்கின்றார்கள்.

லைபீரியாவில்...

இந்த நிலையில், சிலி நாட்டில் மிச்செல் பாச்சலெட் (54) அம்மையாரும் லைபீரியாவின் அதிபராக எல்லென் ஜோன்சன் செல்லீப் அம்மையாரும் அதிபர்களாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பது உலகில் அரசியல் பதவிகளில் பெண்களை அமர்த்தும் போக்கி மேலும் ஊக்கம் பெற்றிருப்பதையே காட்டுகின்றது.

அமெரிக்க அதிபர் பதவிக்கு கொண்ட லீஸா?

இதற்கிடையில், அமெரிக்காவில் அடுத்து வரும் ஜனாதிபதி தேர்தலில் இரண்டு முக்கிய பெண்கள் போட்டியில் இறங்கக் கூடிய சாத்தியக்கூறுகள் தெளிவாகத் தெரிகின்றன.

ஜனநாயகக் கட்சியின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரனின் துணைவியார் ஹில்லரி கிளின்ரன் அதிபர் போட்டியில் நிற்கவிருக்கிறார் என்ற தகவல் ஏற்கனவே வெளியாகியுள்ளது. அதேபோல் குடியரசுக் கட்சியின் சார்பில் இப்போதைய ராஜாங்க அமைச்சர் கொண்டலீஸா ரைஸ் அம்மையாரை நிறுத்தும் முயற்சியில் முக்கியஸ்தர்கள் முனைந்து நிற்கிறார்கள்.

கொண்டலீஸா ரைஸ் அம்மையாரை அதிபர் தேர்தலில் போட்டியிடச் செய்து தமது கணவருக்குப் பின்னர் அமெரிக்காவின் அதிபராகப் பார்க்கவிரும்புவதாக அதிபரின் துணைவியார் லாரா புஷ் தெரி[illegible] அரசியல் வானில் திரைக்[illegible]படும் அரசியல் சக்தியாக லாரா புஷ் கருதப்படுகிறார். அன்மையில் லைபீரிய அதிபர் பதவி ஏற்பில் கலந்துகொள்ளச் சென்ற உயர்மட்ட அமெரிக்க குழுவுக்கு லாரா புஷ் தலைமைவகித்து சென்றிருந்தார். லைபீரியாவின் அதிபராக எல்லென் ஜோன்சன் ஷெர்லீப் தெரிவுசெய்யப்பட்டிருப்பது பெண்களுக்கு எதிர்காலத்தில் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இருக்கின்றது என்று லாரா புஷ் கூறினார். லைபீரிய அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள எல்லன் ஜோன்சன் சேர்லீப், ஹவார்ட் பல்கலைக்கழகப் பட்டதாரியும் முன்னாள் உலக வங்கி அதிகாரியுமாவார்.

எப்பொழுதுமே முக்கிய அரசியல் விடயங்களில் மௌனம் காப்பவரான லாரா புஷ், கொண்டலீஸா தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்து கணவர் புஷ்ஷின் அங்கீகாரத்துடன் தான் செய்யப்பட்டுள்ளது. மேலும் குடியரசு வட்டாரங்களிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவேண்டும் என்று கருதப்படுகின்றது.

இரண்டு முதல் சாதனை

கொண்டலீஸா குடியரசுக் கட்சியின் வேட்பாளராகத் தெரிவுசெய்யப்படுவரானால் இரண்டு முதல் சாதனைகளை அக்கட்சி நிகழ்த்தியிருப்பதாகக் கருதப்படும். ஒன்று - முதன் முறையாகப் பெண் ஒருவர் தெரிவுசெய்யப்படுவது, இரண்டாவது - கறுப்பு இனத்தவர் ஒருவர் தெரிவுசெய்யப்படுவதாகும். திருமணமாகாத கொண்டலீஸா ரைஸ் அம்மையார் புஷ் குடும்பத்தின் நீண்டகால நம்பிக்கைக்குரிய நண்பராவார். தற்போதைய அதிபரின் தந்தையார் ஜோர்ஜ் புஷ் அதிபராகவிருந்த போது வெளிவிவகார ஆலோசகராகவும் அவர் பணியாற்றியிருந்தார்.

* * *

சூடானில் நடக்கும் கொடுமைகள்

சூடானில் டார்பர் பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்ட ஐ.நா. எடுத்த முயற்சிகள் யாவும் பயனளிக்காமல் போயுள்ளன.

ஆயுதம் தாங்கிய அரபு போராளிகள் தாம் விரும்பியதுபோல் கிராமங்களில் புகுந்து சகட்டு மேனிக்கு மக்களைச் சுட்டுத்தள்ளுவதும் கொள்ளையடிப்பதும் ஆள்கடத்துவதும் பெண்களை வல்லுறவுக்குட்படுத்துவதும் சர்வசாதாரணமாக நடந்துவருகின்றன.

லைபீரியாவின் அதிபராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள எல்லன் ஜோன்சன் சேர்லீப் அம்மையார்.

சூடானிலுள்ள ஐ.நா. அதிகாரி இத்தகவல்களை ஐ.நாவின் பாதுகாப்புச் சபைக்கு அறிவித்துள்ளார்.

டார்பரில் கொலைகளையும் பெண்கள் வல்லுறவுக்குட்படுத்தப்படுவதையும் தடுத்து நிறுத்தவேண்டுமானால் 12 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் அமைதிகாக்கும் படையினர் தேவைப்படுவார்கள் என்று ஜான் புரொங்க் என்ற அந்த அதிகாரி ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கார்டூழிலுள்ள அரபுக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சூடான் அரசு டார்பர் பிரதேசத்தைக் கவனிப்பதில்லை என்று கூறி பழங்குடிமக்கள் 2003ஆம் ஆண்டு முற்பகுதியில் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கினாலும் அதையடுத்தே டார்பர் பிரச்சினை விஸ்தீரணமடைந்தது. அரபு தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களை வழங்கி சூடான் அரசு டார்பர் மக்களைப் பழிவாங்கத் தொடங்கியது. 'ஜன் ஜவீட்' என்றழைக்கப்படும் அரசு ஆதரவு தீவிரவாதிகள், கொலைகள், வல்லுறவு, தீயிடுவது போன்ற செயற்பாடுகளில் இறங்கி கிராம வாசிகளை முகாம்களுக்குத் துரத்தினார்கள். இதை அரசு மறுத்துவருகின்றது.

500 அல்லது ஆயிரம் பேர் கொண்ட அரபுத் தீவிரவாதிகள் ஒட்டகங்கள், குதிரைகளில் வந்து கிராமங்களில் புகுந்து அட்டகாசம் புரிந்து மக்களைத்துரத்திவிடுகிறார்கள். இந்[illegible] கொலை, கொள்ளை, [illegible]படுகிறார்கள் என்று ஐ.நா. அதிகாரி தெரிவித்துள்ளார்.

சிலி நாட்டின் அதிபராகப் பதவி ஏற்கும் மிக்செல் பாச்சவெற்

மூன்று வருடங்களாக நடைபெற்றுவரும் கொலைகளைப் பார்க்கையில் எமது அமைதியை நிலைநாட்டும் முயற்சி தோல்வி கண்டுவிட்டது என்றே கூறவேண்டும். அரபுத் தீவிரவாதிகள் கிராமத்துக்குக் கிராமம் புகுந்து இன சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார். டார்பருக்கு அமைதிகாக்கும் படையொன்றை அனுப்புவது பற்றி ஐ.நா. ஆலோசித்துவருகின்றது. ஆபிரிக்க யூனியன் தற்பொழுது அங்கு 7 ஆயிரம் பேர் கொண்ட ஒரு படையை நிறுத்தியுள்ளது.

எல்லாவித வன்[illegible]களும் கொண்ட நடமாடும் படைகளை நிறுததத் தாக்குதல்களை முறியடிக்கவேண்டும். தீவிரவாதிகளின் ஆயுதங்களை அப்புறப்படுத்தவேண்டும் என்று அந்த அதிகாரி பாதுகாப்புச் சபையிடம் தெரிவித்துள்ளார்.

* * *

உயிரியல் ஆயுதங்கள்

மேற்கு நாடுகளை இப்பொழுது அணு ஆயுதங்களைவிட உயிரியல் ஆயுதங்களே பெரிதும் அச்சுறுத்தும் நிலையில் உள்ளன.

வாஷிங்டனிலுள்ள பயங்கரவாத எதிர்ப்பு நிபுணரான ஹென்றி கிரம்ப்டன் என்பவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

அல்கெய்டா போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கு இம்மாதிரியான பெரிய எண்ணிக்கையில் மனிதர்களைக் கொல்லக் கூடிய ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வது அவ்வளவு கடினமாக இருக்காது என்று அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கிரம்ப்டன் முன் சி.ஐ.ஓ எனும் உளவு அமைப்பில் 20 வருடங்கள் பணிபுரிந்துள்ளார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் இன்னும் பல தசாப்தங்களுக்கு நீடிக்கக்கூடும். எதிர்காலத்தில் போர்களை நாம் எதிர் கொள் ளக்கூடிய முறைகளையும் இது மாற்றிவிடக் கூடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அடிமைகளுக்காக மன்னிப்புக் கோரும் இங்கிலாந்து தேவாலயம்

மன்னிப்புக் கேட்கவுள்ள இங்கிலாந்துத் தேவாலயம்

அடிமைகளை வைத்திருக்க அனுமதித்தமைக்காக இங்கிலாந்துத் தேவாலயம் அடுத்த மாதம் மன்னிப்புக் கேட்க விருக்கின்றது.

பிரிட்டனில் அடிமைகளை வைத்திருப்பது ஒழிக்கப்பட்டு 200 வருடங்கள் முடிவடையும் தினம் அடுத்த மாதம் கொண்டாடப்படவிருப்பதையொட்டி இந்த மன்னிப்புக் கோரல் முன்வைக்கப்படவிருக்கின்றது.

அடிமைகளை வைத்திருப்பதற்கு தேவாலயம் வழங்கியிருந்த பங்களிப்பினை ஏற்றுக்கொண்டு அதனால், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் ஆறுதல் அளிக்கும் விதத்தில் மன்னிப்புக் கோர வேண்டும் என பல மதத்தலைவர்கள் ''சேர்ச் ஒப் இங்கலன்ட்'' தேவாலய நிர்வாக மேலிடத்தை வற்புறுத்தி வருகிறார்கள்.

இறைவனின் முன்னால் அவர்கள் தமது பாவத்தை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தப் போவதாக பிளக்பேன் ஆதீனத்தைச் சேர்ந்த வண.சிமோன் பெசன்ட் என்ற போதகர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் நற்சிந்தனையைப் பரப்புவதற்காக தேவாலயம் அல்லது அதன் மிஷனரிகள் பார்படோஸில் தோட்டங்களை வைத்திருந்தார்கள். அங்கு அவர்களிடமிருந்து பணிபுரிந்த அடிமைகளின், மார்புகளில் 'சொஸைட்டி' என்ற சொல்லை பழுக்கக் காய்ச்சிய இருப்பினால் போறித்திருந்தார்கள். அடிமைகள் விடுவிக்கப்பட வேண்டிய நிலைவந்தபோது எக்ஸெட்டர் பிஷப்பானவர் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக்கொண்டார் என்று மெஸன்ட் கூறினார். இது வெகு காலத்துக்கு முன் நடந்த சம்பவம். ஆனால், இங்கிலாந்துத் தேவாலயம் ஒரு பங்காளியாய் இருந்துள்ளது. அதை அங்கீகரித்தாக வேண்டும் என்று அவர் கூறினார்.

*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

THE HALO TRUST

VACANCY

THE HALO TRUST INVITES APPLICATIONS FROM SUITABLE CANDIDATES FOR THE FOLLOWING POSITION FOR ITS OFFICE IN JAFFNA.

DATABASE OFFICER

DESIRED QUALIFICATIONS:

- Demonstrated competence and experience with Microsoft Access, Excel & Word
- Perfect spoken English
- Fluency in Sinhala
- A valid driving license for light vehicles would be an advantage

Women candidates are encouraged to apply

PLEASE SEND YOUR CV WITHIN 7 DAYS TO REACH;

THE PROGRAMME MANAGER
THE HALO TRUST
655, NAVALAR ROAD,
JAFFNA.

(C/45453)

இரத்தப் பரிசோதனை அதிகாரிகள் இடமாற்றம்

வரணி மத்திய மருந்தகத்தில் மலேரியா இரத்தப் பரிசோதனை உத்தியோகத்தராகக் கடமையாற்றிய எஸ்.கணேஸ்வரன் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

அதேவேளை, பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கடமையாற்றிய ஜெ.ஜெகதீஸ்வரன் இவரது இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (எ-170)

யாழ்ப்பாணத்தில்

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின்
வாழும் கலைப்பயிற்சி

நாள்:- 22.01.2006 ஞாயிற்றுக்கிழமை
மாலை 4.30மணி

பயிற்சி பற்றிய இலவச அறிமுகஉரை

இடம்:- நல்லூர் கம்பன் கோட்டம்

பயிற்சி நாள்கள்:- 23.01.2006 முதல் 28.01.2006வரை
பயிற்சி நேரம்:- மாலை 4 மணிமுதல் 6 மணிவரை

மேலும் தொடர்புகளுக்கு: 0779059544, 0776160214

www.artofliving.org (45812) www.srisriravishankar.org

தாதியர் பட்டப்படிப்புக்கு அடுத்த மாதம் அனுமதிப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 22

திறந்த பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்ட தாதியர் பட்டப்படிப்பு கற்கைநெறிக்கு (B.Sc.) விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதிப்பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பிராந்திய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பட்டப்பாடநெறிக்கு இதுவரை விண்ணப்பிக்காத தாதியர்கள் எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

தாதியர் பயிற்சிப் பாடசாலையில் பயின்று இலங்கை மருத்துவ சபையில் தம்மைப் பதிவு செய்த தாதியர்களே இந்தப் பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்-

இவற்றுடன், விண்ணப்பதாரிகள் 2 வருடங்கள் தாதியர் சேவையைப் பூர்த்தி செய்திருப்படன், ஜி.சி.ஈ.உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்- என்று திறந்த பல்கலைக்கழக பிராந்திய இயக்குநர் ஆ.ஞானேந்திரன் தெரிவித்தார். (எ-12)

வரணி மருந்தக அபிவிருத்திக்கு ரூபா 2 லட்சம் ஒதுக்கீடு

வரணி, ஜன. 22

வரணி அரசினர் மத்திய மருந்தகத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கென 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் குழாய்க் கிணறு ஒன்றை அமைக்கவும், பழுதடைந்துள்ள குடிதண்ணீர் விநியோகக் குழாய்களைத் திருத்தியமைக்கவுமே இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும்-

யாழ் பிராந்திய சுகாதாரத் திணைக்களம் இந் நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-170)

மருந்துக் கலவையாளர் பயிற்சி அடுத்த மாதம்

யாழ்ப்பாணம், ஜன.22

சுகாதாரத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள மருந்துக்கலவையாளர்களுக்கான பயிற்சிகள் அடுத்த மாதம் ஆறாம் திகதி ஆரம்பமாகும் என்று பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவர்களுக்குரிய பயிற்சிகள் யாவும் யாழ். பண்ணையில் உள்ள காசநோயாளர் வைத்திய சாலையின் பயிற்சிக் கூடத்தில் நடைபெறும்.

மருந்துக் கலவையாளர்களுக்கென பயிற்சிகள் வழங்குவதற்கு நேர்முகப் பரீட்சைகள் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் இந்தப் பயிற்சிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்-என்று சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (எ-13)

G.C.E (O/L) இன் பின்னர்..... தெரிவு செய்ய வேண்டிய மிகச் சிறந்த பாதை

FOUNDATION DEGREE PROGRAMME

- மிகக்குறுகிய காலத்தில் சர்வதேச அங்கீகாரம் கொண்ட தகைமைகள்
- தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம், ஆளுமை விருத்தி ஆகிய துறைகளில் பரந்துபட்ட பயிற்சி நெறி
- UK, Canada, Australia, New Zealand போன்ற நாடுகளில் பட்டப்படிப்பினை தொடர்வதற்கான அடிப்படை பாடநெறி
- வெளிநாடுகளில் உயர்கல்வியை தொடர்வதற்கான Student Visa வினை பெற்றுக்கொள்ளஅவசியமான தராதரங்களை வழங்கும் கற்கை நெறி
- O/L பரீட்சையின் பின்னரான ஓய்வு காலம், Foundation Degree Programme இனை பயில்வதன் மூலம் பயன்படுகிற போது உங்கள் எதிர்கால வாழ்வுக்கான வளமான அடித்தளம் இடப்படுகின்றது.
- பாடப்பரப்பு
  - Information Technology
  - English Communication
  - Personality & Skills Development
- பாடநெறிக்காலம்
  3 மாதங்களைக் கொண்ட முழு நேர பாடநெறி
- கற்கை நெறியின் பயன்பாடு
  1. உடனடி வேலை வாய்ப்பு
  2. உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் உயர்கல்வி

LIFE LONDON INSTITUTE OF FURTHER EDUCATION

25 A, Hospital Road, Dehiwala. Tel : 011 5518666, 0777 715788

CoolWIN Ads

Danish Refugee Council (DRC)

Vacancy

Construction Advisor — Civil Engineering

The Danish Refugee Council works to promote lasting solutions to the problems of refugees and internally displaced persons throughout the world. In Sri Lanka, DRC supports reintegration of returned persons in the North and East and capacity building of local partner organizations. DRC's head office is located in Vavuniya, with district offices in Trincomalee and Kilinochchi.

The Construction Advisor provides technical guidance and support to DRC's field officers and partner staff to ensure that all construction activities (small-scale infrastructure including pre-schools, toilets, wells, roads and culverts, etc.) are implemented according to technical design and standards. The position is based in Vavuniya and entails frequent travel to project sites throughout all DRC districts of operation.

Qualifications:

- B.Sc. Civil Engineering and/or membership in the Institute of Engineers of Sri Lanka;
- Minimum of five years relevant experience in supervising basic infrastructure activities;
- Fluency (spoken and written) in English & Tamil;
- Excellent inter-personal skills and demonstrated ability to work as part of a multi-disciplinary team;
- International NGO experience preferred;
- Willing to live, work and travel in N.E. Sri Lanka is mandatory.

Please forward your curriculum vitae along with contact telephone numbers and names of three work-related referees to the following address by Tuesday, January 31. The position title should be indicated on the top left hand corner of the envelope in applications sent by post.

Head of Administration and Finance
Danish Refugee Council
77 First Cross Street, first floor
Vavuniya 43000
Fax no. 024-2224009
E-mail: drc-hfa@sltnet.lk

(C/47428)

தேவை

எமது ஸ்தாபனத்தில் பணிபுரிவதற்கு கணக்கியல் மற்றும் கணனி அறிவும் உடைய பெண் ஊழியர் தேவை. (25வயதிற்கு உட்பட்டவர்) கீழ்காணும் முகவரியில் நேரில் தொடர்பு கொள்ளவும் / விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

CITY MEDICALS,
487, HOSPITAL ROAD,
JAFFNA.

(45858)(26-16-19)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 24 - 05 - 1924



மறைவு 23 - 12 - 2005

அமரர் கதிரேசு குமாரசாமி

(இளைப்பாறிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் - வட்டுக்கோட்டை)

மனிதருள் மாணிக்கமாய் மாண்புடைப் பொறியியலாளராய்
அன்பின் சிகரமாய் பண்பின் பிறப்பிடமாய்
இன் சொல்லின் இருப்பிடமாய் கடமையில் கண்ணியமாய்
நேர்மையில் நிறைகுடமாய் குடும்பத்தின் குலவிளக்காய்
துன்பத்தில் துயர்துடைத்து இன்பத்தை எமக்களித்த
வட்டு நகர் பெற்றெடுத்த மாணிக்கமே!
உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை நாடுகின்றோம்.

அன்னார் சிவபதமடைந்த செய்தியறிந்து இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி, தபால் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது இல்லம் நாடி வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இன்று அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்பவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு.திருமதி.வே.கண்ணபிரான்,
இல.[illegible] வீதி,
[illegible]டை.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(45859)(26-16-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மீண்டும் இடப் பெயர்வு!

தமிழர் தாயக வரலாற்றிலேயே முன்னெப்போதும் இல்லாத பாரிய இடப்பெயர்வுக்கு முகம் கொடுத்தது யாழ்ப்பாணக் குடாநாடுதான்.

1995.10.30...

அன்றைய தினத்தில் வலிகாமத்திலிருந்து ஒட்டுமொத்த மக்களும் ஓர் இரவுக்குள் கையில் அகப்பட்டதைக் காவிக்கொண்டு இருப்பிடம் இழந்து நடந்ததை எவருமே மறந்துவிடமுடியாது.

போர் மிகவும் கொடியதுதான். ஆனால், அதைவிடவும் கொடியது சொந்த வாழ்விடத்தைத் தொலைத்து அகதியாவது தான். இத்தகைய அகதி வாழ்வின் அவலங்களை பல தடவைகள் அனுபவித்துப் பழக்கப்பட்டவர்கள் - அலுத்துப் போனவர்கள் குடாநாட்டு மக்கள்.

ஒவ்வொரு மனிதனும் தனது சொந்த மண்ணில் சுதந்திரமாகத் தொழில் செய்து நிம்மதியாக வாழுகின்ற உரிமையுடையவன். அத்தகைய பொது உரிமையை மறுப்பதோ - தடுப்பதோ கொடுமையிலும் கொடுமையானது.

இந்த வாழ்வியல் உரிமை மறுக்கப்பட்ட ஈழத் தமிழினத்திற்கு ஆதரவாக - உரிமை மறுப்புக்கு எதிராக சர்வதேச சமூகம் ஏதேனும் ஆக்கபூர்வமான கருத்துக்களை - வெளியிட்டிருக்கின்றதா? - நடவடிக்கைகளை எடுத்திருக்கிறதா என்றால் இல்லை என்பதே பதிலாகிறது.

இந்த நிலையில் குடாநாட்டு மக்கள் மீண்டும் ஓர் இடப்பெயர்வுக்கு தங்களைத் தயார்ப்படுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

1996, 97 காலப் பகுதியில் குடாநாடு அரச படைகளின் கட்டுப்பாட்டில் வந்த போது இராணுவத்தினர் குடாநாட்டின் இளம் சந்ததியினர் கணிசமானோரை சூறையாடியிருந்தனர்.

அப்போது குடாநாட்டில் காணாமல் போன இளைஞர், யுவதிகளுக்கு கணக்குச் சொல்லி முடிக்கவில்லை. அதற்கிடையில் மீண்டும் 'காணாமல் போதல்' படலம் தலைதூக்கத் தொடங்கியிருக்கிறது.

1995 இல் வலிகாமத்திலிருந்து மக்களை இடம் மாற்றுவது என்று விடுதலைப் புலிகள் எடுத்திருந்த முடிவு முற்றிலும் தவறானது - யதார்த்தமற்றது - என்று அப்போது பலரும் விமர்சித்தார்கள்; வசை பாடினார்கள்; ஆனால், புலிகளின் தலைமையினுடைய அந்த முடிவின் வரலாற்று முக்கியத்துவத்தை - அவசியத்தை - பின்னர் அவர்களே உணரத் தலைப்பட்டார்கள் என்பது மறுக்க முடியாதது.

இது இவ்வாறிருக்க, முன்னைய இடப் பெயர்வுகளின் வலியிலிருந்து எமது மக்கள் முற்றாக மீள்வதற்கு முன்னர் மீண்டும் ஓர் இடப்பெயர்வுக்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக குடாநாட்டின் இளைஞர், யுவதிகள் தமது பாதுகாப்புக் கருதி இடம் பெயர வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

காலத்தின் தேவை உணர்ந்து இதுவரை சுமார் 4 ஆயிரத்து 500 பேர் குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வன்னிப் பகுதிக்கு வந்திருக்கின்றார்கள்.

இவ்வாறு வந்தவர்களில் சிலரோடு மனம்விட்டு உரையாடினோம். அவர்களின் மன ஆதங்கங்களை இங்கு உங்களோடும் பகிர்ந்து கொள்கிறோம்.

வன்னியிலிருந்து
அலங்காரன்

"...பிரேதம் கொண்டு போறதுக்கும் அவையிட்டை அனுமதி எடுக்கோணும்..."

சுப்பிரமணியம் - யோகநாதன்
கெற்பேலி புதுவாழ்வுத் திட்டம்
(வயது 34)
4 பிள்ளைகளின் தந்தை

நான் முகமாலையில் மூட்டை தூக்கும் வேலைதான் செய்துவந்தனான். இப்பொழுது முகமாலைக்கு வேலைக்குப் போகேக்க எங்களைச் சந்தேகப்படுகிறாங்கள். காலையில் வேலைக்குப் போனால் துருவித் துருவிச் சோதிச்சுப்போட்டுத்தான் உள்ளுக்கு எடுக்கிறார்கள்.

வேலை செய்யத் தொடங்கினதுக்குப் பிறகும் அடிக்கடி அங்க வந்து சந்தேகக் கண்கொண்டுதான் பார்க்கிறார்கள். அவர்களைப் பார்க்க ஒரே பயமாக்கிடக்கு.

எங்கட ஊரில் சனங்களைவிட அவர்கள் தான் கூட. எங்க பார்த்தாலும் நிக்கினம். எல்லாத்துக்கும் அவர்களிட்ட அனுமதி எடுக்கோணும். இப்ப முந்தி இருந்ததைவிட கெடுபிடிகள் மோசம்.

ஊரில் ஒரு செத்த வீடென்டால் பிரேதத்தை சுடலைக்கு கொண்டு போறதுக்கும் அவர்களின் அனுமதி தேவை. சுடலைக்குப் பிரேதம் கொண்டுபோகேக்க அவர்களும் நாலைஞ்சு பேர் பின்னால வருகினம். அப்படியான இடத்தில என்னெண்டு வாழுறது எண்டு போட்டுத்தான் என்ன கஸ்ரம் வந்தாலும் பரவாயில்லை நிம்மதியா வாழ்ந்தால் போதும் எண்டிட்டு இஞ்ச வந்திட்டம்.

இஞ்ச பரந்தனில ஒரு இடத்தில இருக்கிறம். தொழில் ஒண்டும் கிடைக்கையிலை. இனித்தான் ஏதும் தொழில் தேட வேணும். இதுவரைக்கும் ஒரு உதவிப் பொருள்களும் எங்களுக்கு கிடைக்கேல. எப்படியாவது இஞ்ச உதவிகள் தருவினம் தானே எண்ட நம்பிக்கையில் எடுக்கக் கூடியதை எடுத்துக்கொண்டு வந்திட்டம்.

"...கூலி வேலை செய்தாலும் நிம்மதியாக வாழவேணும்..."

க.சிவஞானம்
காரைநகர், ஊரி. (45 வயது)
5 பிள்ளைகளின் தந்தை.

எப்ப, என்ன, நடக்கும் எண்ட நிலைமையில்தான் இப்ப யாழ்ப்பாணம் இருக்கு... பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு அங்க இருக்க முடியாது. நாளாந்தம் பேப்பரைப் பாக்கப் பயமாக் கிடக்கு.

நான் கடற்றொழில்தான் செய்துகொண்டு வந்தனான். ஆனால், இப்ப நேவிக்காரர் ஒரே அட்டகாசம். மீன்பிடிக்கப் போக விடமாட்டார்கள். 'பாஸ்' கெடுபிடிகள் இப்ப மோசம். கடலில் வைத்தும் கண்டபடி அப்பாவி மீன்பிடி காறருக்கு அடிக்கினம்.

தொழில் இல்லாமல் எப்படி அங்க சீவிக்கிறது... எங்கட ஊர்ச்சனம் கொஞ்சம் கொஞ்சமாக இங்காலை வந்து கொண்டிருக்குது. அதாலதான் நாங்களும் வந்து சேர்ந்திட்டம்.

காரைநகர் சென்றியில் நிற்கிறவர்கள் நாங்கள் வரேக்க சாமான்கள் கொண்டு வந்தால் விடமாட்டினம் எண்டு தெரிஞ்சு ஒரு சாமான்களும் எடுக்காமல் உடுத்த உடுப்போடதான் வன்னிக்கு வந்தனாங்கள்.

அப்படியிருந்தும் எங்க போறீங்கள் எண்டு கேட்டார்கள்... நாங்கள் யாழ்ப்பாணம் போறோம் எண்டு சும்மா சொல்லிப்போட்டு வந்து சேர்ந்திட்டம்.

இஞ்ச பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்துப் படிப்பிக்கப் போறன். அதுகள் எண்டாலும் நிம்மதியாகப் படிச்சு முன்னேறட்டும். நான் கூலி வேலைக்குத்தான் போகப் போறன். கூலி வேலை செய்தாலும் மற்றவனுக்குப் பயப்பிடாமல் நிம்மதியா வாழத்தான் நாங்கள் விரும்புறம்.

"...நாய் குலைக்கிற சத்தம் கேட்டாலே சனங்கள் பயத்தில நடுங்குதுகள்..."

ரதிக்குமார் சாந்தரூபி
கொடிகாமம்.
இரண்டு பிள்ளைகளின் தாய்

எங்கட வீடு கொடிகாமத்தில் இருக்கு. அங்க ஒரே பிரச்சினைதான். ஊர் முழுக்க இரவு பகலா படையினர் நடமாடுகிறார்கள். பார்க்கவே பயமாக் கிடக்கு. சிலபேற்ற வீடுகளுக்குள் இரவில் புகுந்து சோதிக்கிறதும், ஆக்களைப் பிடிச்சுப் போறதுமாக நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக்கொண்டு போகுது. நாய் குலைக்கிற சத்தம் கேட்டால் சனங்கள் பயந்து நடுங்குதுகள்.

எங்கட வீட்டை இதுவரைக்கும் வரேல்ல. ஆனால், இனி வரமாட்டினம் எண்டு சொல்லேலாது தானே... அதாலதான் நாங்கள் இஞ்ச வந்தனாங்கள். இஞ்ச சாமான்கள் தாறதெண்டு சொன்னவை. இருக்கிறதுக்கு இடமும் தருவினமாம். பிரச்சினை இல்லாமல் இருக்கலாம் தானே. காலமை பின்னேரம் அவர்களைப் பார்த்துப் பயந்து கொண்டு அங்க கிடந்து சாகிறதைவிட இஞ்சை நிம்மதியாக வாழலாம்.

"...திரும்பிப் பாக்கிற இடமெல்லாம் நிக்கிறார்கள்..."

கோவிந்தன் வெங்கடாசலம்
மணற்காடு. (வயது 55)
2 பிள்ளைகளின் தந்தை

நாங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமிலதான் வசித்து வந்தனாங்கள். எங்கட இடம் கரையோரப் பகுதி என்டதால அங்க இராணுவத்தினர கெடுபிடிகள் முன்னர் இருந்ததை விடவும் கூடுதலா இருக்கு.

96 ஆம் ஆண்டு ஒருக்கா இடம்பெயர்ந்து இங்கவந்தோம். அப்பொழுது ஒரு சொப்பிங் பாக்குடன் தான் வந்து சேர்ந்தோம். ஒரு சாமான்களும் எடுக்கவேயில்லை. அதேபோல் இனியும் ஒரு நிலை வந்தால் திரும்பவும் எல்லாவற்றையும் விட்டுட்டு வந்த ஒண்டும் செய்யேலாது. அதுதான் நேரத்தோடயே வெளிக்கிட்டு சாமான்களையும் ஏத்திக்கொண்டு வந்தனாங்கள்.

இப்பவெல்லாம் படையினரைப் பாக்கவே பயமாக்கிடக்கு. திரும்பிற இடமெல்லாம் நிக்கினம். கறுப்புத் துணியால முகத்தைக் கட்டிக்கொண்டு பார்க்கிறாங்கள். முந்தியெல்லால் சந்தேகம் எண்டு பிடிச்சுக் கொண்டு போனால் விசாரித்துப் போட்டு விட்டிடுவார்கள். இப்ப விடுவதில்லை. நிலைமை இப்படியிருக்கேக்க நாங்கள் வளர்ந்த பிள்ளைகளையும் வச்சுக்கொண்டு என்னெண்டு அங்க இருக்கிறது.

"...அவையளுக்கு இரை குடுக்கவே பிள்ளைகளை வளர்த்தவாங்கள்..."

குடாநாட்டைச் சேர்ந்த
மூதாட்டி ஒருவர்

யாழ்ப்பாணத்தில் எல்லா இடமும் இளம் பிள்ளைகளை ஒவ்வொருதராக சுடுகிறார்கள்.

நீர்வேலியில,புத்தூரில, உரும்பிராயில தச்சந்தோப்பில எண்டு எங்கும் தேடித் தேடிச் சுடுகிறார்கள். எங்களைச் சுட்டாலோ, எங்கட பிள்ளையளை அடிச்சுக் குத்திக் கொடுமைப் படுத்தினாலோ கேக்கிறதுக்கு ஒருதரும் இல்லையெண்ட துணிவில தங்கட எண்ணப்படி அட்டகாசம் போடுகினம்.

சந்திக்குச் சந்தி முழத்துக்கு முழம் அவயின்ற இஸ்ரம் தான். இவருக்கும் வயது போட்டுது. வருத்தக்காறன். வயதுக்கு வந்த பிள்ளையளையும் வைச்சுக்கொண்டு அங்க இருக்கேக்க அதுகளைப் பிடிச்சுக் கொண்டு போனாலும் தேடித் திரிய எங்களால ஏலாது. கஸ்ரப்பட்டு பிள்ளையள வளர்த்துப் போட்டு இரை குடுக்கிறதே... அது தான் நடக்கிறது. நடக்கட்டும் எண்டு நினைச்சுக் கொண்டு இஞ்ச வந்திட்டம்.

இஞ்ச எங்களுக்கு மூண்டு நேரமும் சாப்பாடு தருகினம் இருக்கிறதுக்கு இடமும் தாறதெண்டு சொல்லியிருக்கினம்.

நிம்மதியில்லாமல் பயந்து பயந்து எத்தினை நாளைக்குச் சீவிக்கிறது. எங்கட கண்ணுக்கு முன்னால - நாங்கள் பாத்துக் கொண்டு நிக்கவே எங்கட பிள்ளையளை இழுத்துக் கொண்டு போனா எங்களாலை என்னதான் செய்யமுடியும்....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவி வெற்றிடங்கள்

கொழும்பிலுள்ள பிரபல நிறுவனமொன்றில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்குத் தகுதியான வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின் றன.

1. பொறியியலாளர்கள்
2. முகாரிமார் (FOREMAN)
3. ஒட்டுநர்கள் (WELDERS)
4. கடைச்சல் ஒட்டுநர்கள் (LATHE OPERATORS)
5. பொருத்துநர்கள் (FITTERS)

தொழில்சார் கல்வித்தராதரம், வேலை முன் அனுப வம் உடையோர் தமது சுயவிவரம் மற்றும் உறவினரல் லாத இரு நடுவர்களது பெயர்கள் மற்றும் விலாசம், தொடர்புகொள்ளத்தக்க தொலைபேசி இலக்கங்கள் ஆகிய விவரங்களை அறியத்தரவேண்டும்.

விண்ணப்பதாரிகள் 50 வயதிற்கு உட்பட்டோராய் இருத்தல் விரும்பத்தக்கது.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை இன் றிலிருந்து 7 நாள்களுக்குள் கிடைக்கக்கூடியதாக

விளம்பர இல.2787
உதயன் பணிமனை,
561, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும். விண் ணப்பங்களை உதயன் பணிமனையில் கையளிப்பின் விளம்பரதாரருடன் நேரில் தொடர்புகொள்ள வசதி செய் யப்படும்.

(சி/47464) (24-16-18)

கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிலையத்தின் நிர்வாகியின் சகோதரனும் விக்கினேஸ்ரா வீதி, சங்கானையைப் பிறப்பிடமாவும் கொண்ட

அமரர்

பொன்னர் தெய்வேந்திரம்

17.01.2006 இல் இறைபதம் எய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த துயருற்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

(45887) ஆசிரியர்களும், மாணவர்களும்.
(24-16-17) **கேம்பிரிட்ஜ் கல்வி நிலையம், சங்கானை.**

கணனிப் போதனாசிரியர் தேவை

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் கணனிப் பயிற்சி நிலையத்திற்குப் பகுதிநேர, முழுநேர போதனாசிரியராகக் கடமைபுரிய தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் Microsoft office, Desktop publishing, Computer programming, Auto Cad, web designing, Vidio editing, Graphic designing போன்ற கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்தி ருப்பதோடு, மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளில் போதனாசிரியராக கடமையாற்றிய முன் அனுபவம் வேண்டப்படுகிறது.
- யாழ் நகரப் பகுதிக்கு அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- வார நாள்களிலும், சனி, ஞாயிறு தினங்களிலும் நேர அட்டவணைக்கு ஏற்ப விரிவுரைகள் நடத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பப் படிவங்களைச் சுயமாகத் தயாரித்து தபால் மூலமா கவோ, நேரடியாகவோ அனுப்பிவைக்கலாம்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (TRRO LTD)
106, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவலைகளில் முதலாம் ஆண்டு

தோற்றம்	மறைவு
19	02
-	-
01	02
-	-
1929	2005

அமரர் **பாலு சிவ்வாத்தங்கம்**

திதி: 22.01.2006

கொட்டிய அன்பு எங்கே?
குளிர் மிகுவார்த்தை எங்கே?
மட்டிலா மகிழ்வுகாட்டி
மகிழ்ந்திட்ட நாள்கள் எங்கே?
பட்டிடும் வேதனைகளை எழுதிட வார்த்தை இல்லை
என்றும் உங்கள் நினைவுகளுடன்....

இல.23, 5ஆம் ஒழுங்கை,
அரசடி றோட், நல்லூர்,
யாழ்ப்பாணம். (45868) (24-18-16)

பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

மண்டைதீவுச் சந்தியில் படையினர் தீவிர சோதனை

மண்டைதீவு, ஜன.22

மண்டைதீவுச் சந்தியில் நிலைகொண் டுள்ள படையினர் அப்பகுதியூடாகச் சென்று வரும் பயணிகளை தீவிர சோதனைக்கு உட் படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக மண்டைதீவுச் சந்தியில் உள்ள சோதனை நிலையத்தில் பயணிகள் அனை வரும் தீவிர உடற்சோதனைக்கு உட்படுத்தப் படுகின்றனர்.

பயணிகள் எடுத்துச் செல்லும் சகல வித மான பொருள்களும் இந்த நிலையத்தில் படையினரால் நுணுக்கமாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. (எ-88)

மாதகல் மக்கள் வன்னிக்கு இடம்பெயர்வு

வலி.தென்மேற்கு,ஜன.22

மாதகல், மாரீசன்கூடல் ஆகிய பகுதி களைச் சேர்ந்த கடற்றொழிலாளர் குடும்பங் களில் சில தினங்கள் கடற்றொழிலில் பாதிப் படைந்துள்ள காரணத்தினால் வன்னிப் பிர தேசத்திற்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளன.

மாதகல் துறை, மாரீசன்கூடல், குசுமான் துறை ஆகிய இடங்களில் கடற்றொழில் ஈடு பட்டுவந்த கடற்றொழிலாளர்களை அந்த இடங்களில் தொழில்புரிய வேண்டாம் என்று அங்கு நிலைகொண்டுள்ள கடற்படை யினர் பணிப்புரை விடுத்திருந்தமை தெரிந் ததே.

இதனை அடுத்து இப்பகுதியிலுள்ள கடற்றொழிலாளர்கள் குடும்பங்கள் பெரும் பாதிப்படைந்ததுடன், செய்வதறியாது தடு மாறிக் கொண்டிருக்கின்றனர். இதனால் விரக்தியும், கவலையும் அடைந்த பல குடும் பங்களைச் சேர்ந்தவர்கள் வன்னிப் பிரதேசத் திற்குச் செல்ல ஆரம்பித்துள்ளனர். (எ-135)

சிறப்புற நடைபெற்ற நூல் வெளியீடு

நல்லூர், ஜன.22

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உயிர் இரசாயனவியல்துறைப் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திருமதி சறோஜினி பேரானந்தம் ஆகியோர் இணைந்து எழுதிய "உணவும் போசனையும் " நூல் வெளியீட்டு விழா கோப்பாய் ஆசிரியர் கலா சாலையில் அண்மையில் நடைபெற்றது.

கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் வடக்கு- கிழக்கு மாகாண முன்னாள் கல்விப்பணிப்பாளர் செல்வி தி.பெரியதம்பி, யாழ். பல்கலைக்கழக வாழ் நாள் பேராசிரியர் எஸ். பாலசுப்பிரமணியம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன் னாள் அதிபர் எஸ்.பரஞ்சோதி, வைத்திய கலாநிதி எஸ்.சிவபாலன், நூலாசிரியர்கள் பேராசிரியர்கள் செல்வி வசந்தி அரசரத்தி னம், திருமதி சறோஜினி பேரானந்தம் ஆகி யோர் உரை நிகழ்த்தினர்.

"உணவும் போசனையும்" நூலின் முதற் பிரதியை பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளையிடம் இருந்து இலங்கை வங்கி முகாமையாளர் என்.சச்சிதானந்தம் பெற்றுக் கொண்டார். (எ-111)

நூல் வெளியீட்டு விழா

கரவெட்டி,ஜன.22

பிரபல ஆங்கில ஆசிரியர் எஸ்.போஜியா பிரான்சிஸ் எழுதிய "தமிழில் ஆங்கில இலக் கணம்" என்ற நூலின் வெளியீட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சக்கோட்டையிலுள்ள பலோமினா ஜோர்ச் நினைவாலயக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை அதிபர் ம.ஜெயவரதராஜா தலைமையில் இடம்பெறும் இந்த வெளியீட்டு விழாவில் பாராட்டுரைகளைச் சக்கோட்டை பங்குத் தந்தை அருட்பணி எம்.பத்திநாதர், முன் னாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப் பாளர் எஸ்.சிவராசா, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.செல்வராசா உட்ப டப் பலரும் நிகழ்த்துவர். (எ-6-70)

இதோ வெளிவந்துவிட்டது

பொருளியல் - பகுதி -II

- பணம், வங்கி, விலைமட்டம்
- இலங்கையின் பொருளாதாரம் வினா - விடை, வடிவம் சுயமாகக் கற்கக் கூடிய நூல்

தொகுப்பு:-R.இராஜேஸ்வரன் B.com. PGD

கிடைக்குமிடங்கள்: (சி/47467)
DMI Tuition, வாழ்வாங்குவாச், வவுனியா,
கொழும்பு பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.

2005 புலமைப் பரிசில் 5ஆம் தர மாணவருக்கான - பாராட்டு விழா

இடம்: யா/யாழ்.இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை மண்டபம்
காலம்: நாளை (23-01-2006) திங்கட்கிழமை பி.ப. 2.30 மணி
குறிப்பு:
2006 தரம்5 இல் கல்வி கற்கும் மாணவரும் பெற்றோரும் கலந்து சிறப்பிக்கவும்.

(45876)(26-16-18-24) - **பெற்றோர்கள்.**

கண்ணீர் அஞ்சலி

யா/ உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும், எழுத்தாளருமான

வை.சச்சிதானந்தசிவம்

எம் கல்லூரி விருட்சத்தின் விழுதே!
தமிழினத்தின் வாழ்வியலை படைப்பாக்கி
இயக்குநராய் நாமறிந்த எழில் இமய உறவே!
பல கனவுகள் நிறைவேறும் காலம்வரை அருகிருக்க
பைந்தமிழர் நிலம் செய்த நலம் போதாதா?
உம் படைப்பை... உணர்வுகளை... உயிர்க்கனவை
உலகறியும் ! உம் ஆத்மா சாந்தி கொள்க!

(45874)(26-16-18-24) கல்லூரிச் சமூகம், யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.

31ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 19-01-1932 இறப்பு 23-12-2005

எமது பாடசாலையின் ஊழியரான **சின்னத்துரை கோகுலன்** அவர்களின் அன்புத் தந்தை அமரர் கணபதிப்பிள்ளை சின்னத்துரை அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அமரர் கணபதிப்பிள்ளை சின்னத்துரை
(இளைப்பாறிய இ.போ.ச.ஊழியர், பருத்தித்துறை)

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர் நலன்புரிச் சங்கம்.
(45875) (42-16-18-24)
யா/இமையாணன் அ.த.க. பாடசாலை.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

T.R.R.O. Computer Training Centre

கணனிக் கற்கை நெறிகளுக்கான...
புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

Diploma Courses
- Diploma in Information Technology
- Diploma in Microsoft Office
- Diploma in Desktop Publishing
- Diploma in Computer Programming
- Diploma in Web Designing
- Diploma in Graphic Designing
- Diploma in Vedio Editing

Certificate Courses
- Ms Word XP
- Ms Excel XP
- Ms Access XP
- Adobe PageMaker 7.0
- Adobe Photoshop 7.0
- Corel Draw 12
- Visual basic 6.0
- Auto CAD 2005
- Turbo Pascal 7.0

Kids Programme

சிறுவர்களுக்கான கணனி வகுப்புகள் ஆரம்பம்!!!

- fundamental of Information Technology
- Microsoft Windows XP
- Word Processing, Spread sheets
- Data bases
- Graphics & Multimedia

(சி/47466) (24-16-18)

விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளும் இடம்:

T.R.R.O. Computer Training Center
106, 4th Cross Street,
Jaffna.

T.R.R.O. Computer Training Center
MC Leod Hospital,
K.K.S. Road, Inuvil.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

விண்ணப்ப முடிவு திகதி 31.01.2006

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

வையகத்துள் வாழ	விண்ணகத்துள் வாழ
14	23
-	-
07	12
-	-
1936	2005

திருமதி சிவகாமசுந்தரி கந்தையா

(இளைப்பாறிய அதிபர், அள/வட/அ.மி.த.க. பாடசாலை)
திதி: 22.01.2006

நிலையில்லா பூவுலகில்
நிலைத்துவிட்ட உங்கள் நினைவால்
நினைவிழக்க முடியாது - நாம்
நீந்துகின்றோம் கண்ணீரில். . . . .
என்றும் உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும், ஆத்மசாந்திப் பிராத்தனையும் இன்று (22.01.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவாது இல்லத்தில் நடைபெறவிருப்பதனால் அந் நிகழ்வுகளில் அனைவரையும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கணேஸ்வரம்,அளவெட்டி. (45864) (24-16-18) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்புத் தேடி இடம்பெயர்வோருக்கு உதவி வழங்குவதிலும் பெரும் இழுத்தடிப்பு

'மக்களுக்குத் துன்பம் வந்தால் மன்னருக்குச் சொல்வோம் மன்னருக்கு துன்பம் வந்தால் யாரிடம் சொல்வோம்' என்ற சினிமாப் பாடல் வரிகள் உண்டு. கடந்த செவ்வாயன்று திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிமனை தற்காலிகமாக மூடப்பட்ட போது இந்தப் பாடல் வரிகள்தான் ஞாபகத்திற்கு வந்தன.

திருகோணமலையிலிருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள உப்புவெளிச் சந்தியை அண்மித்த பகுதியில் இடம்பெற்ற பார்சல் குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து 12 கடற்படையினர் காயங்களுக்கு இலக்காகினர். இதனைத் தொடர்ந்து படையினர் திருப்பிச் சுட்டதில் இரண்டு அப்பாவிப் பொதுமக்கள் பலியாகினர். மேலும் பல பொதுமக்கள் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகினர். இந்த நிலையில் தான் புதனன்று மாலை கண்காணிப்புக் குழுவின் அந்த அறிவிப்பு வெளியாகியது.

வீதியில் எங்கு பார்த்தாலும் படையினர்

திருகோணமலையில் இடம்பெறும் படையினரின் அடாவடித்தனங்களை முறையிட கண்காணிப்புக் குழு அலுவலகம்தான் இருந்தது. அந்த அலுவலகமும் மூடப்பட்டால் என்ன செய்வது என தமிழ்மக்கள் குழம்ப ஆரம்பித்தனர்.

இந்த நிலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பணிமனை மூடப்பட்டதைத் தொடர்ந்து கண்காணிப்புக் குழுவினரிடமிருந்து வெளியான செய்திதான் பலரையும் சிந்திக்க வைத்தது.

திருகோணமலை உட்துறைமுக வீதியில் உள்ள திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிமனையில் பறக்க விடப்பட்டிருந்த கண்காணிப்புக் குழுவின் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்ட செய்தியே பலரையும் சிந்திக்க வைத்தது. ஆனால், சில மணிநேரத்தில் கண்காணிப்புக் குழுவினர் மீண்டும் தங்கள் பணிமனைக்குச் சென்று இந்தக் கொடியை மீண்டும் பறக்கச் செய்தனர்.

இந்த நிலையில்தான், திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை மற்றும் பொது அமைப்புக்களும் கண்காணிப்புக் குழுவினர் தங்கள் பணிமனையை மீண்டும் திறக்க வேண்டும் அப்படியல்லாது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் திருகோணமலையில் இருப்பதில் எந்த வித பயனும் இல்லை என கண்காணிப்புக் குழுவினரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இதனைக் கருத்தில் கொண்டே வெள்ளியன்று மீண்டும் கண்காணிப்புக் குழுவினர் தங்கள் அலுவலகப் பணிகளையும் ஏனைய பணிகளையும் ஆரம்பித்துள்ளனர். இதற்கிடையே மூதூர் பிரதேசத்தில் படையினர் மேற்கொண்டு வரும் அடாவடித்தனங்களைத் தொடர்ந்து ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மற்றும் பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தஞ்சம் அடைந்துள்ளன.

பிற்பகலில் வெறிச்சோடிவிடும் திருமலை நகரம்.

திருமலை மடல்

அரைக் கம்பத்தில் பறந்த கண்காணிப்புக் குழுவின் கொடி

கிளிவெட்டி மகாவித்தியாலயத்தில் மட்டும் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தஞ்சம் அடைந்துள்ளன. இவ்வாறு மக்கள் அச்சமடைந்து அகதிகளாக இடம்பெயர்ந்த போதும் இவர்களுக்கான அத்தியாவசிய உதவிகள் எதுவும் வழங்கப்படவேயில்லை.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்ற நிறுவனங்களே இவர்களுக்கான உதவிகளை வழங்கிவருகின்றன. அகதி

இடம்பெயர்ந்த குடும்பம் ஒன்று நலன்புரி நிலையத்தில்

சங்கீத்

களாக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் கூட நடைபெற்றுவரும் இழுத்தடிப்புகள் மக்களை மென்மேலும் கசப்படையச் செய்துவருகின்றன.

இதேவேளை, பாதுகாப்பு என்ற போர்வையில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் மக்களை சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாக்கி வருவதாகவும் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரக் கட்டுரையில் குறிப்பிட்டது போன்று திருகோணமலை நகரெங்கும் படையினரின் நடமாட்டமாகவே உள்ளது. ஒரு காலகட்டத்தில் 'தூங்காத நகரம்' எனப் பெயர் கொண்ட திருகோணமலை நகரம் தற்போது நண்பகலுக்குப் பின்னர் மக்கள் நடமாட்டமற்ற நகராகவே காட்சி அளிக்கின்றது.

பஸ் நிலையம் மற்றும் வர்த்தக நிலையங்களும் பெரும்பாலும் வெறுமையாகவே காட்சியளிக்கின்றன. மக்கள் நடமாடவே அஞ்சுமளவிற்கு பொதுமக்களுக்கான எந்தவித பாதுகாப்புமற்ற நிலையே உருவாகி வருகின்றது.

நகரில் அமைதியையும், சமாதானத்தையும் உருவாக்க வேண்டும் எனக்கோரி கடந்த வாரம் படையினர் தரப்பில் வாக்குறுதிகள் அள்ளி வழங்கப்பட்டபோதும் அவை காற்றில் பறக்க விடப்பட்டனவாகவே உள்ளன. ✱

ஆர்ப்பாட்டமில்லாமல் எண்ணங்களை கைவண்ணமாக்கிய அற்புதக் கலைஞன்

ஈழத்துப் படைப்புத் துறைக்கும் காண்பிய ஊடகத்துறைக்கும் ஓவியத்துறைக்கும் மகோன்னத பங்களிப்பு நல்கிய ஒருவர் மறைந்துவிட்டார். 'சச்சி அண்ணை' என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் ஞானரதனின் இழப்பின் துயரை வெளிப்படுத்த இந்த வார்த்தை தான் அவசியம் எனத் தோன்றுகிறது.

மிக எளிமையாக - ஆர்ப்பாட்டமில்லாமல் - எல்லோரையும் அனுசரித்தபடி, தனது மன எண்ணங்களைக் கைவண்ணங்களாக்கிய ஓர் அற்புதக் கலைஞராக அவரைக் கூறலாம்.

அளவெட்டியில் பிறந்து, நில அளவைத் திணைக்களத்தில் பணியாற்றிய அவர் மட்டக்களப்பிலிருந்து வெளியான 'தேனருவி' சஞ்சிகையில் தனது ஓவியங்களை வரைந்ததோடு, சிறுகதைகளையும் எழுதினார். 'சச்சி' என்ற பெயரில் ஓவியங்களையும், 'சொர்ணன்' என்ற பெயரில் சிறுகதைகளையும் எழுத ஆரம்பித்த அவர், பின்னர் தனக்கான புனைபெயராக 'ஞானரதன்' என்பதை வரித்துக்கொண்டார். மட்டக்களப்பில் வாரித்தம்பி, ஆனந்தன், சண்முகம், சிவலிங்கம், பிரபல தமிழக ஒளிப்பதிவாளரும் நெறியாளருமான பாலு மகேந்திரா போன்றோரின் நட்பு அவரைப் படைப்புத்துறையிலும், ஒளிப்படத்துறையிலும் ஈடுபடுத்தியது.

சிறுகதைகள் பலவற்றை எழுதிய அவர், அவற்றைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடாவிடினும் அவை அவரது பெயரை நிலைநிறுத்தும் வண்ணம் தரமானவையாக உள்ளன. சமூக நடப்புகளை மறைமுக எள்ளலுடன் பாத்திரங்களின் இயங்குதலுக்கூடாக வெளிப்படுத்திக் கதைகளை ஆக்கும் தனித்துவம் அவருடையதாகும்.

இது அவருக்குள்ளிருக்கும் காட்சிப்புல வெளிப்பாடாகும். இதுவே அவரை ஒளிப்படத்துறைக்குள்ளும் கொண்டுவந்தது.

வீரகேசரி வெளியீடாக வெளிவந்த புதியபூமி, ஊமை உள்ளங்கள் ஆகியன அவரெழுதிய நாவல்களாகும். நில அளவைத் திணைக்களத்தில் பணியாற்றிய போது சந்தித்த அனுபவங்களை, காடுகளில் பாசறை அமைத்து வாழ்ந்த சூழலைக் கலாபூர்வமாகப் பதிவாக்கிய அவரது 'புதிய பூமி' நாவல் ஈழத்து நாவல்களில் புதுமையானதும் குறிப்பிடத்தக்கதுமாகும்.

அதேபோல, முதுமைக் காலத்து ஏக்கங்களோடு வாழும் மனிதர்களைப் படம் பிடித்துக் காட்டிய 'ஊமை உள்ளங்கள்' நாவலும்

அஞ்சலிக் குறிப்பு

அக் காலத்தில் வெளிவந்த நாவல்களில் வித்தியாசமான சிந்தனையை முன்வைத்தது ஆகும்.

ஈழத்து ஒளி, ஒலிபரப்புத்துறையில் அவர் ஆற்றிய பங்களிப்பு ஒப்புயர்வற்றது. 'இனியொரு விதி' குறும் படத்துடன் இத்துறையில் தனது பங்களிப்பை லலுவாக்கிய அவர், காற்றுவெளி, முகங்கள் ஆகிய சிறப்பான இரு முழுநீளத் திரைப்படங்கள் உட்பட திரைப் படங்களையும் குறும்படங்களையும் தந்துள்ளார். அத்துடன், நிதர்சனம் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட எண்ணற்ற விவரணப் படங்களும் இவராலேயே உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. **Battle of Elephant pass** என்ற விவரணப் படம், உயிராயுதம் விவரணப் படத் தொகுதிகள் என்பன இவரது குறிப்பிடத்தக்க விவரணப் படங்களாகும். அண்மையில் இவர் உருவாக்கிய 'அளவெட்டி' கிராமம் பற்றிய விவரணப் படமும் வித்தியாசமான சிறந்த படைப்பாகும்.

ஒரு சின்னஞ் சிறிய போராளிக் கலைஞனான ஸ்ரீராமை வைத்து இவர் இயக்கிய 'இனியொரு விதி' குறும் படங்களில் காட்சி மொழியை வலியுறுத்திய முன் மாதிரிப் படைப்பாகும். இற்றை வரைக்கும் பெரும்பாலான தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்கள் தொழிநுட்ப உத்தியில் கவனம் செலுத்தும் அளவுக்குக் கூட, காட்சி மொழி பற்றி, கமரா மொழி பற்றிக் கவனம் செலுத்தாத நிலையில் ஈழத்துப் படங்களில் கமரா பேச வேண்டும் என்பதை மிக வலியுறுத்தி வந்த ஞானரதன் அவர்கள், தனது படங்களில் பிரக்ஞை பூர்வமாகக் காட்சி மொழியைப் பயன்படுத்தினார். 'காற்றுவெளி' படத்தில், போராட்டத்திலிருந்து விலகியிருந்த ஒரு வயோதிபரை போராட்டத்தில் இணைகின்றவராகக் காட்டுகின்றார். அது மிக இயல்பாக - யதார்த்தமாக - தர்க்க பூர்வமாக முன்வைக்கப்பட்டிருந்ததும், காட்சிகளில் சட்டகத்துக்குச் சட்டம் **(Frame by Frame)** கரிசனை செலுத்தப்பட்டிருந்ததும் குறிப்பிடத் தக்கதாகும். ஈழத்துச் சினிமாவின் கொடு முடியாக இன்றளவும் அவரே இருந்தார் என்றும் சொல்லலாம்.

புதிய படைப்பாளிகளை, கலைஞர்களை ஒரு தந்தையின் நேசத் தோடும், ஒரு நண்பனின் தோழமையோடும் அரவணைத்துச் செயற்பட்டு வந்த அவர் தனதும், பிறரதும் அனுபவங்களைச் சொல்வதனூடாக படைப்பு நுட்பங்களை விளக்கும் வல்லமை வாய்ந்தவர். 1990களில் நிதர்சனம் நிறுவனம் மூலம் சிறுகதைப் பட்டறை, கவிதைப் பட்டறை ஆகியவற்றை ஏற்பாடு செய்து முன்னின்று

மாமனிதர் ஞானரதன்

நடத்திய அவர், பல படைப்பாளிகளையும், கலைஞர்களையும் உருவாக்கிய முன்னோடியாவார்.

சில காலமாக 'வெளிச்சம்' சஞ்சிகையில் அவர் எழுதிவரும் 'மனநடை' கட்டுரைத் தொடர் பண்டைய வாழ்க்கை மற்றும் விழுமியங்கள் தொடர்பான நினைவுக் கிளர்த்தலைச் செய்வதுடன் சமூக மாற்றங்கள் பற்றியும் பேசுகின்றன.

ஆரவாரங்களும் சலசலப்புகளுமாக வெற்று இலக்கியக் கோஷக்காரர்கள் இயங்கும் சூழலில் ஆர்ப்பாட்டமில்லாமல், எளிமையாக வாழ்ந்து, அனைவருடனும் நல்லுறவைப் பேணி, தம் பின்னால் கலை இலக்கிய வாரிசுகளை உருவாக்கி வாழ்ந்த ஒரு ஞான தீபம் அணைந்து விட்டது.

தேச நேசமும் கலைத்தாகமும் கொண்ட அந்த ஆன்மா எல்லா நெஞ்சங்களிலும் பரந்து வாழும்.

-இவாள்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிலைத் தோட்டங்களையும் கைவிட்டு மண்டைதீவு மக்களும் வன்னிக்கு இடம்பெயர்வு

யாழ்ப்பாணம்,ஜன.22

குடாநாட்டில் நிலவும் அசாதாரண நிலமைகளை அடுத்து மண்டைதீவில் இருந்தும் பொதுமக்கள் குடும்பங்களாக வெளியேறி வருகின்றனர்.

குறிப்பாக யாழ். - கண்டி வீதி திறக்கப்பட்ட பின்னர் மண்டைதீவில் மீளக்குடியமர்ந்த மக்களே இவ்வாறு வெளியேறி வன்னிப் பகுதிக்குச் செல்கின்றனர்.

புகையிலைச் செய்கையில் ஈடுபட்டிருந்த விசாயிகள் பாத்திகட்டி நீர் பாய்ச்சும் பருவத்தில் உள்ள தோட்டங்களையும் கைவிட்டு விட்டு இவ்வாறு இடம்பெயர்ந்து செல்கின்றனர். அத்துடன், பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டுவந்த கடற்றொழிலாளர் குடும்பங்களும் இடம்பெயர்ந்து செல்வதாகவும் - கூறப்பட்டது.

இதேவேளை - இவ்வாறு இடம்பெயர்ந்து வன்னிப் பகுதிக்குச் செல்வோர் அத்தியாவசிய பாவனைப் பொருள்களையும் தொழில் உபகரணங்களையும் தம்முடன் எடுத்துச் செல்கின்றனர்.

இதற்கிடையில் - மண்டைதீவுச் சந்தியில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் இவ்வாறு இடம்பெயர்ந்து செல்வோரையும் அவர்கள் எடுத்துச் செல்லும் பொருள்களையும் தீவிரசோதனைக்கு உட்படுத்திவருகின்றனர். (எ-88)

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுடன் கற்பித்த ஆசிரியர்கள், முன்னாள் அதிபர், நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (எ-204)

நெடுந்தீவுப் பகுதிக்கு புதிய தபாலதிபர் நியமனம்

நெடுந்தீவு, ஜன.22

நெடுந்தீவு தபாலகத்திற்கான புதிய தபால திபராக நெடுந்தீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கோபாலபிள்ளை, யோகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தபாலகத்தில் தற்காலிகமாகப் பணியாற்றிவந்த தபாலதிபர் வேறு தபாலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதை அடுத்து அவரது இடத்திற்கு புதியவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 16ஆம் திகதி முதல் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (எ-6)

மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு தூவல் நீர்ப்பாசனக் கருவி விநியோகம்

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகளை வழங்குவதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

புத்தூர், உடுவில், கீரிமலை மற்றும் உரும்பிராய் ஆகிய விவசாய போதனாசிரியர்பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களில் சுமார் 65 முதல்70 வரையான விவசாயிகளுக்கு முதற் கட்டமாக இந்தத் தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகள் வழங்கப்படவுள்ளன என்று யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) அறிவித்துள்ளார்.

மேற்படி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதியை யாழ். அரசாங்க அதிபர் வழங்கியுள்ளார் என்று விவசாய உதவிப் பணிப்பாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகளை கடனடிப்படையில் பெறவிரும்பும் விவசாயிகள், தத்தமது விவசாயப் போதனாசிரியர்களிடம் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

சுழிபுரம் காட்டுப்புலத்தில் ஹெலி மூலம் இறக்கப்பட்ட படையினர் தேடுதல்

வலி.மேற்கு,ஜன.22

ஹெலி மூலம் இறக்கப்பட்ட கடற்படையினர் சுழிபுரம் காட்டுப்புலம், பாண்டவெட்டைப் பகுதிகளில் பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

கடந்த புதன்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் ஹெலி மூலம் கொண்டு வந்து இறக்கப்பட்ட கடற்படையினரும், திருவடி நிலைப்பகுதியில் இருந்து வந்த படையினரும் இணைந்து இந்தத் தேடுதல் வேட்டையை மேற்கொண்டனர்.

மேற்படி பகுதிகளில் வீடு வீடாகச்சென்று தேடுதலை நடத்திய கடற்படையினர் பொதுமக்களை தீவிர விசாரணைக்கு உட்படுத்தினர் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

இதற்கிடையில் - படையினரின் இத்தகைய திடீர் தேடுதலை அடுத்து, இப்பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் பாதுகாப்புக் கருதி பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருவதாக ஒரு தகவல் தெரிவித்தது.

இதேவேளை, அராலி, ஊரத்தி, பொன்னாலை மற்றும் வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களும் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்து செல்வதை அவதானிக்கமுடிகின்றது. (எ-6-175)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

வட்டுக்கோட்டை, ஜன.22

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எனவே, வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சங்கானை, வட்டுக்கோட்டை, சுழிபுரம் மற்றும் அராலி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தோர் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த்தடுப்பூசியை ஏற்றிக் கொள்வதுடன், கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கும் உதவவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-6-161)

கூட்டுறவுச் சங்க கட்டட வேலைக்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு,ஜன.22

மானிப்பாய் பல நோ.கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகக் கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதி தேவைப்படுவதாகவும் -

இதற்கான நிதியைப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து தருமாறும் -

சங்க நிர்வாகம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடந்தவாரம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சங்கத் தலைவர் மா.செல்வராசா,சங்கப் பொது முகாமையாளர் நா.துரைசாமி ஆகியோரினால் கையொப்பமிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில் -

பூர்த்தியடையாமலிருக்கும் தலைமை அலுவலகத்திற்கான கட்டட வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகவும் -

இதனைப் பூர்த்திசெய்வதற்கு தேவையான ரூபா 30 லட்சம் நிதியை வழங்கி உதவுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட 20 லட்சம் ரூபா நிதியைப் பயன்படுத்தி கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (எ-135)

தென்மராட்சியில் வீடமைப்புக்கு மேலும் 3 கிராமங்கள் தெரிவு

தென்மராட்சி,ஜன.22

தென்மராட்சிப் பிரதேசத்தில் உலக வங்கியினால் மேற்கொள்ளப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்தில் மேலும் மூன்று கிராம அலுவலர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 18 கிராம அலுவலர் பிரிவுகளுடன் புதிதாக கல்வயல், மட்டுவில் வடக்கு, சரசாலை தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான பணிகள் விரைவில் ஆரம்பமாகுமென பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-117)

குமிழ் அழுகல் பாதித்த வெங்காயத்தை விதை வெங்காயமாகப் பயன்படுத்தாதீர்!

பெரும்பாக அலுவலர் கோரிக்கை

அச்சுவேலி,ஜன.22

குமிழ் அழுகல் நோய் பாதித்துள்ள வெங்காயத்தை விதை வெங்காயமாகப் பயன்படுத்தவேண்டாம்.

அவ்வாறு நோய் பாதித்த விதை வெங்காயம் நடுகை செய்யப்பட்டால், குமிழ் அழுகல் நோய் தொடர்ந்தும் பரவும் அபாயம் இருக்கின்றது.

இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் புத்தூர் கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சித்தியேந்திரன்.

இதுவிடயமாக அவர் மேலும் கூறுகையில் குமிழ் அழுகல் நோயினால் பீடிக்கப்பட்ட வெங்காயத்தைத் தவிர்த்து நோய்த்தாக்கமற்ற வெங்காயத்தை விதை வெங்காயமாகப் பயன்படுத்தவேண்டும்.

அத்துடன், குமிழ் அழுகல் நோய்த் தாக்கம் ஏற்பட்ட விளைநிலத்தில் குறிப்பிட்ட காலத்துக்கு- வெங்காயச் செய்கையைத் தவிர்த்து குரக்கன், மரவள்ளி போன்ற மாற்றுப் பயிர்களைப் பயிரிடலாம்.

இவற்றின் மூலம் குமிழ் அழுகல் நோயின் தாக்கத்தை கணிசமான அளவு கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறான நடவடிக்கையை விவசாயிகள் பின்பற்றுவதனால் வெங்காயத்திற்கு ஏற்படும் குமிழ் அழுகல் நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்திச் சிறந்த அறுவடையைப் பெறமுடியும்- என்றார். (எ-11-14)

நீர்வேலித் தோட்டத்தில் 'லீக்ஸ்' மரக்கறி திருட்டு

கோப்பாய்,ஜன.22

நீர்வேலி வடக்கில் 'லீக்ஸ்' பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த தோட்ட மொன்றினுள் கடந்த செவ்வாயிரவு புகுந்த திருடர்கள் பெருமளவு 'லீக்ஸ்' நாற்றுக்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

தோட்டத்தினுள் புகுந்த திருடர்கள் லீக்ஸைப் பிடுங்கிய பின் அருகில் நின்ற மாடுகளின் கயிறுகளை அவிழ்த்து அக் கயிறுகள் மூலம் லீக்ஸை தோட்டக்கிணற்றினுள் கட்டி இறக்கி கழுவியபின் களவாடிச் சென்றுள்ளதாகத் தோட்ட உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் நெருக்கடி நிலையிலும் கூட நீண்ட நேரம் தோட்டப் பகுதியில் நின்று திருடிச் செல்லுமளவிற்கு மனத் துணிவைப் பெற்றிருக்கும் திருடர்கள் குறித்து அப்பகுதி மக்கள் பெரும் ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளனர். (எ-72)

யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் கலாநிதி க.குணராசாவின் பிரியாவிடை வைபவத்தின்போது தற்போதைய மாநகர ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் விழாநாயகருக்குப் பொன்னாடை போர்த்து நினைவுப் பரிசாக தங்கமோதிரம் அணிவிப்பதைப் படத்தில் காணலாம். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

திருமதி மகிழம்மா கிருஸ்ணானந்தம்

தொண்டைமானாறு, கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் திருமதி மகிழம்மா கிருஸ்ணானந்தம் நேற்று (21.01.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணானந்தத்தின் பாசமிகு மனைவியும் சிவசோதியின் அன்புத் தாயும், சிவபுத்திரனின் (அரச ஒப்பந்தகாரர்) பிரியமுள்ள மாமியும், திருமதி பிரதீபா ஜெககாந்தன் (கனடா) பிரதீபன் (கனடா), ஜெகதீபா, திருமதி விஜயதீபா கனகராசா (கனடா), ஜெகதீபன் (மாத்தளை), திருமதி சதீபா ஸ்ரீகாந்த் (கனடா), விஜயதீபன், மீரா, நவநிதி, தசபுத்திரன், லவதீபன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (22.01.2006) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பிற்பகல் 2 மணிக்கு பூதவுடல் வதிரி ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'மலரகம்'
நெல்லியடி, வதிரி, கரவெட்டி.

தகவல்:
ந.சிவபுத்திரன் (மருமகன்).

(அ.47408)(15-45)

சுப்ரமணியம் பாலகிருஷ்ணன்

958/36, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்ரமணியம் பாலகிருஷ்ணன் (20.01.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் - சின்னம்மா தம்பதியரின் மகனும் திரு. திருமதி சதானந்தப்பத்தர் அவர்களின் அன்பு மருமகனும் ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும் ஜெயராம், கேமலதா ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசரட்ணம், குணரட்ணம், ஜெயதீஸ்வரி சீவரட்ணம், இரத்னகோபால், காலஞ்சென்ற பத்மானந்தன், ஜெனனீஸ்வரி, ஜெயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2006) ஞாயிற்றுக்கிழமை வீட்டில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 958/36, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பா.ஜெயராம்

(45891)(15-45)

தசாக கிருகயஜ்ஞ அழைப்பு

அன்புடையீர்,

பார்த்திப வருடம் தை மாதம் முதலாம் நாள் 14.01.2006 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி,

ஸ்ரீமதி சிவஞானக்குருக்கள் சமீஜினாம்பாள்

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

23.01.2006 திங்கள் காலை 10 மணி தசகம்
24.01.2006 செவ்வாய் காலை 10 மணி ஏகோத்திஷ்டம், மாசிகம்.
25.01.2006 புதன் காலை 10 மணி சபிண்டீகரணம்
26.01.2006 வியாழன் பகல் 12 மணி கிருகயஜ்ஞம் (சமாராதனை)

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து 26.01.2006இல் நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இணுவில் கந்தசுவாமி கோயில்
மேற்குவீதி, இணுவில்.

(45885)(15-45) **குடும்பத்தினர்.**

உடன் தேவை

அச்சகத்தில் வேலை செய்யக்கூடிய off set Machine minder, Book Binder ஆகியோர் உடன் தேவை. விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்குதங்கள் தொலைபேசி இலக்கங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம் 2786
மே/பா உதயன்
யாழ்ப்பாணம்.

(45479)(15-45)

நன்றி நவிலல்

எமது பாசமுள்ள தந்தை **மடுத்தீன் அந்தோனிப் பர்னாந்து** அவர்களின் மரணச் செய்தி கேட்டு இறுதி யாத்திரை திருப்பலியில் கலந்து, செபித்து, எமக்கு ஆறுதல் கூறிய யாழ். மறைமாவட்ட ஆயர், குருமுதல்வர், குருக்கள் , அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், மலர்வளையம் வழங்கியவர்கள், அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்கள்,நேரில் வந்தும் வழிபாடுகள் நடத்தியும் ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் பல்வேறு வகையில் உதவி செய்த நல்லுள்ளங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

226, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்.

(45881)(15-45)

சேருநுவர பகுதியில் ஊர்காவலர், சிப்பாய் சூட்டுக்குப் பலி!

கொழும்பு,ஜன.22

சேருநுவர, சோமபுரம் பகுதிகளில் ஊர் காவல் படை உறுப்பினர் ஒருவரும் சிப்பாய் ஒருவரும் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டனர். நேற்றுக் காலை 8 மணியளவில் இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதாக சேருநுவர பொலீஸார் தெரிவித்தனர்.

சோமபுரப் பகுதியில் இருந்து ஒன்றரை மீற்றர் தூரத்தில் உள்ள காட்டுப்பகுதியில் இருந்து கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

சுட்டுக்கொல்லப்பட்ட இருவரின் துப்பாக்கிகளும் அபகரிக்கப்பட்டன எனப் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-12)

'சிசு உதான' ஆரம்ப வைபவம்

யாழ்ப்பாணம்,ஜன.22

மக்கள் வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சிறப்புப் பரிசுத் திட்டத்துடனான 'சிசு உதான' கணக்கின் ஆரம்ப வைபவம் நாளை திங்கட்கிழமை யாழ். புனித ஜேன் பொஸ்கோ வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது. பிரதான வீதிக்கிளையின் முகாமையாளர் எஸ்.கென்றி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவிருக்கின்றது.

இந்தச் சிறப்புப் பரிசுத் திட்டத்தின் கீழ் ஒரு மாணவன் வைப்பிலிடும் தொகையின் அளவை மக்கள் வங்கி அக்கணக்கில் வைப்பிலிடும். இத்தொகை 500 ரூபா வரை மட்டுப்படுத்தப்படும். இந்த விசேட திட்டம் ஒரு வாரத்துக்கு மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும். இந்தக் கணக்கு தொடர்பான அறிமுக நிகழ்வுகள் ஏனைய பாடசாலைகளிலும் இடம்பெறவுள்ளன. (ஐ-3)

மணவாளக் கோல விழா

யாழ்ப்பாணம்,ஜன.22

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் மணவாளக் கோல விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சங்காபிஷேகத்தினை அடுத்து வசந்த மண்டபப் பூசை, திருஞ்சல் என்பன இடம்பெற்று கருணாகரப்பிள்ளையார் பூந்தண்டி கையில் திரு வீதியுலா எழுந்தருளி அடியாளர்களுக்கு காட்சியளிப்பார். (எ-6)

மன்னார் சென்ற பஸ்ஸில் இருந்து வெடிமருந்து மீட்பு

கொழும்பு,ஜன.22

கொழும்பில் இருந்து மன்னார் சென்ற பஸ் ஒன்றில் இருந்து 13 கிலோகிராம் வெடிமருந்துகளை முருங்கன் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு பயணம் செய்த பஸ் ஒன்றில் இருந்தே இந்த வெடிமருந்து மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 6 பேரை தாம் கைது செய்துள்ளனர் என்று முருங்கன் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி உப்புல் செனிவிரட்ண தெரிவித்தார். (ஐ-12)

ராஜா யாழ்ப்பாணம்
சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
சரவணா
இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்:
பு.நே. 10.30, 2.15 மட்டும்

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
பொங்கல் வெளியீடு
அல்டிமேட் அஜித், லைலா மற்றும் பலர் நடித்த
பரமசிவன்
காட்சி நேரம்:
9.00, 12.30, 3.30

மனோகரா யாழ்ப்பாணம்
அதிரடி பொங்கல் வெளியீடு
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேநாள் வெளியீடு
(Dts நவீன ஒலிநயத்துடன்)
ஆதி
இளைய தளபதி விஜய், த்ரிஷா மற்றும் பலர் நடிப்பில்
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)
தயாரிப்பு : S.A. சந்திரசேகர்
இசை : வித்தியாசாகர்
இயக்கம் : ரமணா
தினசரி:
பு.நே.
1 30, 1.30, 4.30, 7.30

நாகம்ஸ் சுன்னாகம்
விஷால், மீராஜஸ்மின் மற்றும் பலர் நடித்த
சண்டக்கோழி
காட்சி நேரம்
புதியநேரம் 11.00, 3.00

மரண அறிவித்தல்கள்

குமாரவேலு கதிரவேலு

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இல.27, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியாவில் வசித்தவரும் காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபருமாகிய குமாரவேலு கதிரவேலு 20.01.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற மலேசியா புகையிரத நிலைய அதிபர் தம்பிப்பிள்ளை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சிதம்பரம், தெய்வானை ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி மங்களேஸ்வரி - செல்வரத்தினம் (ஆசிரியை, வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), பரமேஸ்வரன் (பொறியியலாளர்- ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வரத்தினம் (ஆசிரியர், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), திருமதி யோகராணி (பொறியியலாளர்- ஆஸ்திரேலியா), கஜனன், பாலகி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2006) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வவுனியா இறம்பைக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27, இரண்டாம் குறுக்குத் தெரு,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.

(45880)(15-45)

செல்வி ஜோசவ் கில்டா ஜெயராணி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி ஜோசவ் கில்டா ஜெயராணி (20.01.2006) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இறப்பியல் ஜோசவ்-ஜோசவ் அருளம்மாவின் அன்பு மகளும் ஜோசவ் கத்தரின் நாயகி, யோசவ் ஜெயராசா (பிரான்ஸ்), ஜோ.றேமன்நாயகம் (பிரான்ஸ்), ஜோ. யேசுதாசன், ஜோ.மேரிஸ்ரெலா (லண்டன்), ஜோ. மேவின் அமலதாசன் (நோர்வே), ஜோ. கிறிஸ்ரியன் (தபாற்கந்தோர் ஊழியர்) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

19/8, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
ஜோசவ் யேசுதாசன்

(45890)(15-45)

துரைராஜா ரவிச்சந்திரன்

புளியங்கூடலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா ரவிச்சந்திரன் (ஹோட்டல் உரிமையாளர்) அவர்கள் 20.01.2006 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் துரைராஜா-சரஸ்வதி தம்பதியரின் அன்புப் புதல்வனும், இரத்தினம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சொர்ணகாந்தியின் அன்புக் கணவரும் பிரதாப், பிருந்தி, வானிசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரவீந்திரன் (லண்டன்), ரசிகுமார், நந்தினி, பவானி, ராகினி, ரஜனி, தர்சினி, ரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் புளியங்கூடல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல்.

தகவல்:
மனைவி சொர்ணகாந்தி,
குடும்பத்தினர்.

(45888)(15-45)

விநாசித்தம்பி சிவகுமார்

கூழாவடி இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி சிவகுமார் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் விநாசித்தம்பி (ஓய்வுபெற்ற C.T.B சாரதி)- கண்மணி தம்பதியரின் இளைய மகனும் சியாமளா (கனடா), உமாவதி (கனடா), ராகினி (நோர்வே), விஜிதா (கனடா), தயாளன் (கனடா), இராகவன் (கனடா) ஆகியோரின் சகோதரனும், நித்தியானந்தன் (கனடா), துரை (கனடா), சிவலிங்கநாதன் (நோர்வே), சந்திரன், சிவயோதி (கனடா), பவானி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் சீதா, சேதுப்பிள்ளை, செல்லம்மா, வல்லிபுரம், கந்தசாமி, செல்வநாயகம் ஆகியோரின் மருமகனும் பாக்கியம், மங்கையர்க்கரசி, செல்வபாக்கியம், வேலாயுதம் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இடம்பெறும்.

அன்னாரின் துக்க அஞ்சலி நிகழ்வு இன்று (22.01.2006) ஞாயிற்றுக்கிழமை கூழாவடி, இடைக்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

கூழாவடி,
இடைக்காடு.

தகவல்:
க.கந்தசாமி.

(45888)(15-45)

சின்னத்தம்பி நவரத்தினம்

ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நவரத்தினம் அவர்கள் நேற்று (21.01.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கணேசலிங்கம் (ஜேர்மனி) அவர்களின் அன்புத் தகப்பனும் பரமேஸ்வரியின் அன்பு மாமனாரும் சுபாஸ்திகா, சிந்துஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (22.01.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பதினொரு மணியளவில் தனலட்சுமி அவர்களின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

ாமரை வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
த.தனலட்சுமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்ந்து வரும் மக்களுக்கு உதவுமாறு புலம்பெயர்ந்த தமிழர்களிடம் அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்தோருக்கான மனிதாபிமான பணிக்கு உலகத் தமிழர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக புனர்வாழ்வுக் கழகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் கடந்த டிசெம்பர் 2005இன் முற்பகுதியில் வன்செயல்கள் அதிகரித்துக் காணப்பட்டன.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பெரும் பகுதியான மக்கள் அங்கு நடைபெறும் வன்செயல்களினால் தங்கள் உயிருக்கு பேராபத்து ஏற்படலாம் என்று உணர்ந்து வன்னிக்கு இடம்பெயர்ந்து வந்துள்ளனர்.

இத்தகைய வன்செயல்களை ஸ்ரீலங்கா இராணுவமும் அதன் கூட்டாகச் செயற்படும் ஆயுதக்குழுக்களுமே மேற்கொள்வதாக அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் முறையிட்டுள்ளது. இடம்பெயரும் மக்கள் தங்களுக்கு வன்னிப்பெரு நிலமே பாதுகாப்பு என நினைத்து தொடர்ந்தும் இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

3ஆயிரத்து 325 குடும்பங்கள் (16.01.2006 வரை சுமார் 14ஆயிரத்து 500 தனிநபர்களாக) தங்கள் நிரந்தரக் குடியிருப்புகளை விட்டு கையில் எடுத்துச்செல்லக்கூடிய சில பொருள்களை மட்டும் எடுத்துக்கொண்டு தடை முகாம்களையும், நீரேரிகளையும் கடந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னிப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

பெருமளவில் இடம்பெயரும் மக்களுக்கான நிவாரண உதவிகளைச் செய்வதற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வெளிநாடுகளிலிருந்தும், வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களிடமும் அவசர நிதி உதவியை வேண்டி நிற்கின்றது.

இடம்பெயர்ந்தவர்களுக்கு தற்காலிக புகலிடங்கள் அமைப்பதற்கும் உணவு, நீர் உணவல்லாத நிவாரணப் பொருள்கள், வைத்தியப் பராமரிப்பு மற்றும் போக்குவரத்து போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்கு நிதி உதவி இன்றியமையாத ஓர் அவசர தேவையாக இருக்கின்றது.

ஆழிப்பேரலைப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்வாழ்வுக்கான கட்டுமானப் பணிகளை முன்னெடுத்துக்கொண்டிருக்கின்ற தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு தற்போது நடைபெற்று வரும் இராணுவ அச்சுறுத்தல்களால் ஏற்பட்டு வருகின்ற இடம்பெயர்வுகளும் அதன் விளைவுகளால் துன்பப்படும் மக்களுக்கான நிவாரணப் பணிகளையும் அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பது என்பது பெரும் பொறுப்பாக உள்ளது.

மக்களின் தேவைகளைப் பொறுத்தவரையில் இன்று வரைக்கும் கிடைக்கப்பெற்ற நிதி உதவியானது போதியளவு இல்லாது இருக்கின்றது: மக்களின் தேவைகளை நிறைவு செய்யமுடியாதுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிவாரணப் பணிகளையும் ஏனைய புனர்நிர்மாண வேலைத் திட்டங்களையும் நேர்த்தியாகவும் திறம்படவும் முன்னெடுப்பதற்குத் தேவையான பணியாளர்களையும் கட்டமைப்புக்களையும் துறைசார்ந்த அனுபவம் வாய்ந்தவர்களையும் கொண்டுள்ளது.

ஆனால், எல்லாவற்றையும் நடைமுறைப் படுத்துவதற்கு நிதிப்பங்களிப்புதான் அவசரமாக தேவைப்படுகின்றது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மற்றும் தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் சர்வதேச ரீதியிலான பங்காளி நிறுவனங்களும் அல்லுறும் மக்களுக்கு மனிதாபிமான ரீதியாக தொடர்ந்தும் அதிகளவில் பல வழிகளிலும் குறிப்பாக நிதிப் பங்களிப்புச் செய்து கைகொடுத்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் ஞானரதனின் அஞ்சலி நிகழ்வு

பரந்தன், ஜன-22

மாமனிதர் வை.சச்சிதானந்தசிவத்தின் (ஞானரதன்) அஞ்சலி நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழீழ தேசியத் தொலைக்காட்சிப் பிரதம செய்தி ஆசிரியர் கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பொதுச்சுடரினை மூத்த பெண்படைப்பாளியும் போராளியுமான தமிழ்க்கவி ஏற்றிவைத்தார்.

மாமனிதர்சச்சிதானந்தசிவத்தின்திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பசுபதிப்பிள்ளை ஏற்றிவைத்தார்.

திருவுருவப்படத்திற்கான மலர்மாலையை செஞ்சோலைப் பொறுப்பாளர் சுடர்மகள், யாழ். மாவட்ட எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில், கானகி, ஊடகவியலாளர் விவேக், கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சிவநாத் ஆகியோர் அணிவித்தனர்.

தொடர்ந்து நினைவுரைகளை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே. பாலகுமாரன், புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன், கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன், திரைப்பட உருவாக்கப் பிரிவைச் சேர்ந்த நகுலன், புலிகளின் குரல் நிகழ்ச்சி அமைப்பாளர் ஆதிலக்ஸ்மி சிவகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

நினைவுரைகளைத் தொடர்ந்து நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன், மாமனிதர் வை.சச்சிதானந்த சிவத்திற்கு தமிழீழ தேசியத் தலைவரால் வழங்கப்பட்ட 'மாமனிதர்' என்ற மகுடத்தை வாசித்தார். (ஐ-12-352)

சுற்றிவளைப்புகள்.....

(முதலாம் பக்கத் தொடர்சி)

உரிமை ஆணைக்குழு, பொலீஸ் ஆகியோருக்கும் வழங்கவேண்டும். சட்டபூர்வமாக சுற்றிவளைப்புக்கள் இடம்பெறும்போதும் கிராமசேவையாளர்கள் அங்கு பிரசன்னமாகியிருக்கவேண்டும்.

சுற்றிவளைப்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டால், அவரைத் துன்புறுத்துதல், கொலை செய்தல் போன்ற சட்டபூர்வமற்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றனவா என கிராம சேவையாளர்கள் அவதானிக்கவேண்டும்.

குற்றமிழைத்ததாக ஒருவர் கருதப்பட்டால் அவரை விசாரித்து தண்டனை வழங்கும் பொறுப்பு நீதிமன்றத்திற்கே இருக்கின்றது. சட்டபூர்வமற்ற செயற்பாடுகள் இடம்பெற்றால் கிராமசேவையாளர்கள் அது தொடர்பான தகவலை நீதிமன்றம், பொலீஸ், மனித உரிமை ஆணைக்குழு, செஞ்சிலுவை சர்வதேசக் குழு போன்ற தரப்புகளுக்கு அறிவிக்கவேண்டும்.

தற்போதுள்ள சூழ்நிலையில் பொலீஸார் ஒரு நாளில் 4 மணித்தியாலங்கள் மாத்திரமே பணியாற்றக்கூடியதாக உள்ளது. படையினரின் வீதிச்சோதனைகள் முடிந்தபிறகு முற்பகல் 11 மணிக்குப் பின்னே வெளியில் செல்ல பொலீஸார் அனுமதிக்கப்படுகின்றனர்.

பின்னர் பிற்பகல் 3 மணிக்கு அவர்கள் நிலையங்களுக்குத் திரும்பிவிடவேண்டும். வெளியில் செல்ல அனுமதிக்கப்படும் நேரத்திலும் அவர்கள் முழுமையாகச் செயற்பட முடியாத சூழ்நிலை நிலவுகின்றது. ஆனபடியால் நீதிமன்றத்தின் செயற்பாடுகளுக்கு கிராமசேவையாளர்களின் பங்களிப்பு அவசியமாகின்றது. கிராம மட்டத்தில் மக்களுடன் பணிபுரியும் கிராமசேவையாளர்கள் சமாதான அலுவலர்கள் என்ற முறையில் செயற்படவேண்டும்.

கடந்தகாலங்களில் இடம்பெற்ற செம்மணிப் படுகொலை, பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசாமி படுகொலை போன்ற சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது. இந்தச் சம்பவங்கள் எல்லாம் குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்டவையாகும். இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். கிராமசேவையாளர்கள் இது விடயத்தில் அக்கறை காட்டவேண்டும்.

இத்தகைய சம்பவங்கள் குறித்து பதிவுகளைச் செய்வதன்மூலம் சம்பந்தப்பட்டவர்களின் எதிர்காலச் செயற்பாட்டுக்கு அவை உதவியாக அமையும். எனவே மக்கள் விழிப்பாகச் செயற்படவேண்டியது அவசியமாகும். நாட்டையும் மக்களையும் பாதுகாக்க வேண்டியதும் சட்ட ஒழுங்கைப் பேணுவதும் படையினரின் பொறுப்பாகும். அதைவிடுத்து இராணுவச் சீருடை அணிந்தவர்களும் குழுவினரும் மக்களைக் கொன்று குவிக்க சட்டத்தில் இடமில்லை - என்றார் அவர். (ஐ-3-86)

UNIVAC
Software Engineering Park

சிங்கப்பூர் சிஸ்ரம் கொம்பியூட்டர் நிறுவனத்தின் Software Engineering பயிற்சிக்கான போட்டிப்பரீட்சை 05-02-2006ம் திகதி நடைபெறும்.

இப் போட்டிப்பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களிற்கு 16 மணித்தியால இலவச IT வகுப்பு (கருத்தரங்கு) நடைபெற உள்ளதால் போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைவரும் உடன் சமுகமளிக்கவும்.

213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம

கலந்துரையாடல்

பரந்தன்,ஜன.22

கிளிநொச்சி மாவட்ட சுகாதார மேம்பாடு தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கிளி நொச்சி தமிழீழ நிர்வாகசேவை மாவட்டப் பணிமனையில் இடம் பெறவுள்ளது.

தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் ஆக்கபூர்வமான கருத்துக்கள், ஆலோசனைகள் என்பவற்றை முன்வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(3-12-352)

புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்சி)

இந்தச்செய்திகளையே புலிகள் மறுத்திருக்கின்றனர். அத்தகைய தாக்குதல் எதுவும் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடத்தப்படவில்லை என்றும் -

குறிப்பிட்ட பிரதேசத்தி[illegible] போராளிகளின் [illegible] நடவடிக்கைகள் [illegible]டம்பெற்றன என்றும் புலிகளின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

(ஐ-3)

தேநீர் கடை...

(முதலாம் பக்கத் தொடர்சி)

காயமடைந்தவரான மீசாலை வடக்கைச் சேர்ந்த குமாரசாமி நந்தகுமார் (வயது 49) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் காரணமாக புத்தூர், மீசாலைப் பகுதிகளில் நேற்றிரவு பதற்றம் நிலவியது.

இதேவேளை -

நுணாவில் சந்திப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற சூட்டுச் சம்பவம் ஒன்றில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

அப்பகுதியில் உள்ள படைமுகாமில் இருந்து தண்ணீர் பவுஸர் ஒன்றில் வந்த படையினரை நோக்கி இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

(ஐ-12-78)

கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்சி)

பட்டிருக்கின்றார். இதன்போது வடக்கு - கிழக்கு நிலைவரம் தொடர்பாக அமைச்சருடன் சம்பந்தன் கலந்துரையாடுவார்.

வடக்கு - கிழக்கில் இராணுவத்தினரின் கெடுபிடிகள் மற்றும் பாதுகாப்பு நட வடிக்கைகளால் உருவாகியுள்ள நெருக்கடி நிலைமை பற்றியும் அங்கு தொடர்ந்து இடம்பெற்று வரும் படுகொலைகள் மக்களின் இடம்பெயர்வு மற்றும் அண்மையில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை ஆகிய விடயங்களை அமெரிக்க அமைச்சருக்கு சம்பந்தன் எடுத்து விளக்குவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-க)

பருத்தித்துறையில்..

(முதலாம் பக்கத் தொடர்சி)

குண்டுத் தாக்குதல்களின் போது எவ்வாறு செயற்படவேண்டும் என்ற ஒத்திகைப் பயிற்சியில் படையினர் ஈடுபட்ட சமயம் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன என்று கொழும்பில் இராணுவ வட்டாரம் ஒன்று தெரிவித்தது. (ஐ-3-70)

மரண அறிவித்தல்கள்

திருமதி ஆறுமுகம் அமராவதி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவை வசிப்பிடமாகவும் தற்போது பாண்டியன்தாழ்வில் வசித்தவருமாகிய திருமதி ஆறுமுகம் அமராவதி நேற்று (21.01.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் மனைவியும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் இராசலிங்கம், சாந்தலிங்கம், காலஞ்சென்ற சண்முகலிங்கம், பஞ்சலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகலட்சுமி, மகாராணி, தர்சினி, நித்தியானந்தபூபதி, ஈஸ்வரி, லீலாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, பார்வதி, மருதடியான் மற்றும் அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் பறுவதம் செல்லம்மா, காலஞ்சென்ற கண்ணம்மா, சின்னம்மா, காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, தையல்முத்து (சின்னத்தங்கச்சி) பிள்ளையம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2006) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லயன் ஆ.சாந்தலிங்கம்,
12/3, சந்தனமாதா கோயில் வீதி,
பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குழி.
தொ.பே. 4590488 (45584)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்.

திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சரஸ்வதி நேற்று (21.01.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(47469)

தகவல்:
மகன்.

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் பருத்தித்துறை [illegible]ம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த்தேசியக் கண்ணோட்டத்தில் வெளிவரும் ஞாயிறு சிறப்பம்சம்
உதயன்
22.01.2006

உயிரழிவையும் சொத்தழிவையும் பெருமளவில் கண்ட முல்லைத்தீவு

முல்லைத்தீவில் ஆழிப்பேரலை பெரும் அழிவுகளை ஏற்படுத்தி 3ஆயிரத்து 343 உயிர்களைக் காவுகொண்டு ஓர் ஆண்டு நிறைவடைந்துவிட்டது. முல்லைத்தீவு மக்கள் தமிழீழ விடுதலைப் போராட்ட ஆரம்பகாலம் தொட்டு பெரும் உயிர்விலைகளையும் பொருள் அழிவுகளையும் சந்தித்து வந்துள்ளனர். ஆழிப்பேரலை பேரழிவினை முல்லைத்தீவில் ஏற்படுத்தியது.

ஆழிப்பேரலை ஏற்பட்டு ஓர் ஆண்டு நிறைவடைந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிக குடியிருப்புகளில் தங்கியுள்ளனர்.

ஆழிப்பேரலையால் முல்லைத்தீவின் செல்வபுரம், வட்டுவாகல், வலைஞர் மடம், முள்ளிவாய்க்கால், மாத்தளன், அம்பலவன் பொக்கனை உட்பட பல கரையோரக் கிராமங்கள் அழிவடைந்துள்ளன. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்றாலும் ஒரு குடும்பம் கூட நிரந்தர வீட்டில் குடியேறவில்லை.

கடந்த காலப் போரும் ஆழிப்பேரலையும் முல்லைத்தீவு மக்களை பெரும் பாதிப்புக்குள் தள்ளியுள்ளன. போர் காலத்தில் சிறிலங்காப் படையினரால் முல்லைத்தீவு மக்கள் சந்தித்த படுகொலைகளை ஆழிப்பேரலை அழிவுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியம். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முல்லைத் தீவு மாவட்டத்திற்குத் தனி வரலாற்றுத் தடங்கள் போரின் சுவடுகள் உள்ளன.

ஒதியமலையில்

முல்லைத்தீவு ஒதியமலைப் படுகொலையே முல்லைத்தீவு மாவட்ட தமிழ் மக்களை முதலில் உலுப்பி விட்டது. 1984 டிசெம்பர் மாதம் இரண்டாம் நாள் அதிகாலையில் ஒதியமலை கிராமத்துக்குள் புகுந்த சிறிலங்காப் படையினர் 32 அப்பாவித் தமிழ் மக்களைப் பிடித்துச் சென்று ஒதியமலை கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தருகில் உழவு இயந்திரத்தினை பாரிய இரைச்சலுடன் ஒலிக்கவிட்டு பிடிக்கப்பட்டவர்களின் சேட்டுக்களை கழற்றி கைகள், கண்களை கட்டியபின் சுட்டுக்கொன்றனர்.

இப்படுகொலையுடன் முல்லைத்தீவு ஒதியமலைக் கிராமத்திலிருந்து முற்றாக தமிழ் மக்கள் இடம்பெயர்ந்தனர். 1997 ஆம் ஆண்டு சிறிலங்காப் படையினர் ஜெயசிக்குறு படை நடவடிக்கை மூலம் மக்கள் இடம்பெயர்ந்த ஒதியமலை கிராமத்தினை ஆக்கிரமித்தனர்.

1999ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் ஓயாத அலைகள 3 நடவடிக்கை மூலம் ஒதியமலைக் கிராமம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மீட்டெடுக்கப்பட்டது. போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு நான்கு ஆண்டுகள் நெருங்கும் நிலையில் ஒதியமலையில் இதுவரை 190 வரையான குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளதுடன் விவசாய முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர். ஒதியமலை பாடசாலையும் 120 வரையான மாணவர்களுடன் இயங்கி வருகிறது.

முள்ளியவளையில்

1985 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் நாள் முல்லைத்தீவு படைத் தளத்திலிருந்து சென்று முள்ளியவளை கிராமத்தினைச் சுற்றிவளைத்த சிறிலங்காப் படையினர் 17 அப்பாவி தமிழ் மக்களைக் கைதுசெய்து மண்டமொன்றில் வைத்து கடும் சித்திரவதை செய்த பின்னர் சுட்டுக்கொன்றனர்.

இதில் ஒன்பது மாதக் கர்ப்பிணிப் பெண் ஒருவரை உரலில் படுக்க வைத்து துடிக்க துடிக்க சிறிலங்காப் படையினர் வாளினால் வெட்டிக் கொன்றனர்.

இதேவேளை 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் நாள் முல்லைத்தீவு ஒட்டுசுட்டானை சுற்றி வளைத்த சிறிலங்கா படையினர் 24 அப்பாவி தமிழ் மக்களை கைது செய்து படுகொலை செய்தனர். ஒட்டுசுட்டான் பிரதேச மக்களின் வாழ்வில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்திய சம்பவங்களில் இப்படு கொலையும் ஒன்றாகும்.

கொப்பேகடுவ பேசிய சிறிது நேரத்தில்...

1986ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் நாள் முல்லைத்தீவிலிருந்தும் டொலர் பாம், கென்பாம் பகுதிகளிலிருந்து புறப்பட்ட 5,000இற்கும் அதிகமான சிறிலங்கா படையினரால் வவுனியா நெடுங்கேணிக் கிராமம் சுற்றி வளைக்கப்பட்டது. இரு நாள்கள் இச்சுற்றிவளைப்பு இடம்பெற்றது. சுற்றிவளைப் பின் இறுதியில் சிறிலங்கா படைகளுக்கு பொறுப்பாக இருந்த மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ சுற்றிவளைத்து பிடித்த மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

அவ்வுரையில் ''புலிகள் முடிந்தால் நம்முடன் நேரில் மோதிப் பார்க்கட்டும் நாம் யார் என்று காட்டுகிறோம்'' என்றும் 'மக்கள் புலிகளைக் காட்டித்தர வேண்டும் என்றும்' புலிகளுடன் உறவுவைத்துக் கொள்ளக் கூடாது எனவும் மக்களை மிரட்டும் வகையில் உரையாற்றினார். இக்கூட்டம் வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கொப்பேகடுவ பேசியது தமிழீழ விடுதலைப் புலிகளின் கரந்தடிப்போர் முறை உச்சக் கட்டத்தில் இருந்த காலத்தில் ஆகும். புலிகளின் தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாத சூழலில் இப்படையினர் அப்போது இருந்தனர்.

இக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம் முல்லைத் தீவிலிருந்த மக்கள் நிரம்பி வழிந்த படி பேருந்து வந்துகொண்டிருந்தது.

கொப்பேகடுவ பாதுகாப்புக் கருதி வானில் சுற்றிக்கொண்டிருந்த உலங்குவானூர்தி முல்லைத்தீவு தண்டுவான் பகுதியில் மக்களுடன் வந்துகொண்டிருந்த பேருந்து மீது தாக்குதலை மேற்கொண்டது. இப் பேருந்திலிருந்த 17 அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழந்தனர். 60இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

ஸ்ரீலங்காப் படையினரால் நெடுங்கேணி [illegible] தேடுதல் நடவடிக் கைக்கு தலைமை வகித்த மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ தலைமையில் முல்லைத்தீவு தண்டுவான் பேருந்து படுகொலை இடம்பெற்றதுடன், நெடுங்கேணியிலும் 60 வரையான மக்கள் பிடிக்கப்பட்டு பூசாவதை முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

இந்தியப் படையினர் காலத்தில்

புலிகளிடம் தோல்வி கண்ட ஸ்ரீலங்கா அரசு இந்தியாவிடம் ஓடியது. 1987, 1988, 1989,1990 ஆம் ஆண்டு முற்பகுதி வரை ஜே.ஆரின் அரசியல் சூழ்சிகளுக்கு பலியாகிப்போன அன்றைய இந்திய அரசு இந்திய - இலங்கை ஒப்பந்தமென்ற பெயரில் தனது ஆக்கிரமிப்புச் சிறகுகளைத் தமிழர் தாயகத்தில் விரித்திருந்தது.

இந்தியப் படையினர் யாழ்.குடாநாட்டினை முழுமையாக ஆக்கிரமித்த சூழலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை வன்னிக்கு நகர்ந்தது. தமிழீழ விடுதலைப் போராட்ட தலைமை முல்லைத்தீவு மணலாற்றுக் காட்டில் நிலைகொண்டு இருப்பதை அறிந்த இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இராணுவ தளங்களை அமைத்துத் தாக்குதல்களை நடத்தியது.

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் இந்திய படைகளின் காலத்தில் அனுபவித்த துன்பங்கள் சொல்லில் அடங்காதவை. முல்லைத்தீவு, குமுழமுனை, தண்ணீரூற்று, முள்ளியவளை, செம்மலை, அளம்பில், புதுக்குடியிருப்பு ஆகிய முக்கிய கிராமங்களின் மக்கள் இந்தியப் படையினரால் பல உயிரிழப்புகளையும் சொத்தழிவினையும் எதிர்கொண் டவர்கள்.

மணலாறு காட்டினை நோக்கி தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் நிலைகொண்டிருந்த இடத்தினை நோக்கி மேற்கொள்ளப் பட்ட பல இந்திய இராணுவ நடவடிக்கைகள் தோல்வியில் முடிந்தபோதெல்லாம் முல்லைத்தீவு மக்கள் இந்தியப் படையின ரால் வதைக்கப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல அப்பாவித் தமிழ், முஸ்லிம் மக்களை இந்தியப் படையினர் படுகொலை செய்தனர்.

முஸ்லிம் மக்களையும்...

யாழ்ப்பாணத்தில் புலிகள் - இந்திய படையினர் மோதல் தொடங்கி அது முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவிய காலம். புலிகளின் தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாத இந்தியப் படையினர் மக்களை இலக்கு வைத்து தாக்குதல்கள் தொடுத்தனர்.

முள்ளியவளையில் இடம்பெற்ற மோதல்களில் தோல்விகளைச் சந்தித்த இந்தியப் படையினர் தமிழ் மக்களை மட்டுமல்ல முள்ளியவளை நீராவிப் பிட்டியில் செறிவாக வாழ்ந்த முஸ்லிம் மக்களையும் கடுமையாகத் தாக்கினர்.

இந்த நிலையில் பல முஸ்லிம் மக்கள் இடம்பெயர்ந்து நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர். மாலை 5 மணியளவில் பாடசாலையில் அருகில் இருந்த குளத்தில் இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்கள் நீராடி தொழுகையில் ஈடுபட்டிருந்த போது மக்களை இலக்குவைத்து இந்தியப் படையின் உலங்குவானூர்தி நடத்திய அகோரத் தாக்குதலில் ஐந்து முஸ்லிம் மக்கள் உயிரிழந்தனர். பதினைந்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம் மீது இந்தியப் படையினர் எறிகணைத் தாக்குதல் நடத்தினர். இதில் ஆலயம் சேதமடைந்தது. புலிகளை எதிர்கொள்ள முடியாத இந்தியப் படையினர் தமிழ் மக்கள் மீது பலத்த தாக்குதல்களை நடத்தி பல படுகொலை நடத்தியதுடன் பொருளாதார அழிவுகளையும் ஏற்படுத்தினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போரில் தோல்வி கண்ட இந்தியப் படைகள் 1990 ஆம் ஆண்டின் முற்பகுதியில் தமிழர் தாயத்தை விட்டு வெளியேறினர். தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற நோக்குடன் பிரேமதாச அரசுடன் புலிகள் பேச்சுகளில் ஈடுபட்டனர். 1990ஆம் ஆண்டு நடுப்பகுதியில் பிரேமதாச அரசுடனான பேச்சுகள் முறிவடைந்து இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கியது.

தமிழர் தாயகத்தில் இருந்த சிறிலங்கா ப்படைத்தளங்கள் மற்றும் காவல் நிலையங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் முற்றுகைக்கு உள்ளாகின. சிறிலங்கா படையினரின் முல்லைத்தீவு படைத்தளமும் புலிகளின் முற்றுகைக்கு உள்ளாகியது.

நகரினைச் சிதைத்து படைத்தளம் அமைத்தது அரசு: மீண்டும் ஆழிப்பேரலை சிதைத்து நிர்மூலம்

முல்லைத்தீவு படைத்தளம் தமிழர் மீது புரிந்த கொடூரங்கள் பற்றி நோக்க வேண்டியது அவசியம். முல்லைத்தீவில் 1968 ஆம் ஆண்டு 75 படையினருடன் முல்லை படைத்தளம் அமைக்கப்பட்டது.

முல்லையின் எல்லைக் கிராமங்களில்

முல்லைத்தீவின் எல்லைக் கிராமங்களான கொக்குளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி உள்ள

முல்லையிலிருந்து
கி.மைதினி

டக்கிய ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து தமிழ் மக்கள் 1984 இல் விரட்டியடிக்கப்பட்டனர். இக் கிராமங்களில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டதுடன் தமிழ்க் கிராமங்கள் அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன.

1984 ஆம் ஆண்டு முல்லைத்தீவு, கொக்குளாய், கொக்குத்தொடுவாய் ஆகிய கிராமங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழ் மக்களை போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு நான்கு ஆண்டுகள் நெருங்கும் நிலையிலும் மீளக்குடியமர சிறிலங்கா படைகளும் அரசும் அனுமதிக்கவில்லை. (VIII பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரங்களைப் பகிர்ந்த சைப்பிரஸின் அரசியலமைப்பு!

அது தோல்விகண்டாலும் ஒரு முன்னுதாரணமே!

இன்றைக்கு ஆறாவது தசாப்தத்தை கடந்துவிட்ட இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்திற்கு இதுவரை நிரந்தரத் தீர்வொன்றை எட்டமுடியாமை அரசியல் வாதிகளின் இயலாத்தனத்தையே புலப்படுத்துகின்றது. உலகின் பல நாடுகள் மொழி, இன, மத ரீதியில் தத்தமது உரிமைகளிற்காகப் போராடியே தோற்றம் பெற்றுள்ளன. குர்தியரும், ஈராக்கியரும், பொஸ்னியரும் தென்னாபிரிக்கரும் வியட்நாமியரும் பங்காள தேசத்தினரும் பலஸ்தீனியரும் இவ்வாறு போராட்டங்களை மேற்கொண்டே தமது தீர்வை எட்டினர் - எட்ட முயற்சிக்கின்றனர். கொள்கைகள், இலக்குகள் அற்ற மாபியாக் குழுக்கள் உலகப் பயங்கரவாதிகளே. ஏதோவொரு இலக்குடன் மக்களின் சுயாட்சிக்காகப் போராடும் குழுக்கள் 'போராளிகள்', 'விடுதலை விரும்பிகள்', 'சுதேசிகள்' என்றே அழைக்கப்படல் வேண்டும் என்பது அண்மைய அரசியல் அவதானிகளின் கருத்து.

இலங்கையைப் பொறுத்தவரை இனப்பிரச்சனை விடயமென்பது 'தெய்வம் வழிவிட்டாலும் பூசாரி வழிமறிப்பான்' கதையாகவே உள்ளது. ஆரம்பகாலகட்டத்தில் ஆட்சிபீடம் ஏறிய கட்சிகள் ஏதோவொரு தீர்வுக்கு வருவது போல் 'போக்கு காட்டுவதும்' எதிர்கட்சிகள் அதனை எதிர்ப்பதும் வழமையாகிவிட்ட நிலைப்பாடாக இருந்தது. எனினும், கடந்த 2000 களின் பின் இந் நிலைப்பாட்டில் சிறிது மாற்றம் ஏற்பட்டு ஆளும்கட்சி, எதிர்கட்சி இரண்டும் ஏதோவொரு வகையில் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண வேண்டுமென முனைகையில் புதிய மூன்றாவது சக்திகள் முட்டுக்கட்டைபோட முனைகின்றன. ஜே.வி.யும் ஹெல உறுமயவும் இம் மூன்றாவது சக்தியில் முதலிடம் வகிக்கின்றன, 'ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு' என ஏனோ கற்றுக்குட்டித் தவளைகள் அடம்பிடிக்கின்றன. இவை ஆரம்ப கால அரசியல் பற்றியோ இனப் பிரச்சினையின் அடிப்படை பற்றியோ அறியாத 'கிணற்றுத் தவளை' அரசியல்வாதிகளின் செயற்பாடே.

ஜே.வி.பியின் தோற்றம் ஒரு கொள்கையுடன் பின்னியதாக அமையவில்லை. 'அரசியல் ரவுடிகளாகவே' அவர்களின் தோற்றம் கணிக்கப்பட்டது. அதேபோல், ஜாதிகஹெல உறுமயவும் 'காவி ரவுடிகளின்' களியாட்டக் களமாகவே காணப்படுகிறது. இவர்களின் ஜனநாயகப் பயிரிடைகளைத் தன்மையை நிதர்சன அரசியல் வாதிகள் கட்டுப்படுத்தல் அத்தியாவசியமாகின்றது.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு எனும்போது இதுவரை காலமும் தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிய எத்தனையோ உயிர்களை விதைத்த - தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமானது இத்தகைய தீர்வை ஏற்குமா...? என்பதும் கேள்விக்குறியே.

ஒற்றையாட்சித் தீர்வு என்பது சாத்தியமற்றது என்றபோதும் ஒற்றையாட்சிக்குள் தீர்வு நாகரிகமான முறையில் சைப்பிரசில் எவ்வாறு பேணப்பட்டது என்பதை நோக்குதல் செய்வோம்.

இலங்கையைப் போலவே சைப்பிரஸும் இயற்கை வளம் மிகுந்த நாடாகும். இந்நாடு 1960 களில் சுதந்திரமடைந்த பின் நாகரிகமான, மனித நேயமிகு தீர்வுமிக்க அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இங்கு வாழும் கிரேக்க, துருக்கிய, மரோனைற் கிறிஸ்தவ, ஆர்மோனிய மக்களை திருப்திப்படுத்துவதாக இத்தீர்வுத் திட்டம் அமையப்பெற்றமை சர்வதேச மட்டத்தில் பாராட்டப்பட்டது. சைப்பிரசின் சனத்தொகை விகிதாசாரத்தில் கிரேக்கர்கள் 80 வீதமாகவும் துருக்கியர் 18 வீதமாகவும் காணப்பட ஏனையோர் மிகுதி 2வீதமாகவும் காணப்பட்டனர்.

சைப்பிரசின் இத்தகைய அரசியலமைப்பின்படி ஜனாதிபதி கிரேக்க இனத்தவராக இருப்பார். துணை ஜனாதிபதி துருக்கியராக இருப்பார். அதேபோல் சபாநாயகர் கிரேக்கராகவும், துணைச் சபாநாயகர் துருக்கியராகவும் காணப்பட்டனர். விகிதாசார முறைப்படி தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் சபையே நாட்டை நிர்வகிக்கும். அரசியல் அதிகாரம் மிக்கதாகவும் காணப்பட்டது. சகல நிர்வாக சேவையிலும் கிரேக்கர் இருவரும், துருக்கியர் ஒருவரும் பொறுப்பு வாய்ந்த பதவியில் அமர்த்தப்பட்டனர். ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டே காணப்பட்ட அதேவேளை, ஜனாதிபதிக்குரிய அதிகாரம் துணை ஜனாதிபதிக்கும் சமவலுவுடன் காணப்பட்டது.

எந்தவொரு இன, மொழி, மதரீதியான பிரச்சினைகளையும் பிரதிநிதிகள் சபையே தீர்த்தது. முடியாவிடில் சர்வஜன வாக்கெடுப்புகள் நடத்தப்பட்டன. இரு இனங்களினதும் வாக்குகள் எண்ணப்படும்போது இரு இனத்தவர்களினதும் பிரதிநிதிகள் கண்டிப்பாக பிரசன்னமாய் இருத்தல் வேண்டும் என்பது இங்கு எழுதப்பட்ட விதியாகும். பிரதிநிதிகள் சபை நிர்வாகத்தில் ஈடுபட்டாலும், அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்டவையாகவே காணப்பட்டன.

இன விடயங்கள், மதசார்பான நம்பிக்கைகள், பண்பாடுகள், கலாசாரங்கள், சமூகச் சார்பான விடயங்கள் போன்றவற்றை கவனிக்க 'இணைக் குழுக்கள்' (Commynal Chambbrs) அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டமையும் இனங்களுக்கிடையிலான முறுகல் அற்ற நிலைப்பாட்டை பேணுதற்கு சைப்பிரஸ் அரசியல் அமைப்பு வழிவகுத்தது. அத்துடன் நிதி, நிர்வாகம், நாட்டுப் பாதுகாப்பு, குடியியற்சேவை, ஆயுதப் படைகள் காவற்றுறைகள் யாவற்றிலுமே பிறழ்வற்ற விகிதாசார முறை பின்பற்றப்பட்டது. எவ்விதத்திலும் அடக்குமுறையும் சுரண்டற் போக்கும் இங்கு காணப்படவில்லை. சட்டவாக்கல் முறையும், நீதிமன்றங்களின் செயற்பாடும் இனங்களின் பண்பாடு, பழக்க வழக்கங்களுக்கு ஏற்றவகையில் நீதிமன்ற முறைமைகளும் இரண்டாகவே பிரிக்கப்பட்டு காணப்பட்டன. வாதப் பிரதிவாதங்கள், பேரவையின் செயற்பாடுகள், சட்ட அமுலாக்கல்கள் போன்றவையும் இவ்வாறான 'தனித்துவம்' பேண் தன்மையுடனேயே காணப்பட்டன.

சைப்பிரஸின் முக்காற் பாகத்திற்கும் மேல் இன மேலாதிக்கமுடன் காணப்பட்ட கிரேக்கர்கள் சகல விடயத்திலும் சிறுபான்மை துருக்கியர்களின் உரிமைகளைப் பேணி நடக்க முற்பட்டனர். எனினும், துருக்கி அரசு தனது சுரண்டற் போக்கையும் வல்லாதிக்க எண்ணத்தையும் சைப்பிரஸ் மீது திணிக்க முற்பட்டது. இதற்கு சைப்பிரஸ் வாழ் துருக்கியரும் ஒத்துப்போனமை துரதிஷ்டமே. காலப்போக்கில் ஏகாதிபத்திய அரசுகளதும், துருக்கியினதும் தலையீட்டால் இத்தகைய சிறப்புமிகு ஒற்றையாட்சி அரசியலமைப்பு உடைவு கண்டது.

இத்தகைய அரசியலமைப்பு ரீதியான ஒற்றையாட்சி முறையைப் பேண ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற கட்சிகள் தயாரா...? எனக் கேட்டால் விளக்கமில்லாத 'ஒற்றையாட்சி முறையிலான தீர்வு' என்கிறார்கள். இவர்களது சித்தாந்தப்படி 'சிங்கள இனத்தால் ஆளப்படுகின்ற, அடக்கப்படுகின்ற ஒரு இனமாக தமிழினம்' நோக்கப்படுகின்றது.

இது நடைமுறை அரசியலிற்கு ஒத்துவராத விடயம். ஒற்றையாட்சி எனும் போது சைப்பிரஸின் அதிகாரபூர்வமுடைய ஒற்றையாட்சி முறை கூட இனவாத மிகு இத்தகைய குழுக்கள் உள்ள நாட்டில் சாத்தியமில்லை.

ஆகவே, இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரம் சமவலுப்பட்டதான 'சமஷ்டி முறையிலான' அரசியல் தீர்வே வழி வகுக்கும். அத்தகைய சமஷ்டி முறையானது கனடிய சமஷ்டியை ஒத்ததாகவோ, சுவிஸ் சமஷ்டியை ஒத்ததாகவோ காணப்படலாம். சிலவேளை அரைச் சமஷ்டி எனப்படும் இந்திய முறை கூடப் பின்பற்றப்படலாம். இவை எதற்குமே இனவாத சிங்கள அரசு செவிசாய்க்காத பட்சத்தில் - பிரிந்துபோதலைத் தவிர சிறுபான்மைத் தமிழருக்கு வேறு வழியில்லை என்பதை சர்வதேச சமூகம் உணர்தல் வேண்டும்.

இதை விடுத்து சர்வகட்சி மாநாடு, அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகளைப்பயன்படுத்தி 'உலக சண்டித்தனம்' இவையெல்லாம் முற்றிலிட்ட இனப்பிரச்சினை விடயத்தை பூதாகாரமாக்குமேயன்றி, ஒருபோதும் எவ்விதத் தீர்வுக்கும் வழி சமைக்காது என்பதை இலங்கை அரசு நன்குணர்தல் வேண்டும். அத்துடன், சர்வதேச சமூகமும் இனப் பிரச்சினை விடயத்திற்கு பூரண அழுத்தத்தை இலங்கை அரசு மீது திணிக்க வேண்டும் என்பதும் அவசியமாகின்றது.

விஸ்வாமித்திரன்

மகவொன்றின் பிறப்பில்.....

சாம்பல் பூத்த மேட்டில்
விடிவெள்ளியின் பார்வை
பூத்திருக்கிறது
இரவிலும் பகலிலுமாக

ஒரு சூரியனாய்
ஒளி கொள்ளப் போதவிட்டாலும்
விரும்பி ஒளி சிந்தி நிற்கிறது

மெழுகுவர்த்தியின் ஆத்மாக்கள்
ஆயிரம் சூரியனாய் - இந்த
தேசத்தில் உதிக்கப்போகிறது
இனவாத இருட்டின் திரைகளை
சுட்டெரிப்பதற்காக

பறவைகளெல்லாம்
தம்மை அழகுபடுத்தி- இப்போது
பூபாளமாய் புன்னகைக் குரலிடுகின்றன

மேகங்களெல்லாம் தொலைவிலுள்ள
உறவுகளுக்கு நல்லவல்ல
செய்தி சொல்ல
வரிசையாய் நகர்கின்றன

கார்த்திகைப் பூக்களின்
மகரந்தப் பொடிகள்
இன்பக் கருக்கொள்ள
[illegible]

தேசிய கீதமாய் ஒலிக்கிறது

நாளைய முன் விநாடிகளில்
மகவொன்றின் பிறப்பில்
கார்த்திகைப் பெண்களின்
மகிழ்வைப் போல ஆடிப்பாட -
தமிழ்
உறவுகள் ஆயிரம் ஆயிரம்
லட்சங்களாய்
தொப்புள் கொடி மூலத்துடன்.

-சுதேசிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரிகாவின் துணிவை நிரூபித்த சூரியகந்த!

மக்களின் தலைவி என்ற விதத்தில் சந்திரிகாவிடம் பல குறைபாடுகள் இருந்தன. இருப்பினும் அதன் மத்தியிலும் சந்திரிகா துணிச்சல் மிக்கவராக இருந்தார். அரச அதிகாரம் கிடைக்கும்போது ஒரு பயந்தாங்கொள்ளிக்குக் கூடத் துணிவு வரும். ஆனால், ஒரு மக்கள் தலைவரின் அல்லது தலைவியின் துணிவைச் சோதித்துப் பார்ப்பதாயின் அவர் ஆட்சியில் இருக்கும்போதல்ல. பதிலாக ஆட்சியில் இல்லாத வேளையிலேயே சோதித்துப் பார்க்கவேண்டும்.

சூரியகந்தவில் இருந்த மனிதப் புதை குழிகளைத் தோண்டுவது என சந்திரிகா எடுத்தமுடிவும் அந்த முடிவை அவர் செயற்படுத்திய விதமும் சந்திரிகாவின் துணிவைச் சோதிப்பதற்குக் கிடைத்த மிகப்பெரிய சந்தர்ப்பம் எனக் கருதமுடியும். சூரியகந்தவில் பாரிய மனிதப் புதைகுழி ஒன்று இருப்பது பற்றிய தகவல்களை அந்தப் பகுதியில் வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டிருந்த இளம்பொறியியலாளர் மூலம் நான் அறிந்துகொண்டேன். பணிமனையிலுள்ள பதிவுகளின்படி அந்தப் பொறியியலாளர் 1993 டிசம்பர் 8 ஆம் திகதி முதன்முதலாக 'ராவய' பத்திரிகைப் பணிமனைக்கு வந்துள்ளார்.

அதன்பின்னர் அந்தப் பொறியியலாளர் அதே மாதம் 27, 28 ஆம் திகதிகளிலும் 'ராவய' பணிமனைக்கு வந்துள்ளார். அந்தப் பொறியியலாளரின் முதலாவது விஜயத்தை அடுத்து சூரியகந்தவில் மனிதப் புதைகுழிகள் இருப்பது தொடர்பான அறிக்கை ஒன்று 12-12-1993 ஆம் திகதிய 'ராவய' பத்திரிகையில் பிரசுரமானது.

அந்த அறிக்கை வெளியான பின்னர் அந்தப் பொறியியலாளர் மீண்டும் 'ராவய' அலுவலகத்திற்கு வந்தபோது சூரியகந்தவில் மனிதப் புதைகுழிகள் அமைந்துள்ள இடங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட வரைபடங்களைக் கொண்டு வந்தார். அவரது இரண்டாவது விஜயத்தின்போது இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து மிகவும் உணர்ச்சிவசப்பட்டு விவரித்தார். அந்த வரைபடத்தில் குறிப்பிட்ட இடங்களைச் சுட்டிக்காட்டி விளக்கியபோது அவரது கைவிரல்கள் நடுங்கியதையும் காணமுடிந்தது.

அவரது விளக்கத்தின்படி றக்வான-தெனியாய வீதியில் சூரியகந்த நகருக்கு இரண்டரைக் கிலோமீற்றர் இப்புறம் -116 ஆம் கிலோமீற்றர் கல்லுக்கு அண்மையில் கடமுதுணுக் கிராமத்தில் அந்த மனிதப் புதைகுழிகள் அமைந்திருந்தன. சூரியகந்தவில் ரெலிகொம் மற்றும் ரூபவாஹினிக் கோபுரங்களை நோக்கிச் செல்லும் பாதையில் கடமுதுணுச் சந்தியிலிருந்து தெற்காக அக்பர்த் தேயிலை தோட்டத்தின் அபர்பொயில் டிவிசன் ஊடாகச் செல்கிறது. அந்தப் பாதையில் சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் வரை செல்லும்போது பாலம் ஒன்றைக் காணலாம்.

அந்தப் பாலத்தின் கீழ் ஓடை ஒன்று ஓடுகிறது. அந்தப் பாலத்தின் மேலே நின்று பார்க்கும்போது நீர் ஓடும் பக்கத்தில் புதிய மணலான மண்மேடு ஒன்று சுமார் 10 மீற்றர் தூரத்தில் தெரியும். அந்த இடத்திலேயே மனிதப் படுகுழிகள் அமைந்திருந்தன.

பாலத்திலிருந்து சுமார் 2 கிலோமீற்றர் தூரம் முன்னோக்கிச் செல்லும்போது சூரியகந்த ரெலிகொம் மற்றும் ரூபவாஹினி கோபுரங்களைக் காணமுடியும். அதற்கு அப்பாலேயே சிங்கராஜ வனமுள்ளது. அந்த வீதியின் இறுதிவளைவில் ரூபவாஹினிக் கோபுரத்தின் கீழ் மான்ஹோல் (Manhole) ஒன்றுள்ளது. அதன்மீது நின்று முன்னோக்கிப் பார்க்கும்போது சுமார் 30 மீற்றர் நீளத்திலான புல்டோசரால் வெட்டப்பட்ட நிலப் பகுதியைக் காணமுடியும். அந்த இடத்தில் அமைந்துள்ள மனிதப் புதைகுழிகளின் எண்ணிக்கை மூன்றாகும். ஒருமனிதப் படுகுழியின் மீது முட்பற்றைகள் வளர்ந்திருந்தன. மற்றைய இரு மனிதப் படுகுழிகள் மீது புல் நன்கு செழித்து பற்றையாக வளர்ந்திருந்தது.

இந்த இடமானது கடல் மட்டத்திலிருந்து 440 அடி உயரத்தில் அமைந்திருந்தது. எனவே, அங்கு கடும் குளிர் நிலவியது. அந்தக் குளிர் காரணமாக மனிதப் புதை குழிகளுக்குள் கிடந்த சடலங்கள் பழுதடையாமல் இருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்தப் பிரதேசம் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்டதாகும். 1988-89 ஆண்டு காலகட்டத்தில் இந்தப் பிரதேசத்தின் பாதுகாப்புக்காக இராணுவத்தின் பீரங்கிப்படை இங்கு நிலைகொண்டிருந்தது. தற்போது அங்கு பொலிஸ் பிரிவு நிறுத்தப்பட்டுள்ளது. கொலன்ன பொலிஸ் நிலையத்தின் கீழ் இந்தப் பிரிவு இயங்குகிறது. இந்த விசேட பொலிஸ் பிரிவில் ஒரு சப் இன்ஸ்பெக்டரும் 5 பொலிஸாரும் பணியாற்றினர்.

தகவல் தந்த இளம்பொறியியலாளர் தெரிவித்த விவரங்களின்படி சூரியகந்தவுக்கு அண்மையில் அமைந்துள்ள சிங்கராஜ வனத்தில் மலை உச்சியில் இலங்கை மின்சார சபைக்குக் கோபுரம் ஒன்றை அமைக்கும் ஒப்பந்தம் 'மறுபெனி' என்ற ஜப்பான் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. கோபுரத்திற்கான பாகங்களைக் கொண்டு செல்ல வசதியாக வீதியை அமைக்கும் பணி ஒப்பந்த அடிப்படையில் கொழும்பிலுள்ள கபில ஆர்.எஞ்ஜினியர்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. உத்தேசப் பாதையில் இருந்த பற்றைகள் புல்டோசரால் ஒதுக்கப்பட்டு மனிதப் புதைகுழிகள் அமைந்திருந்த பகுதி ஊடாகவே அமைக்கப்படவிருந்தது. குறித்த இடத்தினூடாகவே வீதி அமைப்பதாயின், 15-20அடி உயரத்திற்கு மண்ணிட்டு நிரப்ப வேண்டும். அவ்வாறு செய்தால் இந்த மனிதப் புதைகுழிகள் பூரணமாக மூடப்பட்டுவிடும்.

தகவல்தந்த அந்த இளம் பொறியியலாளரிடம் சூரியகந்த மனிதப் புதைகுழிகள் தொடர்பான விவரங்கள் அனைத்தும் இருந்தபோதிலும் அதுகுறித்து என்ன செய்யவேண்டும் என அவர் அறிந்திருக்கவில்லை. மனிதப் புதைகுழிகளுக்கு மேலாகச் செல்லும்பாதை அமைப்புப் பணிகளுக்கு இடமளிக்கக் கூடாது என்பதே அவரது கருத்தாக இருந்தது. இந்த விடயம் தொடர்பாக அந்த இளம் பொறியியலாளருடன் உரையாடிக் கொண்டிருந்த போதே என்ன செய்யலாம் எனச் சிந்தித்தேன். அது அந்த இருண்டயுகம் தொடர்பான நினைவுகளைக் கொண்டு வந்தது.

இருண்ட யுகத்தில் தென்பகுதியில் மக்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர். அது ஜே.வி.பியால் ஆரம்பிக்கப்பட்டு அரசாங்கத்தால் முடித்துவைக்கப்பட்ட சோகச் சம்பவங்கள் எனக்கூறலாம். அந்த வேளையில், ஜே.வி.பியும் அரசும் போட்டி போட்டு மக்களைக் கொன்றன.

வடக்கில் 20 ஆண்டுகளாக நடைபெற்ற யுத்தத்தில் மடிந்த உயிர்களின் எண்ணிக்கைக்குச் சமமான உயிர்கள் தெற்கில் ஒரு குறுகிய காலத்திற்குள் மடிந்தன. மயிர்க்கூச்செறியும் விதத்திலான அந்தப் பயங்கர நடவடிக்கைகள் தெற்கில் சிங்கள சமூகத்தின் நெஞ்சங்களில் வடுக்களை ஏற்படுத்தி அவர்களது உணர்வுகளைக் கொன்ற காரணத்தால் இன்றும் தென்பகுதி மக்களுக்கு உயிர் இருந்தாலும் மனச்சாட்சி செத்தே அவர்கள் சமூகத்தில் வாழநேர்ந்துள்ளது.

பயங்கரப் படுகொலைகள் இடம்பெற்ற நாடுகளில் சமூகத்தில் அதனால் ஏற்பட்ட உளப் பாதிப்பைப் போக்க உண்மையை அறியும் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுகின்றன. மேற்கொள்ளப்பட்ட மனிதப் படுகொலைகள் பற்றிய அடிமுடி அவற்றின் மூலம் கண்டறியப்படும்.

அவ்வாறான ஆணைக்குழுக்கள் சிலி, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளில் அமைக்கப்பட்டன. காணாமற்போனோர் தொடர்பாக ஆர்ஜன்டீனா நாட்டில் நியமிக்கப்பட்ட தேசிய ஆணைக்குழுவினால் (Nunca Mas Never Again) வெளியிடப்பட்ட அறிக்கை அந்நாட்டில் பெரும் சர்ச்சையை உருவாக்கக் காரணமாக அமைந்தது. ஸ்ரீலங்காவில் எங்களுக்கும் என்றோ ஒருநாள் அவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. அவ்வாறான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு சூரியகந்த நிகழ்வுகள் வலுவான அடிப்படையாக அமையும் என நான் நம்பினேன்.

பாதுகாப்பு வலயமான சூரியகந்தப் பகுதியை ஆக்கிரமித்து அங்குள்ள மனிதப் புதைகுழிகளைத் தோண்ட வேண்டும் என்பதே எனது முடிவாக இருந்தது. அந்தக் குறிப்பிடத்தக்க விசேட நடவடிக்கைக்குப் படைத் தலைவியாக சந்திரிகாவே இருக்கவேண்டுமெனவும் தீர்மானித்தேன்.

இளம்பொறியியலாளர் எனது காரியாலயத்தை விட்டுச்சென்ற பின்னர் கொழும்பு றொஸ்மிட் பிளேசில் வசித்துவந்த சந்திரிகாவுடன் நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அன்று கிறிஸ்மஸ் தினமாகும். சந்திரிகா விடுமுறையைக் கழிப்பதற்காகத் தாயாருடனும் தனது பிள்ளைகளுடனும் பேருவல ஹோட்டலுக்குச் சென்றுள்ளார்எனத் தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னர் நான் எஸ்பி.திஸநாயக்கவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு மிக அவசர விடயமாக சந்திரிகாவைச் சந்திக்க பேருவல செல்லவுள்ளேன் எனவும் என்னுடன் பேருவலவுக்கு வருமாறும் தெரிவித்தேன். நாங்கள் சந்திக்க வருவதாக ஹோட்டலில் தங்கியிருந்த சந்திரிகாவுக்குத் தெரிவித்தேன். எமது வருகைக்காகச் சந்திரிகா உற்சாகத்துடன் காத்திருந்ததை அறிந்துகொள்ளமுடிந்தது.

இதுமிகவும் முக்கியமான பேச்சு என சந்திரிகா புரிந்து கொண்டதாலோ என்னவோ நாங்கள் அங்கு சென்றதும் அவரது தாயாரை (சிறிமாவை) அங்கு அழைத்து வருமாறு வேலையாளிடம் தெரிவித்தார். அந்த நேரத்தில் சிறிமா கவுண் அணிந்திருந்தார். நாங்கள் இருந்த மேசைக்கு வந்த சிறிமா எங்களுடன் அமர்ந்து கொண்டார்.

இளம்பொறியியலாளர் தெரிவித்த தகவல்களை நான் அவர்களுக்கு விளக்கினேன். சிறிமாவுக்கு ஒரு பாதி கேட்காத நிலையில் இருந்ததால் எஸ்.பி.திஸநாயக்க சற்று உரத்த குரலில் அவருக்கு விவரங்களை எடுத்துக்கூறினார். முழுவிவரங்களையும் கேட்டறிந்த பின்னர் என்ன செய்யலாம் என்ற முக்கியமான வினாவை சந்திரிகா முன்வைத்தார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மற்றும் சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் சூரியகந்த சென்று புதைகுழி

சமாதான தேவதையாகத் தன்னை இனம் காட்டிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அரசியலைவிட்டு ஒதுங்கி நீண்ட காலம் வெளிநாட்டில் தங்கியிருந்த அவர், இலங்கை திரும்பியதும் திடீரென அரசியலுக்குள் உள்வாங்கப்பட்டார். மிக விரைவிலேயே பிரதமராகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் ஆகிக் கொண்டார்.

தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர் தன்னை மக்களின் நெருங்கிய நண்பி போன்று காட்டிக் கொள்வதில் சந்திரிகா முழு மூச்சுடன் செயற்பட்டார். சூரிய கந்தையில் போய் நின்று புதைகுழி தோண்டினார். கிராமங்களிற்குள் இறங்கி மக்களைச் சந்தித்தார். அவற்றை அடித்தளமாக வைத்துக்கொண்டு சமாதானச் சாயத்தையும் பூசி ஜனாதிபதியானார். ஆட்சிபீடம் ஏறியதும், எல்லா அரசியல்வாதிகள் போன்று சந்திரிகாவும் நடந்துகொண்டார். மக்களை மறந்தார்; தான் ஓர் அரசி போன்று நடந்துகொண்டார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என நாட்டு மக்களுக்கு சத்தியம் செய்த அவர், தனது 11 வருட பதவிக் காலத்தில் அந்தக் கதிரை தந்த சொகுசான கத்தகதப்பை முழுமையாக அனுபவித்தார். தன் வாக்குறுதியை மறந்துவிட்டுப் போகும் போது மற்றொருவரிடம் கையளித்துவிட்டும் போய்விட்டார்.

சந்திரிகா ஆட்சியிலிருந்தபோது அவர் பற்றிய கதைகளுக்கு எப்படிக் குறைவில்லையோ அதேபோன்று அவர் பதவி விலகிய பின்னும் செய்திகளுக்குக் குறைவில்லை.

அந்த வகையில் ஆட்சியிலிருந்த சந்திரிகா பற்றிய தொடர் இது.

சந்திரிகா அரசியலுக்குள் மீள நுழைந்தபோது அவருக்கு ஆதரவாக இருந்து, அவரது வெற்றிக்கு வழிவகுத்தவர் விக்டர் ஐவன். பிரபல அரசியல் ஆய்வாளரும், 'ராவய' வார இதழின் ஆசிரியருமான அவர் ஒரு காலத்தில் சந்திரிகாவுக்கு உற்ற நண்பர்.

கருத்து முரண்பாடுகளால் பின்னர் சந்திரிகாவிடமிருந்து விலகினார் விக்டர் ஐவன். அவரே இந்தத் தொடரை வரைந்துள்ளார். சந்திரிகாவின் வீரதீரங்கள், துணிவு, பொய், புரளி, பித்தலாட்டம் என்பன பற்றிய பல சுவையான அம்சங்களை அவர் இதில் திரட்டித் தந்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இந்தத் தொடர் எழுதப்பட்டிருந்தது. அதனை அப்படியே மொழியாக்கம் செய்து சூரியகாந்தியில் தொடர் கட்டுரையாக வெளியிடுகிறோம்.

சென்று வா மகளே சென்று வா... 3

தமிழில் : கஜனி

சந்திரிகா அதனை ஏற்றுக்கொண்டார்.

இருப்பினும், "அந்தப் பிரதேசம் பாதுகாப்பு வலயம் என்பதால் பொலிஸார் தடுக்கக்கூடும். அவ்வாறான நிலைமை தோன்றினால் எவ்வாறு நிலைமையைச் சமாளிப்பது" என்ற கேள்வியை சந்திரிகா முன்வைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாகாண சபை உறுப்பினர்களுக்கும் பாதுகாப்புக்கென வழங்கப்பட்ட பொலிஸாரை நாங்கள் சூரியகந்தவுக்கு அழைத்துச்சென்றால் அங்கு கடமையிலிருக்கும் 5 பொலிஸாரை விட எங்களுடன் அங்குவரும் பொலிஸாரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் எனவும் அங்குள்ள பொலிஸார் எமக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேலதிக பொலிஸாரை அழைத்தாலும் அவர்கள் குறித்த இடத்தை வந்துசேர ஒருமணி நேரத்திற்கு மேலாகும் என்பதால் எமது நோக்கத்தை (புதைகுழிகளைத் தோண்டும் பணியை) நிறைவேற்றக்கூடியதாகவிருக்கும் என நான் தெரிவித்தபோது சந்திரிகா எமது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இணங்கினார்.

இந்த நடவடிக்கையை 1994 ஜனவரி 3 ஆம் திகதி மேற்கொள்ளுவது எனத் திட்டமிடப்பட்டிருந்தது. ஜனவரி 2 ஆம் திகதி இரவு சர்வராத்திரி பிரித் ஓதும் வைபவம் மேல்மாகாண சபையில் நடத்துவது என ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. எங்கள் முன்னிலையில் மாகாண சபைச் செயலாளரை அழைத்த முதலமைச்சர் சந்திரிகா, 2 ஆம் திகதி நடைபெறவிருந்த பிரித் ஓதும் வைபவத்தை வேறு ஒருதினத்திற்கு ஒத்திவைக்குமாறு பணித்தார்.

அவ்வேளையில், சந்திரிகா ஒரு மந்திரம் போல் செயற்பட்டுத் தீர்மானங்களை மேற்கொண்டார். நடவடிக்கைகளில் கலந்துகொள்ளும் பத்திரிகையாளர்கள் 3 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவியின் வீட்டுக்கு வந்துசேர வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டபோது அதிகாலை 4 மணிக்கு வருவது அவர்களுக்குச் சிரமமாயிருக்கும் எனச் சந்திரிகா தெரிவித்தார். அவர்கள் அதிகாலை 4 மணிக்கு உற்சாகத்துடன் வந்து சேர்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டபோது அவர் (சந்திரிகா) அதனை ஏற்றுக்கொண்டார். (VI பக்கம் பார்க்க..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிலுக்கேற்ற ஆடைகள் அணிந்து உடல் நலத்தைப் பாதுகாப்போம்!

மழைக்காலம் முடிந்து இப்போதுதான் லேசாக வெயில் அடிக்கத் தொடங்கியிருக்கிறது. சுள்ளென அடிக்கும் வெயிலில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள உடைகள் போதும். வெயில் அடிக்கும் சமயத்தில் உடல் தட்ப வெப்பநிலையை உடைகளால் சமப்படுத்திக் கொள்ள முடியும். இதில் முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது உடையின் நிறம், மற்றும் அதில் பயன்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருள் ஆகியவற்றைத்தான். நிறத்தைப் பொறுத்தவரை வெளிர்நிறம். நல்லது. கறுப்பு நிறம் மற்றும் அடர்த்தியான நிறங்களைத் தவிர்த்துவிட வேண்டும். இளநிற உடைகள் வெப்பத்தை உடலில் இருந்து அப்புறப்படுத்தி விடும். வெயில் நேரத்தின்போது வெள்ளை நிற ஆடைகள் உடுத்தினால் வெப்பமானது உடலை அவ்வளவாகத் தாக்காது.

சில பெண்கள் வெயில் அதிகமாக இருக்கும்போது தங்களது குழந்தைகளுக்கு அடர்த்தியான பலவண்ண ஆடைகளை உடுத்துவதுண்டு. குழந்தைகள் அழகாகத் தோன்ற வேண்டும் என்ற ஆசையில் அவர்கள் இப்படிச் செய்கிறார்கள். இது குழந்தையின் உடல் நலத்தைப் பாதிக்கும் என்பது அவர்களுக்குத் தெரியாது போலும். உடல் சூடு காரணமாகக் குழந்தைகளின் வயிறு கடுமையாக வலிக்கும். சில சமயங் களில் ஜீரண கோளாறும் ஏற்படுவதுண்டு. அதனால், குழந்தைகளுக்கு வெயில் நேரத்தில் பருத்தியால் ஆன வெளிர்நிற உடைகளைத்தான் உடுத்தவேண்டும். இவற்றில்கூட தற்போது நல்ல டிசைன்களில் உடைகள் உள்ளன. வெயிலின்போது கை இல்லாத பனியன்கள் மற்றும் கை இல்லாத சட்டைகளைக் குழந்தைகளுக்கு அணிவிக்கலாம். இதை அணிவது அவர்களுக்குச் சௌகரியமாக இருக்கும். ஒருவித முகமலர்ச்சியுடன் வீட்டில் விளையாடுவார்கள்.

கோடையில் குழந்தைகளுக்கு உடல் முழுவதும் மூடுவது போன்ற உடைகளை உடுத்தினால் அவர்களுக்கு வியர்வை அதிகமாக வெளியேறி உடல் முழுவதும் பிசுபிசுவென்று மாறிவிடும். இதனால் ஏற்படும் அசௌகரியத்தால் உருண்டு புரண்டு அழுவார்கள். இதையறியாத தாய்மார்கள் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருள்கள், பிஸ்கட் என்பவற்றைக் கொடுத்து ஏமாற்றுவார்கள். எனவே, வெப்பம் மிகுந்த நேரத்தில் இப்படிப்பட்ட உடைகளைக் குழந்தைகளுக்கு அணிவிக்கக்கூடாது. பெண்கள்வெயில் நேரத்தில் எடுப்பாகக் காட்டுவதற்காகப் பட்டுச்சேலை, பாலியஸ்டர், ஷிபான் உடைகளை அணிகிறார்கள். இதனால் வெப்பமானது உடலைத்தான் அதிகமாய் தாக்கும். வெயிலுக்கு மென்மையாகக் பருத்திச் சேலைகள், பருத்தி உடைகளை அணியலாம். இது வெப்பம் உடலைத் தாக்காத வண்ணம் பாதுகாத்துக்கொள்ளும்.

சுடிதார், சல்வார்கமிஸ், மினி போன்றவை தற்போது பருத்தியில் அதிகமாக வரத்தொடங்கி உள்ளன. பெண்கள் வெயிலின்போது இந்த வகை உடைகளை உடுத்திக்கொண்டு வெளியில் செல்லலாம். குறிப்பாக, வெப்பமான காலங்களில் சமையல் அறையில் பெண்கள் பாலியஸ்டர், ஷிபான், பட்டு போன்ற உடைகளை உடுத்திக்கொண்டு வேலை செய்வது நல்லதல்ல. பருத்தி உடைதான் நல்லது.

எழுந்துவா... தோழி...!
சூரியச் சுவாலையில்...
சூரியன் வெந்திடில்
சூக்குமச் சுவாலையில்
பெண்ணிவள்... சாகலாம்.

நிலவுகள்...!
நாம் நிலவுகள் என்றே
எழுதப்பட்டதால்...
தேய்த்து... தேய்த்தே
ஏய்த்துப் பிழைக்கிறார்...

பாத்திரம் தேய்ப்பது...
பெண்ணின் வேலையா....?
காத்திரமானதோர்....
பாத்திரம் பெண்ணென
பாத்'திறம்' எழுதட்டும்...
பாத்திரம் தேய்க்கலாம்...
பாத்'திறம்' தோய்க்கலாம்...!

தோழி...!
புங்குடுதீவில்....
எம்மவர்... எரிந்ததும்
நீர்வேலியில்... எம்மவர்
மறைந்ததும்...
கேள்வியாகவே...
முடிந்தது... முறையோ...?
வேள்விகள்... எங்கடி...?

★★★

யாரிவர் .. நெருப்பை...
தூசென.. தொட்டவர்...?
பாசிச வெறியுடன்...
பசித்துடை நின்றவர்...?
கூசுதே... தோழியே
எம் சோதரி... சோகமாய்...

★★★

எரிதணல்... நாமென
எழுவதெப்போது...?
எத்தர்கள்... எரிபட்டு
வீழ்வதெப்போது...
இன்றவர்... கதைதனை
கதையென....
முடிப்பதோ....?
காலங்கள்....
எம்... கதை...
கறையாய்ப் பார்ப்பதோ...?

★★★

தோழியே...!
எழுந்திடு...
தீப்பொறி ... நாமெடி...
தீயவர்... தீண்டிடில்
வெடித்திடும்... இனிப்பொறி

பொறுத்தது ... போதுமே...
புயலென... புறப்படு...
எரி... தீ நீயென....
எழுதிடு... புதுவரி...

- பூங்கோதை

செயல்ரீதியாக உரிமைகளைப் பெறுவோம்

இன்று உலகமானது பூகோளமயமாதல் என்பதை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கையில் நாம் இன்றும் பெண்ணடிமை தீரவேண்டும், பெண் சமத்துவம் வழங்கப்பட வேண்டும், பெண்களின் உரிமைகள் பேணப்பட வேண்டும் என்று பேச்சளவில் மட்டும் ஈடுபட்டு வருகின்றோம். பெண்கள் தங்களுக்குச் சுதந்திரம் கிடைக்கவேண்டும் என்று வீதியில் இறங்கிப் போராடிய காலம் மலையேறிவிட்டது என்றே கூறலாம். இன்று ஒவ்வொரு பெண்களும் செயல் ரீதியாகத் தங்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது.

பெண்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் என்பது மேலான விடயம். இந்த உரிமைகளை நாம் கேட்டுப் பெறுவதற்கு அது வோட்டு அல்ல. இவற்றை வழங்க வேண்டியது அனைவரினதும் கட்டாய கடமையாகும். எங்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. பறிபோய்விட்டன என வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடந்த காலங்கள் உருண்டோடி விட்டன. செயல் திறன் ரீதியாக முன்நின்று செயற்பட வேண்டியது அனைவரினதும் கடமை.

தலைமைத்துவத்தை எடுத்துக் கொண்டால் பெண்களுக்குத் தலைமை தாங்கும் பண்பு இல்லை. ஆண்களுக்கே தலைமை தாங்கும் பண்பு உண்டு என எங்களில் சிலர் எண்ணுகின்றனர். நாம் தலைமைத்துவத்தில் மிளிர வேண்டுமாயின் ஆளுமை என்பது அவசியம். ஆண்களும் பெண்களும் உடலியல் ரீதியில் வேறுபட்டவர்களே அன்றி ஆளுமை ரீதியில் ஒன்றுபட்டவர்கள் அல்லது ஒரு படி மேம்பட்டவர்கள் என்றே கூறலாம். எனவே, எங்களால் முடியாது, இயலாது என எங்களுக்குள்ளேயே தாழ்வு மனப்பாங்கை நாமே உருவாக்கிக் கொள்ளாமல் அனைத்துத் துறைகளிலும் கூடிய பங்களிப்பைச் செலுத்துவோமாயின் அது எங்கள் எதிர் கால சந்ததிக்குப் பயனுள்ளதாக அமையும். ''மங்கையராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திடல் வேண்டும்'' என்று பாரதி கூறினான். அப்படிப்பட்ட மகத்தான பேற்றை பெற்ற நாம் இந்த நாடு போற்றும், உலகம் போற்றும் பெண்ணாக மிளிர வழி செய்வோம்.

கே.சுபா,
யாழ்ப்பாணம்.

தடைகளைத் தகர்த்து வாழ்வில் முன்னேறுவோம்!

பெண்களை எப்படியாவது முன்னேற விடக்கூடாது என்றுதான் பல ஆண்கள் ஏதாவது ஒரு வகையில் முட்டுக்கட்டை போட்டு விடுகிறார்கள். அதை தகர்த்து எறிந்தால்தான் இளம் தலைமுறைப் பெண்கள் தடையின்றி முன்னேற முடியும் - இவ்வாறு நம்பிக்கையூட்டுகின்றார் 8 ஆண்டுகளுக்கும் மேல் விமானியாக (பைலட்) திறம்பட பணியாற்றி வியப்பில் ஆழ்த்தி வரும் நீத்துகுப்தா! வயது 27. இந்தியாவின் மராட்டிய அரசுக்குச் சொந்தமான விமானத்தை இயக்கும் இவர் எதிலும் துணிச்சலானவர். விமானத்தை இயக்குவதில் கில்லாடி.

அவர் கூறிய வார்த்தைகளில் சில....

பட்டப்படிப்பை முடிச்சதுமே பைலட் பயிற்சியில் ஈடுபட்டேன். தொடக்கத்துல நான் பெண் என்பதால் சில ஆண்கள் இவளால் விமானத்தை இயக்க முடியுமா? இந்த வீண் ஆசை தேவைதானா? என்று முணு முணுத்தனர். அப்போதும் கூட நான் தன்னம்பிக்கையை இழக்கவில்லை

ஆனால், ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். பெண்கள் பயமின்றி வாழப் பழகிக்கொள்ள வேண்டும். ஆண்களிடம் எப்போதுமே உஷாராகத்தான் இருக்க வேண்டும். தினமும் உடற்பயிற்சியோ வாக்கிங்கோ செய்து உடல் நலனைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தனித்தன்மையை ஒரு போதும் இழக்கக் கூடாது ''நான் மராட்டிய அரச விமான பைலட்டாக இருந்த சமயத்தில் சில முதல் மந்திரிகள் வெளியூர் பயணத்தின்போது என்னைத்தான் அழைப்பார்கள். அவர்களுக்கு எனது திறமை மீது அவ்வளவு நம்பிக்கை. நான் சமீபத்தில் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்று ஏர்பஸ் - 320 ரக விமானம் ஓட்டப் பயிற்சி பெற்றேன். அந்த அனுபவத்தை எப்போதுமே மறக்க முடியாதுதான். பெண்கள் பைலட் வேலைக்கு வர பயப்படுறாங்க. டெக்னிக்குளை நன்றாகக் கற்றுக்கொண்டால் விமானம் இயக்குவது சிம்பிள் தான். இனியாவது நிறையப் பெண்கள் பைலட் பயிற்சி பெற முன் வரணும் என்பது தான் என்னோட ஆசை என்கிறார் நீத்து!



அர்த்தமுள்ள வாழ்விற்கு...

அன்பு ஒன்றே அன்புடையோனையும்
அன்புக்கு பாத்திரமானவரையும்
மாசற்றவராக்கி நற்செயலில்
தூண்டிவிடக் கூடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிமையாலும் தன்னடக்கத்தாலும் உயர்ந்தவர் பிக்காஸோ...!



வாழ்க்கையின் உன்னத நிலையான பெயரையும் புகழையும் பெற்றவர்கள் எளிமையும் தன்னடக்கமும் கொண்டவர்கள் என்பது வரலாற்றில் அறிஞர்களிடம் கற்ற பாடம்.

எளிமைக்கும் தன்னடக்கத்துக்கும் பெயர் போன ஒருவர் தான் பாப்லோ பிக்காஸோ. இவர் உலகப் பிரசித்தி பெற்ற ஓவியர். 'மொடேர்ன் ஆர்ட்' என்ற ஒருவகை ஓவியத்தை வரைந்ததால் இவர் உலகப் புகழ் பெற்றார்.

இவரை 'மொடேர்ன் ஆர்ட் மன்னர்' என்றும் 'மொடேர்ன் ஆர்ட்டின் தந்தை' என்றும் அழைக்கிறார்கள். இவரது ஒவ்வொரு ஓவியமும் பல லட்சம் ரூபா பெறு மதியானது. இவரது ஓவியம் இருக்கும் வீட்டுக்குக் கிடைக்கும் அந்தஸ்தை வெறும் வார்த்தைகளால் கூறி விடமுடியாது. இவரது ஓவியங்கள் இத்தனை அரியது.

பிக்காஸோ ஒருமுறை தனது நெருங்கிய நண்பர்களுக்கு வீட்டில் விருந்து கொடுத்தார். விருந்தின் போது வந்திருந்த நண்பர்களில் ஒருவர் மட்டும் பிக்காஸோ வீட்டின் சுவர்களையே நோட்டம் விட்டுக் கொண்டிருந்தார்.

இறுதியில் அவர் பிக்காஸோவைப் பார்த்து ''இது உங்கள் வீடுதானா ? ஆச்சரியமாக இருக்கிறது. நீங்கள் வரைந்த ஒரு ஓவியம் கூட உங்கள் வீட்டுச் சுவர்களில் இல்லையே'' என்று கேட்டார். இதனைக் கேட்ட பிக்காஸோ ''உண்மைதான். வீட்டுச் சுவர்களில் எனது ஓவியங்களை மாட்டி வைத்து அழகு பார்க்க எனக்கும் ஆசைதான். ஆனால், பல லட்சம் ரூபா விலை கொடுத்து எனது ஓவியத்தை வாங்க நான் ஒன்றும் கோடீஸ்வரன் இல்லையே'' என்றார் அமைதியாக.

பிக்காஸோவின் தன்னடக்கத்தைக் கண்டு நண்பர் பெரிதும் வியந்தார்.

பிக்காஸோ நினைத்திருந்தால் தன் வீடு முழுக்க ஓவியங்களை வரைந்து மாட்டி 'இதுதான் உலகப் புகழ்பெற்ற ஓவியர் பாப்லோ பிக்காஸோவின் வீடு' என்று தற்பெருமையுடன் மார் தட்டியிருக்க முடியும்.

ஆனால், அவரோ தன்னடக்கத்துடன் வாழ்ந்தார். அதன் காரணமாக அவர் உலக அளவில் புகழ் பெற்றார். அவர் மறைந்து விட்டாலும் அவரது பெயருக்கும் புகழுக்கும் மறைவேது?

தம்பி, தங்கைகளே! நாமும் தன்னடக்கத்துடன் வாழப் பழகுவோம்.

- கவிதா

அறிவினில் உயர்ந்திடுவோம்!

எண்ணையும் எழுத்தையும் கண்ணெனப் போற்றி நாம்
கருத்துடன் கற்றிடு வோம்
மண்ணையும் மதத்தையும் மொழியையும் போற்றியே
மனிதராய் வாழ்ந்திடு வோம் - இங்கே

ஐந்து ''எஸ்'' கோட்பாட்டை அகத்தினில் ஏற்றி
முந்தியே நின்று நாம் சுகாதாரம் பேணியே
மாசற்ற தூசற்ற உன்னதம் காத்து நாம்
வகைப் படுத்தி வாழ் வோம் - இங்கே

எங்களின் பாட சாலை இது என்றெம்
எண்ணத்தை அனைவரும் உள்ளத்திற் கொண்டு நாம்
அதனதன் இடத்தினில் அனைத்தையும் பேணியே
தொடர்ந்து நாம் தொழிற்படு வோம் - நாங்கள்

இலவசப் பாடநூல் அழகுறப் பேணுவோம்
பலரிதைப் படித்திடும் வாய்ப்பினை நல்குவோம்
அலகுகள் அனைத்தையும் அன்றாடம் கற்று நாம்
அறிவினில் உயர்ந்திடு வோம் - நாங்கள்

அதிபரும் ஆசிரி யர்களும் சொல்லிடும்
அறிவுரை கேட்டு எம் உள்ளங்கள் சில்லிடும்
அதன்படி ஒழுகி எம் அவனிக்கு உழைத்திட
அனைவரும் முயன்றிடு வோம் - நாங்கள்

கவிமணி க.ஆனந்தராசா (அதிபர்)

(ஜப்பானின் உதவித்திட்டத்துடன் நடைமுறையாக இருக்கும் பாடசாலைகளுக்கான 'SMEQUE' கல்விப் போதனையின் அடிப்படையைப் பிரதிபலிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ள மாணவர் கீதம் இது)

தெரிந்து கொள்ளுங்கள்

- பூனையின் கண்களுக்கு வெவ்வேறு வண்ணங்களைப் பகுத்தறியும் தன்மை கிடையாது. அதன் கண்களுக்கு எல்லா நிறங்களும் கறுப்பு வெள்ளையாகத் தான் தெரியும்.
- ஆஸ்திரேலியாவில் கோலா என்னும் சிறு கரடி இனம் இருக்கிறது. இதற்கு எதிரிகளே இல்லை. ஏன் தெரியுமா? தலைவலி தைலம் தயாரிக்கும் யூக்கலிப்டஸ் எனும் மர இலையை உண்ணும். அந்த இலையில் உள்ள எண்ணை உடலில் சேர்ந்து ஒரு வித வாடையை உண்டாக்கும். எனவே, கோலா மாமிசத்தை எந்தப் பிராணியும் உண்ணாது.
- ஒருவன் தன் வாழ்நாளில் சுமார் 50 டன் உணவைச் சாப்பிடுகிறான் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இது சுமார் 12 யானைகளின் எடைக்குச் சமனான உணவு.
- உலகிலே அதிக முட்டையிடும் மீன் காட்மீன் தான். இது ஒரு தடவைக்கு சுமார் 60 இலட்சம் முட்டைகள் இடுகின்றன. ஆனால், இதைவிட ஆச்சரியம் அந்த முட்டைகளில் சுமார் 6 முட்டைகள் தான் குஞ்சு பொரிக்கின்றன.
- மற்ற எல்லா உயிரினங்களின் உடல்களும் ஒரு குறிப்பிட்ட வயது வரைதான் வளர்ச்சி அடையும். ஆனால், முதலையின் உடல் மட்டும் அது சாகும் வரை வளர்ந்து கொண்டே இருக்கும்.
- ஆமையின் வேகம் தரையில் தான் குறைவு. கடலில் உள்ளஆமைகள் மணிக்கு 20 மைல் வேகத்தில் நீந்துகின்றன. ஆனால், மனிதனின் நீச்சல் மணிக்கு 10 மைல் தான்.

தியாகராசா அருளாளினி
தரம் 11, யாழ்/ இந்து மகளிர் கல்லூரி

செய்து பாருங்கள்

எமது வீட்டை அழகுபடுத்துவதற்கு பலவகையான அலங்காரப் பொருள்களைக் கடையில் விலை கொடுத்து வாங்குகிறோம். எமது ஒய்வு நேரத்தை சிறந்த முறையில் கழிக்க நாமே அவற்றைச் செய்துகொள்ளலாம். போத்தல்கள் கொண்டு பூ அலங்காரம் செய்யும் முறையைப் பார்ப்போம்.

தேவையான பொருள்கள்:-

* பாவனை முடிந்த அழகான போத்தல்
* சிறு துண்டுகளாக உடைத்த முட்டைக் கோதுகள்
* பசை * வர்ணக் கலவை * வாணிஸ்

செய்முறை

* போத்தல் மீது உடைத்த முட்டையின் கோதுகளை பசை பூசி நெருக்கமாக ஒட்ட வேண்டும்.
* ஒட்டிய முட்டைக்கோதுகளின் மேல் அழகுற விரும்பியவாறு வர்ணம் தீட்டுங்கள். அதன் மேல் வாணிஸ் பூசிக் காய விடுங்கள். அழகான போத்தல் பூச்சாடி தயார். அதில் அழகான மலர்களை வைத்து வீடுகளை அலங்கரியுங்கள்.

என்ன தம்பி தங்கைகளே, அழகான பூச்சாடி கிடைத்து விட் டாதா?

- கஜன்

உங்களின் கைவண்ணங்கள்

என். ஜீவன்
தரம் 9சி, சென்.ஜோன்ஸ் கல்லூரி.

வி.கோ.துவன்,
தரம் 9சி, யா/ஸெல்வியட் மத்திய மகா வித்தியாலயம்.

பூரீ.அக்ஷி
தரம் 5, யா/உடுவில் மகளிர் கல்லூரி.

க.பிரபாவினி
தரம் 6, யா/இந்து மகளிர் ஆரம்ப பா.சாலை

வர்ணந் தீட்டி மகிழுங்கள்....!

போட்டி இலக்கம் - 10

தம்பி, தங்கைகளே.....!

மேலே காணும் படத்திற்கு வர்ணம் தீட்டி கத்தரித்து அனுப்பி வையுங்கள். அழகுற வர்ணம் தீட்டி சிறந்த படங்களை அனுப்புவோரில் முதல் மூவருக்கு முறையே ரூ.150/=, ரூ.100=, ரூ.75 /= பெறுமதியான வர்ணம் தீட்டுவதற்கான உபகரணங்கள் பரிசில்களாக வழங்கப்படும். 5ஆம் தரத்துக்கு உட்பட்ட சிறுவர்களே இப்போட்டி யில் கலந்துகொள்ளமுடியும். எங்கே முயன்று பாருங்கள்! கை வண்ணத்தைக் காட்டுங்கள்!!

இந்தப் பரிசில்களை வழங்கும் நிறுவனம்: -

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 222 5542

அனுப்பவேண்டிய முகவரி:-
'வர்ணம் தீட்டுவோம்' - 10, சூரியகாந்தி 'சிறுவர் பொழில்'
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வர்ணம் தீட்டி மகிழுங்கள் போட்டியில் ஏராளமான சிறுவர்கள் ஆர்வத்துடன் பங்குகொண்டு படங்களை அனுப்பியிருக்கின்றனர். அவர்களில் பலர் தங்கள் பெயர்விபரம், பாடசாலை விபரம் என்பவற்றைக் குறித்து அனுப்பத் தவறியதால் அவர்களது வண்ணங்கள் தெரிவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. நீங்கள் வர்ணம் தீட்டி அனுப்பும் படத்துடன் உங்கள் பெயர், பாடசாலையின் பெயர், வகுப்பு போன்ற விவரங்களை தவறாமல் சேர்த்து அனுப்புங்கள்.

வர்ணம் தீட்டுவோம் போட்டி இலக்கம் -09இல் தெரிவுசெய்யப்பட்ட மூவரின் விவரங்கள் வருமாறு:-

- **முதலாம் இடம் :-**
  க.சங்கவி, தரம் -2சி,
  யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
- **இரண்டாம் இடம் :-**
  லோகநாதன் நிலான், தரம் - 4,
  நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி.
- **மூன்றாம் இடம் :-**
  கோ.ஆனந்த கிருஷ்ணன்,
  தரம் - 4ஏ,
  சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைக் காய்ச்சல்:

அவதானம் தேவை! அச்சம் வேண்டாம்!!

தற்போது ஆசியாக் கண்டத்தில் 12 நாடுகளிலும் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளிலும் பரவியுள்ள பறவைக் காய்ச்சல் நோய் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் 80 பொது மக்கள் 5 நாடுகளில் உயிரிழந்துள்ளனர். இவையாவும் இலங்கை மக்கள் மத்தியிலும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பீதியைப் போக்க கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் போதிய நடவடிக்கை எடுத்து வருகின்றது.

கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில் இந்த நோய் பற்றிய தாக்கங்கள், இதன் மூலம் கோழிப் பண்ணைகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள், நீண்டகாலப் பொருளாதாரரீதியான பாதகமான விளைவுகள், உயிரியல் அடிப்படையில் விரைவு இனப் பெருக்கம் காரணமாக விகாரம் அடையக் கூடிய சந்தர்ப்பம் அதிகமாதலால் இந்த நோய்க் காரணியான 'இன்பூளுன்சா வைரஸ்' இனம் மனிதர்களிடையே விரைவில் பரவக்கூடியதொற்று நோயை (Human pandemic) ஏற்படுத்தக்கூடிய அபாயங்கள் யாவும் இன்றைய நிலையில் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றன.

ஆயத்த நிலைத் திட்டம்

இதன் காரணமாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் பறவைக் காய்ச்சல் நோயின் ஆசிய நிலைமை காரணமாக அத்தியாவசிய

சேவையாக பாரிய அவசர கால ஆயத்த நிலைத்திட்டம் (Highly Pathogenic Avian Influenza Comprehensive Emergency Preparedness Plan) ஒன்றினைத் தயாரித்து பரீட்சித்து நோயினை ஆரம்ப நிலையிலேயே இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்தத் திட்டமானது பொதுமக்கள் விழிப்புணர்வும் ஒத்துழைப்பும் தீவிர கண்காணிப்பு,நோய் வராத் தடுப்பு முறைகள் மற்றும் நோய்க் கட்டுப்பாட்டு முறைகள் போன்ற நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் முதலாவதாகக் காணப்படுகின்ற பொதுமக்கள் விழிப்புணர்வு மற்றும் ஒத்துழைப்பின் மூலம் தேவையற்ற - நம்பமுடியாத - உண்மையற்ற - தகவல்களைப் பரப்புதலைத் தவிர்த்தல் அவசியம் ஆகும். இதனை வெற்றிகரமாகச் செயற்படுத்த பிரதேச கால்நடை வைத்திய அலுவலகங்களைச் சார்ந்த திணைக்கள ஊழியர்கள் போதிய தகவல் பரிமாற்றம் பயிற்சி வகுப்புக்களை நடத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் நமது நாளாந்த உணவில் கோழிமுட்டை, கோழி இறைச்சி போன்றவற்றை சேர்த்துக் கொள்வதற்கு எதுவித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்பதே முதலாவது விடயமாகும். மேலும் கோழிவளர்ப்பில் ஈடுபடுவது மற்றைய விடயமாகும்.

ஏற்கனவே, இலங்கையில் சிறுவர்கள் மத்தியில் போசாக்கின்மை, விசேடமாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் தகவலின் பிரகாரம் 5வயதிற்கு உட்பட்ட சிறுவர்களில் 30 வீதமானோர் போசாக்கின்மையால் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். மேலும் கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் கோழிமுட்டை, கோழி இறைச்சி மூலம் இலங்கையில் பறவைக்காய்ச்சல் நோய் பரவும் ஆபத்து என்ற வதந்தி மூலம் தமது உணவில் முட்டை, இறைச்சி போன்றவற்றை தவிர்ப்பதன் மூலம் இலகுவில் போஷாக்கு சம்பந்தமான பாதிப்புகளுக்கு உள்ளாகும் நிலையில் காணப்படுகின்றனர்.

சகுதியான மரணங்கள்

இன்றுவரை இலங்கையின் பல்வேறு பகுதிகளில் சந்தேகிக்கப்படும் பறவைகளின் சடுதி மரணங்கள் யாவும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றபோதும், பறவைக் காய்ச்சல் நோய் கண்டு பிடிக்கப்பட்டு அறிவிக்கப்படவில்லை. இதன் மூலம் இலங்கை உத்தியோக பூர்வமாக பறவைக் காய்ச்சல் நோய் பதிவு செய்யப்படாத நாடாக உறுதியாகின்றது.

அண்மையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் புலம்பெயர் பறவைகளுக்கிடையே இறந்து காணப்பட்ட கடல் நாரை இனத்தில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது பறவைக்காய்ச்சல் பற்றிய சான்றுகள் எதுவும் கண்டுபிடிக்கப்பட வில்லை. இவ்வாறு மக்கள் இந்த நோய் சம்பந்தமாக விழிப்புணர்வுடன் இருக்கும்போது நோயைத் தீவிர கண்காணிப்பின் மூலம் ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து வேண்டிய தடுப்பு முறைகள், கட்டுப்பாட்டு முறைகள் போன்றவற்றை அமுல்படுத்துவதன் மூலம் உலகெங்கும் பீதியை ஏற்படுத்தி ஏனைய சில நாடுகளில் பரவி இருக்கும் பறவைக்காய்ச்சல் நோயை ஆரம்பதிலேயே இல்லாதொழிக்க முடியும் என்பது உறுதி.

தங்கள் பகுதிகளில் கோழிகள் மற்றும் பறவைகள் சடுதியாக மரணம் அடைந்தால் உடனடியாக பிரதேச கால்நடை வைத்திய அதிகாரிக்கு அறிவிப்பதன் மூலம் பொதுமக்களின் ஒத்துழைப்பு பெறப்படுகின்றது. இலங்கையின் சகல பகுதிகளிலும் மாகாணப் பணிப்பாளர்கள் ஊடாகத் திணைக்கள, மாவட்ட மட்டக் கண்காணிப்புக்குழு தீவிரமாக நோய்க் கண்டுபிடிப்பு நடவடிக்கைகளில் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி மூலம் ஈடுபட்டு வருகின்றது.

மேலும், போதிய விழிப்புணர்வின் மூலம் சரியான தகவல் பரிமாற்றங்கள் காரணமாக கோழிப் பண்ணை யாளர்கள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பு மூலம் இந்த நோயைஇலகுவில் ஆரம்பத்தில் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும்.

தற்போதைய நிலையில் கோழிப்பண்ணையாளர்கள் எதுவித அச்சமும் கொள்ள வேண்டியதில்லை. ஆனால், தங்கள் பண்ணைகளின் உயிர்க்காப்பு முறைகளை (Bio Security) முன்னேற்றுவதன் மூலம் முன்னெச்சரிக்கையாக இருக்க முடியும். உயிர்க்காப்பு முறைகளை முன்னேற்றுவது பற்றிய ஆலோசனைகளை பிரதேச கால்நடைவைத்திய அதிகாரி மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஏற்கனவே, இலங்கை அரசாங்கம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மூலம் வெளிநாடுகளில் இருந்து அலங்காரப் பறவைகள், செல்லப் பறவைகள், கோழி இறைச்சி, தாய்க்கோழிக்குஞ்சுகள் மற்றும் பறவைகளில் இருந்து தயாரிக்கப்படும் பொருள்கள் யாவற்றினதும் இறக்குமதி கடந்த ஐப்பசிமாதம் முதல் தற்காலிகமாக தடைசெய்துள்ளது. இதனை பறவைக்காய்ச்சல் நோய் இலங்கைத் தீவினுள் வருவதைத் தவிர்ப்பதற்கான தடுப்பு முறைகளுள் பிரதான நடவடிக்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும், இன்றுவரை ஆசியாவின் 12 நாடுகளில் இந்த நோய் அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச வர்த்தகம், சுற்றுலாத்துறை, மக்களின் பயணங்கள் மற்றும் நாடுகளுக்கிடையே சூளிர்கால புலம்பெயர் பறவைகளின் நடமாட்டங்கள் காரணமாக இலங்கை போன்ற நாடுகள் இந்த நோய்க்கு- பாதிப்புக்கு -உள்ளாகக் கூடிய ஆபத்தில் இருக்கின்றன. எனவே, பொது மக்களின் ஒத்துழைப்பு மூலம் இந்த நோயை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தவும் இல்லாதொழிக்கவும் வேண்டிய நடவடிக்கைகளை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் எடுத்து வருகின்றது.

வெளிநாட்டுப் பறவைகள்

தற்போது இலங்கையில் புலம்பெயர் பறவைகள் மூலம்தான் ஆபத்து அதிகமாகக் காணப்படுகின்றது. இந்தப் பறவைகளில் பெரும்பாலானவை வாத்து, நாரை, நீர்க்காகம் போன்ற இனங்கள் ஆகும். பறவைக்காய்ச்சல் நோய்க்கு காரணமான 'ஏவியன் இன்பூளுன்சா' வைரசுக் கிருமிகள் வாத்து, தாரா இனங்களில் நோயை ஏற்படுத்துவது இல்லை. ஆனால், இந்தப் பறவை இனங்கள் நோய்க்காரணியான குறிப்பிட்ட வைரஸ் இனங்களை (H5,H7) காவுகின்றன. (Cerriers) இந்தக் காவிகள் கோழிகள், வான்கோழிகள் போன்ற நோய்க்குப் பாதிப்பாகக் கூடிய இனங்களுக்கு (Susceptible Species) பரப்புகின்றன. எனவே, புலம்பெயர் பறவைகள் வந்து தங்கும் இடங்களுக்கு அண்மையில் உள்ள கிராமங்களில் வாழும் கோழிப் பண்ணையாளர்கள் மற்றும் வீடுகளில் சிறிய அளவில் நாட்டுக்கோழிகளை வளர்க்கும் மக்கள் மிகவும் விழிப்புணர்வுடனும் அவதானமாகவும் இருந்து தங்கள் கோழிகள் இந்த வெளிநாட்டுப் பறவைகளுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ கலந்துகொள்ளும் சந்தர்ப்பங்கள்

ஆறுமுகம் சிவசோதி
கால்நடை வைத்திய அதிகாரி,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

விலக்கப்பட வேண்டும். அத்துடன், மிகவும் சிறந்த உயிர்க்காப்பு முறைகள் (Bio Security) மூலம் தவிர்த்துக் கொள்வதன் மூலமும் பறவைகளுக்கிடையே ஏற்படக்கூடிய சடுதி மரணங்கள், நோய் அறிகுறிகளை அறிவித்து ஒத்துழைப்பு வழங்குவதால் இந்த நோயை இலங்கையில் பரவுதலை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்த இயலுமாகும்.

எனவே, வழமைபோல பயமின்றி விழிப்புணர்வோடு - போதிய உயிர்க்காப்பு முறைகளோடு - கோழி வளர்ப்பில் ஈடுபடுவதோடு, எதுவித சந்தேகமும் அச்சமும் இன்றி நாளாந்த உணவில் கோழிமுட்டை, கோழி இறைச்சி போன்றவற்றை சேர்த்துக் கொள்வதன் மூலம் போசாக்கு நிறைந்த நோயற்ற சமுதாயத்தை கட்டியெழுப்புவோமாக!.

சந்திரிகாவின்....

(III பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்து பத்திரிகையாளர்கள் வாகனங்களில் சென்று பெல்மதுளையில் பவித்திரா வன்னி ஆராச்சியின் வீட்டில் காலை உணவை அருந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எங்கே போகிறோம்? ஏன் போகிறோம் போன்ற விடயங்களை அங்கு வைத்தே பத்திரிகையாளர்களுக்கும் ஏனையோருக்கும் விளங்கப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும் ஏன் போகிறோம் என்ற விடயத்தை அதுவரை ரகசியமாக வைத்துக்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

தகவல்களை வழங்கிய இளம் பொறியியலாளரை நம்பமுடியுமா? அவர் கையளித்த வரைபடங்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்களில் உண்மை இல்லை எனில் என்ன நடக்கும்? ஆகிய வினாக்களை சந்திரிகா எழுப்பவில்லை. சுருங்கக்கூறின் ஒரு சில தலைவர்களைப் போல எடுத்த பணியை முடிக்காதவிதத்தில் வாதங்களை மேற்கொள்ளவில்லை. பதிலாகக் கிடைத்த தகவல்கள் மீது பூரண நம்பிக்கை வைத்து ஆபத்தான நடவடிக்கைக்கு தலைமைதாங்கும் மனத்திடத்தைச் சந்திரிகா கொண்டிருந்தார்.

சந்திரிகாவின் அந்த நடவடிக்கையானது உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேச மட்டத்திலும் பெரும் புகழை அவருக்கு ஈட்டிக்கொடுத்தது? அந்தச் சம்பவத்தால் அவர்மீது வளர்ந்து வந்த மக்களின் நம்பிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. அந்தப் புகழ் சந்திரிகாவின் அடுத்த வெற்றிக்கும் தேவையான வலுவான அரசியல் செல்வாக்குக்கும் வழியமைத்துக் கொடுத்தது.

இருப்பினும், சூரியகந்தவில் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தர்க்கரீதியான முடிவுக்குக் கொண்டுவருவதில் சந்திரிகா வெற்றிபெறவில்லை என்றே கூற வேண்டும். மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் விடயத்தில் துணிகரமான தலைவியாக அவர் விளங்கிய போதிலும் அது தொடர்பான விசாரணைகளைத் தர்க்கரீதியிலான முடிவுக்குக் கொண்டுவர அவர் அக்கறை காட்டவில்லை.

காணாமற்போனோரைக் கண்டறிய உண்மையை அறியும் ஆணைக்குழுவுக்குச் சமமான ஆணைக்குழு உருவாக்கப்பட்ட போதிலும் அந்த ஆணைக்குழுவானது பக்கச்சார்பற்ற விதத்தில் காணாமற்போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவாகச் செயற்படவில்லை. குறுகிய அரசியல் ஆதாயங்களைப் பெறும்நோக்கில் செயற்பட்ட திட்டமாக அது அமைந்தது. எனவேதான் அந்த ஆணைக்குழுவும் அதன் செயற்பாடுகளும் ஆர்ஜன்டீனா மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்களைப் போல் மனிதப் படுகொலைகளுக்கு எதிராக வலுவான மக்கள் கருத்தை வெளிப்படுத்தக் அமையவில்லை.

[illegible] மக்களின் நெஞ்சங்களில் ஏற்பட்ட வடுக்களைப் போக்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

1994 பொதுத் தேர்தலின் போது முக்கிய கருப்பொருளாக நாட்டில் காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் பற்றிய விவகாரம் அமைந்தது. அந்தத் தேர்தலின் போது அச்சு ஊடகங்கள் ஊடான பிரசாரங்களுக்கான பொறுப்பு (சந்திரிகா சார்பான) என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்தத் தேர்தலின்போது கொலைக் கலாசாரத்தைக் கண்டித்து சந்திரிகாவின் செய்தியுடன் அந்த விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. அந்த விளம்பரத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் என்னுடையவையே ஆகும். அதன் முதல்பகுதி கவிதை வடிவில் அமைக்கப்பட்டது. கவிதை வடிவில் அமைத்தவர் குணசிங்க ஹெட்டி ஆராச்சி. அந்த விளம்பரத்திலுள்ள கண்ணீர் விடும் இளம்தாயின் புகைப்படத்தை வழங்கியவர் டெக்ஸ்டர் குறூஸ் என்பவராவார்.

சூரியகந்த படுகுழிகள் தொடர்பான நடவடிக்கைகளில் முழுவடிவமும் அந்த விளம்பரத்தில் அடங்கியிருந்தன எனக் கூறமுடியும். சந்திரிகாவுக்கு சூரியகந்த விவகாரமானது அவருக்கு பயன்கிடைக்கும் விதத்தில் முக்கியத்துவப்படுத்தப்பட்டதே தவிர பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் தேடும் விதத்தில் முக்கியத்துவம் பெறவில்லை. எவ்வாறாயினும் சூரியகந்த விவகாரமானது சந்திரிகாவின் துணிகரத்திற்கு எடுத்துக் காட்டாக அமைந்தது எனக்கூறலாம்.

(எதிர்பாருங்கள்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருக்கும் இதயம்!

வரையறுக்கப்பட்ட என்
வாழ்வில்
வரையறையற்ற உன்
காதலை,
விழிகளில் கனவுகளுடன் - நீ
வரும் வழிபார்த்து
வியந்து நிற்கின்றேன்...!
காதலை கனவுகளாக்கி
நித்திரையில் உன்
நினைவுகளை நிஜப்படுத்தி
வாழுகின்றேன்
கனவுகள் நிலையற்றவைதான்
என் காதல் நிலையானது
என்றும்
நீ வரும் வரை என்
இதயக் கோயில் உன் வரவை
எதிர்பார்த்துக்
காத்துக்கிடக்கும்! - தர்சினி

அந்த நாளுக்காய்

காற்றோடு
மிதந்துவந்து
காதோரம் கேட்கும்
மென்மையான நாதம்
மெய்சிலிர்க்க வைக்கிறது!
அதிகாலை வேளை
சுதிசேர்த்து வந்து
செவியோரம் கேட்கும்
குயிலோசை நல்ல
குணம் கொள்ளச் செய்கிறது!
கடற்கரையோரம்
காலாற நடக்கையில்
கரையோரம் வந்து
செல்லும் அலையோசை
ஆனந்தப்படுத்தியது!
மொட்டை மாடியில்
நின்று பார்க்கையில்
தெட்டத் தெளிவாய்
தெரியும் வட்ட நிலாவில்
வனப்பு மனதை
வசந்தமாக்கியது!
இத்தனை இன்பமும்
இருந்தென்ன?
சொந்த மண்ணில்
இருந்தபடி
சுதந்திரக் காற்றை
சுவாசிக்க முடியவில்லை...
நாளுக்குநாள்
படுகுழியில்
வீழ்த்தப்படுகிறது
நம் சுதந்திரதேசம்
இது எதுவுமே
புரியாமல் இன்னும்
நாகரிக மோகத்தில்
நம்மவர்கள்!
என்று மாறும்
இந்த நிலை?
என்று மீளும்
நம் தேசம்?
அந்த நாளுக்காய்
இன்னும் கண்ணீர் சிந்தியபடி....
- யாஸ்மினா

ஞாபகங்கள்

மறக்க நினைத்தும்
மறக்க முடியாமல்
புதைக்க நினைத்தும்
புதைக்க முடியாமல்
அழிக்க நினைத்தும் அழிக்க
முடியாமல்
உன் நினைவுகள்
எப்போதும்
எனக்குள்ளே...

நான் உன்னை
மறக்க நினைக்கவும்
புதைக்க நினைக்கவும்
அழிக்க நினைக்கவும்
எண்ணும் போதெல்லாம்
நீ மட்டும் மீண்டும்
உயிர்பெற்று பழைய நினைவுகளை
எனக்குள் மீட்டியபடி
மெல்லிய ஸ்பரிசங்களாய்...

உன்னோடு பழகிய
இனிய நாள்களை ...
என் உடலைத் தழுவும்
தென்றலாய்
மாற்றியபடி...
உன்னை, உன் மீதான
என் நினைவுகளை
எப்போதுமே எனக்கு
ஞாபகப்படுத்திக்
கொண்டிருக்கிறாய்.
- ராகவி சாவகச்சேரி

சிறுவர்களைத் தாக்கும் காய்ச்சல் வலிப்பு!

காய்ச்சல் வலிப்பு நோய் சிறுவர்களையே அதிகம் பாதிப்பதுண்டு. காய்ச்சல் வலிப்பு (Febrile Wunvulson) என்பது காய்ச்சல் உள்ள சமயங்களில் சிறுவர்களுக்கு ஏற்படும் ஒரு வலிப்பு ஆகும். பொதுவாக ஆபத்து இல்லாத இவ்வலிப்பு சிகிச்சை இன்றியே குணமாகக் கூடியது. வளர்ச்சிப் படிகள் சாதாரணமாக உள்ள குழந்தைகளின் மூளையில் எதுவித நிரந்தரப் பாதிப்பினையும் ஏற்படுத்தாது.

இக்காய்ச்சல் வலிப்பானது 6மாதம் தொடக்கம் 6வயது வரையுள்ள சிறுவர்களையே அநேகமாகப் பாதிக்கக் கூடியது. அதிலும் 18 மாதம் தொடக்கம் 3 வயது வரையுள்ள குழந்தைகளே அதிகமாகப் பாதிக்கப்படும் வகுப்பில் இருக்கிறார்கள்.

காய்ச்சல் வலிப்பானது பொதுவாக ஒருவருக்கு ஒரு தடவை மட்டுமே ஏற்படும். சிலருக்கு 2 ஆவது தடவை ஏற்பட சந்தர்ப்பம் உண்டு. குடும்பத்தில் பெற்றோர்கள் அல்லது சகோதரர்கள் இக்காய்ச்சல் வலிப்பினால் பாதிக்கப்பட்டிருந்தால் காய்ச்சல் வலிப்பு மீண்டும் வரும் சந்தர்ப்பம் அதிகமாக உள்ளது. 3 வயது தாண்டிய பின்னர் காய்ச்சல் வலிப்பு மீண்டும் வருவது மிகக் குறைவு. ஆனாலும், இக்காய்ச்சல் வலிப்பு மீண்டும் ஏற்படலாம்.

இக்காய்ச்சல் வலிப்பானது வராது தடுக்கக் கூடிய ஒன்றாகும். அதாவது எப்பொழுது காய்ச்சல் வந்தாலும் அதற்கு உடனடி சிகிச்சை செய்து காய்ச்சலின் வெப்பநிலையைக் குறைத்தால் காய்ச்சல் வலிப்பு வராது. பொதுவாகக் காய்ச்சல் தொடங்கி முதல் 24 மணித்தியாலங்களுக்குள்ளேயே காய்ச்சல் வலிப்பு ஏற்படுகின்றது.

காய்ச்சல் வலிப்பிற்கு சிகிச்சை அவசியம் இல்லை. ஆனால், காய்ச்சலை ஏற்படுத்திய நோய்க் காரணிக்கு சிகிச்சை அவசியம். அதே சமயம், குழந்தைக்கு ஏற்பட்டது சாதாரண காய்ச்சல் வலிப்புத் தானா என்பதை உறுதி செய்து கொள்ளுதலும் அவசியம் ஆகும்.

காதுத் தொற்று, இருமல், தடிமன், சளி மற்றும் சாதாரண வைரஸ் தொற்று என்பன சிறுவர்களுக்கு வழமையாக ஏற்படும் நோய்களாகும். மேலும் சுவாசப்பைத் தொற்று, (நியுமோனியா -Pneumonia) சிறுநீரகத் தொற்று மற்றும் மூளைக் காய்ச்சல் என்பன அரிதாக ஏற்படும் நோய்கள் ஆகும். மேற்குறிப்பிட்ட நோய்கள் யாவும் காய்ச்சலை ஏற்படுத்தக் கூடியவை. அதாவது உடல் வெப்பநிலையை உயர்வடையச் செய்யும். எனவே, இந்நோய்களுடன் காய்ச்சல் வலிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்கள் மிகமிக அதிகம். அதே சமயம் தடுப்பு மருந்துகள் ஏற்றியபின் குழந்தைகளுக்கு காய்ச்சல் வருவதென்பது பொதுவான ஒரு விடயம். எனவே, இங்கேயும் காய்ச்சல் வலிப்பு வரும் சந்தர்பங்கள் உண்டு.

வலிப்பு எவ்வாறு ஏற்படுகிறது?

மூளைக் கலங்களில் ஏற்படும் அசாதாரண நிகழ்வால் உடல் அவயவங்களில் ஏற்படும் அசாதாரண அசைவு வலிப்பு என அழைக்கப்படும்.

இவ்வாறு வலிப்பு ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு. இவைகளில் சிறுவர்களுக்கு ஏற்படும் வலிப்பிற்கு அதிகரித்த உடல் வெப்பநிலை அதாவது காய்ச்சலே பொதுவான காரணமாகும். இவ்வாறு காய்ச்சல் காரணமாக ஏற்படும் வலிப்பு காய்ச்சல் வலிப்பு என அழைக்கப்படும்.

காய்ச்சல் வலிப்பின் அறிகுறிகள் எவை?

தங்கள் குழந்தைக்கு ஏற்பட்டது காய்ச்சல் வலிப்புத்தானா எனப் பெற்றோர்கள் அறிய அவர்கள் காய்ச்சல் வலிப்பின் அறிகுறிகளை அறிந்திருத்தல் மிக அவசியமான - தொன்றாகும்.

பொதுவாக காய்ச்சல் வலிப்பு வரும் தருணத்தில் குழந்தையின் உடல் வெப்பநிலை உயர்வாக இருக்கும். அதே சமயம் பின்வரும் அறிகுறிகள் இருக்கும்.

- சில நிமிடங்கள் சுயநினைவை இழந்து போதல்
- கண் விழிகள் மேலே செருகல்
- காணப்படல்
- கைகால்கள் சடுதியாக மடங்கி விரிதல் அல்லது கைகால்கள் மரக்கட்டை போல் விறைத்தல்.
- வாயிலிருந்து நுரை வெளியேறல்

இவ்வறிகுறிகள் பொதுவாக சில செக்கன்கள் மட்டுமே நிலைத்திருக்கும் அல்லது 15 நிமிடங்கள் வரை நீடிக்கலாம். வலிப்பின் பின்னர் குழந்தை தொடர் உறக்க நிலையில் இருக்கலாம். குழந்தையின் உடல் வெப்பநிலை குறைந்தவுடன் குழந்தை சாதாரணமாக இருக்கும்.

அதே சமயம்

- காய்ச்சல் இல்லாது வலி வருதல்
- காய்ச்சலுடன் கூடிய வலி 15 நிமிடங்களின் பின்னும் நீடித்தல்
- ஒரு பக்கக் கைகால்களில் மட்டும் அறிகுறிகள் ஏற்படல்
- அசாதாரண வளர்ச்சிப் படியுடன் கூடிய பிள்ளைக்கு காய்ச்சல் வலிப்பு வருதல்
- காய்ச்சல் வலிப்பு இருக்கும்

சுகநலம்

சமயத்தில் சலம், மலம் கட்டுப்பாடின்றி வெளியேறல்.

என்பன அவதானிக்கப்படின் குழந்தையை வைத்தியசாலையில் அனுமதித்து விசேட மருத்துவப் பரிசோதனைக்கும் சிகிச்சைக்கும் உட்படுத்துதல் வேண்டும்.

காய்ச்சல் வலிப்பு வரும்போது வீட்டில் செய்ய வேண்டிய முதலுதவிகள் எவை?

ஒரு குழந்தைக்கு காய்ச்சல் வலிப்பு வந்தால் வைத்தியசாலைக்கு செல்ல முன்பு சில முதலுதவிகள் அவசியமாகும். குழப்பமடைந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு வைத்தியசாலைக்கு ஓடுவதால் பாதகமான விளைவுகளே மிஞ்சும். ஏனெனில், குழந்தையை அவசரத்தில் நிமிர்த்திக் தூக்கும்போது குழந்தையின் சுவாசப்பையினுள் பதார்த்தங்கள் சென்று மூச்சுத் தடையேற்படுவதாலும் ஏற்படலாம் அல்லது நியூமோனியா போன்ற தீவிர தொற்று நோய்கள் ஏற்படலாம்.

எனவே, காய்ச்சல் வலிப்பு வந்தால் பின்வரும் முதலுதவிகளை செய்வது அவசியமாகும்.

- குழந்தையின் ஆடைகளைத் தளர்த்தவும்
- நன்கு விஸ்தாரமான இடத்தில் இடது பக்கப்புறமாகத் திருப்பி படுக்க வைக்கவும்.
- அருகில் உள்ள பொருள்களை அகற்றவும்.
- குழந்தையின் வாயினுள் எதனையும் வைக்கவேண்டாம்.
- உணவுத் துணிக்கைகள், சளி என்பன வாயினுள் இருந்தால் விரலினால் கவனமாக அகற்றவும்
- குழந்தையின் உடலை ஈரத்துணியால் துடைக்கவும்
- வலி நிற்கும் வரை வாயினால் எதைனையும் குடிக்கக் கொடுக்க வேண்டாம்
- வலி நின்றபின் முடியுமானவரை விரைவில் வைத்தியசாலைக்குக் குழந்தையைக் கொண்டு செல்ல வேண்டும். ஏனெனில், காய்ச்சல் காரணிக்கு சிகிச்சை அளிக்க வேண்டும்.

காய்ச்சல் வலிப்பை எவ்வாறு தடுக்கலாம்?

காய்ச்சல் வலிப்பு வந்தபின் பதறுவதை விட வராமல் தடுப்பது மிக இலகுவானது. பொதுவாகத் தமது குழந்தையை தினம் தினம் பராமரிக்கும் பெற்றோர் குழந்தையின் உடல் நிலையில் சிறிது மாற்றம் ஏற்பட்டாலும் இலகுவாகக் கண்டு கொள்வர். இவ்வாறு அவர்கள் காய்ச்சலை அடையாளம் கண்டு கொண்டால் உடனடியாகப் பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றி குழந்தையின் உடல் வெப்பநிலையைக் குறைத்துக் காய்ச்சல் வலிப்பு வருவதைத் தடுத்துக்கொள்ளலாம்.

- குழந்தையின் ஆடைகளைக் களைந்து உடலிலிருந்து வெப்பம் வெளியேற இடமளிக்கவேண்டும்.
- உடலினை ஈரத்துணியால் துடைக்கவேண்டும். விசேடமாக முதுகு, கமக்கட்டு,கழுத்து மற்றும் இடை ஆகிய பகுதிகள். அதே சமயம் சுடுநீரையோ, மிகுகுளிர் நீரையோ தவிர்த்து சாதாரண நீரையே உபயோகிக்க வேண்டும்.

தொடர்ந்தும் காய்ச்சல் இருப்பின் பரசிற்றமோல் (Paraceramol) மாத்திரை அல்லது பாணி மருந்து கொடுக்க வேண்டும். ஆனால், மருந்து கொடுக்கும் போது தகுதி உள்ள வைத்தியரின் ஆலோசனையின் படியே கொடுக்கவேண்டும்.

அதன் பின்னரும் காய்ச்சல் தொடர்ச்சியாக இருப்பின் தாமதமின்றி வைத்திய உதவியை நாடுங்கள்.

ஜெயரூபா
4ஆம் வருடம்,
யாழ்/ மருத்துவபீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க் கொலைகளைக் குறைக்க வாசிப்புப் பழக்கத்தை அதிகரிப்போம்!

வே.சேனை சிவநேசராசன்

உடல் வலிக்க, வலிக்க மிகுந்த களைப்புடன் அரிசி மூடையைச் சுமந்து செல்கின்றான். அன்றாடம் காய்ச்சியான ஏழைத் தொழிலாளி.

முதுகு வலிக்க வலிக்க புத்தக மூடையைச் சுமந்து செல்கின்றனர் இன்றைய மாணவர்கள். தான் சுமந்து செல்கின்ற அரிசி மூடைக்குள் இருப்பது குத்தரிசியா, சம்பாவா, அம்மாப்பச்சையா என்ற ஆராய்ச்சி ஏழைத்தொழிலாளியைப் பொறுத்த வரையில் அவசியமற்ற விடயம்.

தாங்கள் சுமக்கின்ற புத்தக மூடைக்குள் என்ன எழுதியிருக்கின்றது என்ற ஆராய்ச்சி மாணவர்களைப் பொறுத்தவரையில் மிகவும் அவசியமான விடயம்.

சுமந்து செல்கின்ற அரிசி மூடையை இறக்கியவுடன் தொழிலாளிக்கும் அரிசி மூடைக்கும் இடையில் உள்ள உறவு அற்றுப்போய் விடுகின்றது. இதேபோல் தாம் சுமந்து செல்கின்ற புத்தக மூடையை இறக்கியவுடன் புத்தகங்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் உள்ள உறவு துண்டிக்கப்படுமா?

'வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகின்றான்'

'நூல்களே சிறந்த ஆசான்கள்' தமக்கு முந்திய வகுப்பில் படித்த மாணவர்களிடம் அலைந்து திரிந்து பழைய புத்தகங்களை அரை விலைக்கும் கால் விலைக்கும் மாணவர்கள் வாங்கிய காலம் ஒன்றிருந்தது. இன்று இலவசக் கல்வியின் ஒரு கட்டமாக புத்தகங்களும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

எதுவும் இலவசமாக வழங்கப்படும் போது அதற்குரிய மதிப்புக் குறைவாகக் கணிக்கப்படுவது சாதாரண மனித வாழ்க்கையில் தவிர்க்க முடியாத இயல்பு. இதற்கு இலவசப் புத்தகங்களும் விதிவிலக்கு அல்ல.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் கூட படிக்கும் காலத்தில் இரவலாகத்தான் புத்தகங்களை வாங்கிப் படித்தார் என்றும் யன்னலோரத்தில் வைக்கப்பட்ட புத்தகம் மழையில் நனைந்ததற்காக மனம் வருந்தி அதிகாலையில் புத்தக உரிமையாளரான பிரபுவிடம் ஓடிச்சென்று மன்னிப்புக் கேட்டார் என்றும் வரலாறுகள் கூறுகின்றன.

புதிய கல்வியாண்டின் தொடக்கத்தில் வழங்கப்படுகின்ற புதிய புத்தகங்களையும் அவற்றில் உள்ள படங்களையும் மிகுந்த ஆவலுடன் பார்க்கின்ற மாணவர்களில் பெரும்பான்மையோர் ஒரு வருடம் முழுவதும் புத்தகத்தை திருப்பிப் பார்க்காது கவனமாக வைத்திருந்துவிட்டு மீண்டும் ஒரு தடவை புத்தகங்களை கவனமாகத் திருப்பிப் பார்க்கின்றனர்? எதற்காக? கல்வியாண்டின் இறுதியில் புத்தகங்களை மீள ஒப்படைக்கும் போது தங்களுடைய சில உடைமைகள் புத்தகங்களினுள் ஒளித்திருக்கின்றதா என்பதை அறிவதற்காக.

மாணவர்களிடம் மட்டும் அல்ல எல்லோரிடமும் வாசிப்புப் பழக்கம் இன்று அருகி வருகின்றது என்பது யாரும் மறுக்க முடியாத விடயம்.

'சமையல் பாத்திரங்கள் வாடகைக்கு விடப்படும்', 'சிரமம் தவிர்க்க சில்லரை தருக', 'மாட்டு இறைச்சி கடை' இவை யாழ். மண்ணில் நாம் அன்றாடம் சந்திக்கும் தமிழ்க் கொலைகளுக்கு சில சிறு உதாரணங்கள்.

விஞ்ஞானம் படித்தேன். கணிதம் படித்தேன். அதனால் எனக்குத் தமிழ் மொழி தெரியாது என்று காரணங்களும் கூறப்படுகின்றன.

'எண் நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொண்ட மகர்க்கு'

மேலே கூறப்பட்ட திருக்குறள் கொலை, யாழ். மாவட்டத்தில் உள்ள பிரபல்யமான பாடசாலை ஒன்றின் விஞ்ஞான மன்றத்தினால் 2004 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விஞ்ஞானச் சஞ்சிகை ஒன்றின் இறுதிப்பக்கத்தில் உள்ள நன்றி உரையின் தொடக்கத்தில் 'அழகு தமிழில்' பிரசுரிக்கப்பட்டுள்ளது. நாங்கள் விஞ்ஞானப் பட்டதாரிகள் எங்களுக்கு தமிழ் தெரியாது என்று காரணமும் திருக்குறள் கொலைக்கு நியாயமும் கூறப்படுகின்றது.

நல்ல தமிழ் பேசுகின்ற யாழ். மண்ணில் இப்படி எத்தனையோ தமிழ்க் கொலைகள் நாளாந்தம் நடக்கின்றன. காரணம் வாசிப்புப் பழக்கம் இன்று அருகி வருகின்றமையாகும். மாணவர்களிடம் மட்டும் அல்ல எல்லோரிடமும் தான் அப்பழக்கம் அருகி வருகிறது.

இன்றைய இயந்திரமயமான உலகில் நூலகங்களில் நிரம்பி வழிகின்ற புத்தகங்களை ஆற, அமர அமர்ந்திருந்து ஆழமாக வாசிப்பதற்கு எவருக்கும் போதிய நேரம் கிடைப்பதில்லை.

நுனிப் புல்லே கூடுதலாக மேயப்படுகின்றது. 'ஒரு புறம் வேடன் மறுபுறம் நாகம் இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான்' என்பது போல ஒரு புறம் 'சித்தி' மறுபுறம் 'மருமகள்' இரண்டுக்கும் நடுவே அருமையான புத்தகங்கள் என்ற நிலையே கூடுதலாகக் காணப்படுகின்றது.

விஞ்ஞானம் படித்தேன் அதனால் எனக்குத் தேவாரம் பாடத்தெரியாது என்று கூறுவது நவீன நாகரிகமாகிவிட்டது.

இதே போல கணிதம் படித்தேன் அதனால் திருக்குறள் கொலை புரிவேன் என்பது ஈழத்தமிழ் மொழி வளர்ச்சிக்கு உகந்தது அல்ல.

விரைவாக மாறிவரும் விஞ்ஞான உலகில் மாணவர்களின் கிரகித்தல், தேடல் திறன், நுண்ணறிவு போன்றவற்றை வளர்ப்பதற்கு அருகி வரும் வாசிப்பு பழக்கம் மேம்பாடு அடைய வேண்டியது காலத்தின் அவசியதேவையாகும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிக்காது கற்பதற்கு வழிகாட்ட வேண்டும். வகுப்பறைகளில் 'சொல்வதெழுதல்' நிகழ்ச்சிகள் குறைக்கப்பட வேண்டும். மாணவர்கள் தாமாகவே தேடி அறிவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

ஆழ்கடலில் மூழ்கி முத்து எடுக்கும்போது ஏற்படும் சந்தோசத்தை இன்றைய மாணவர்களும் அமைவதற்கு எல்லோரும் வழிகாட்டுதல் வேண்டும்.

உயிரழிவையும் சொத்தழிவையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்கிராமங்களில் சிங்கள மக்கள் சிறிலங்கா படைகளின் பாதுகாப்புடன் வாழ்ந்து வருகின்றனர். 1990 ஆம் ஆண்டு புலிகள் - இராணுவம் போர் தொடங்கிய நாள்களில் புலிகளால் முற்றுகையிடப் பட்ட முல்லைத்தீவு படைத்தளத்திலிருந்து படைகள் வெளியேறமுற்பட்டன. ஆனால், புலிகளின் எதிர்த் தாக்குதல்களினால் இராணுவம் முகாமுக்குள் முடங்கிக் கிடந்தது. தரை, கடல் தொடர்புகள் அற்றநிலையில் ஆகாய மார்க்கத் தொடர்புகளை மட்டும் நம்பி ஏமாந்த சிறிலங்காப் படையினர் சோர்வுற்ற நிலையில் புலிகளிடம் சரணடையும் நிலையில் முகாமில் 100 வரையான படையினர் இருந்தனர்.

முல்லைத்தீவு படைத்தளத்திலிருந்து படையினரை மீட்பது அல்லது முகாமில் உள்ள படையினரின் எண்ணிக்கையினைக் கூட்டுவது என்பது இராணுவத் தலைமைப்பீடத்தின் அந்நேர முடிவாக இருந்தது. இதில் முகாமின் படையினரின் எண்ணிக்கையினை கூட்டுவதே உகந்ததென சிறிலங்காப் படைத்தலைமை முடிவெடுத்தது.

முற்றுகையில் உள்ள படையினரை மீட்பது என்பது இலகுவான காரியமல்ல. காரணம் புலிகளின் முற்றுகை என்பது மிக நெருக்கமாக இருந்தது. முல்லைத்தீவு மருத்துவமனைக்கருகில் இருந்து ஆரம்பித்து முகாமைச் சுற்றி இறுக்கமான முறையில் புலிகளின் நிலைகள் அமைந்திருந்தன.

ஸ்ரீலங்கா படையினர் தரைத் தொடர்புகள் அற்ற முகாமில் உலங்கு வானூர்தி கூட இறங்க முடியாத நிலை. இந்நிலையில் முல்லைத்தீவு முகாமின் நந்திக் கடலுக்கு இடையில் உள்ள வெளியில் 15 இற்கும் மேற்பட்ட உலங்குவானூர்திகளில் ஸ்ரீலங்காப் படையினர் புலிகளின் பலத்த தாக்குதலுக்கு மத்தியில் தரையிறக்கப்பட்டனர்.

ஒருநாள் முழுவதும் சண்டை இடம் பெற்றது. உலங்குவானூர்தி மூலம் தரையிறக்கப்பட்ட படையினருடன் முல்லைத்தீவுப் படைத்தளம் 300 வரையான படையினர் கொண்ட படைத்தளமாகப் பலமடைந்த நிலையிலும் புலிகளின் முற்றுகை இறுக்கமடைந்தது.

நகரைச் சிதைத்து இராணுவமுகாம் அமைத்தனர்

இந்நிலையில் முல்லைத்தீவு படைத் தளத்தினைப் பாதுகாக்கவும் விரிவுபடுத்தவும் ஸ்ரீலங்காப் படைத் தலைமை படை நடவடிக்கை ஒன்றினை நடத்த முடிவு செய்தது.

இப்படை நடவடிக்கைக்கு மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ தலைமை வகித்தார். (இவர் பின்பு 1992ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம், அராலியில் கண்ணிவெடியால் உயிரிழந்தார்).

1990ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் முல்லைத்தீவில் உள்ள ஸ்ரீலங்கா படைத் தளத்தினைப் பாதுகாக்கும் நோக்குடன் கடற்காற்று என்னும் பெயருடன் கடல் மூலம் வட்டுவாகல் டோரா படகுகள் மூலம் தரையிறங்கிய படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் ஒரு நாள் முழுவதும் சண்டை இடம்பெற்றது.

கடற்காற்று படை நடவடிக்கை மூலம் முல்லைத்தீவு நகரினை ஆக்கிரமித்த ஸ்ரீலங்காப் படையினர் மிகப் பாரியளவில் படைத்தளம் ஒன்றினை முல்லைத்தீவு நகரினைச் சிதைத்து அமைத்தனர்.

1996ஆம் ஆண்டு ஓயாத அலைகள் 01 நடவடிக்கை மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் முல்லைத்தீவு படைத்தளம் அழிக்கப்பட்டு ஆயிரத்து 500 வரையான படையினர் உயிரிழந்ததுடன், இரு ஆட்லறிகளும் புலிகள் வசம் கிடைத்தன.

1995இல் யாழ்ப்பாணத்தில் இருந்த புலிகள் வன்னிக்கு நகர்ந்த பின்னர் புலிகள் 80 வீதம் அழிந்தனர் என உலகிற்குக் கூறிவந்த சந்திரிகா அரசுக்கு முல்லைத்தீவு படைத்தள வீழ்ச்சி பல அரசியல் நெருக்கடிகளை அக்காலத்தில் உருவாக்கிவிட்டது.

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவு குமுழமுனை கிராமம் மீது ஸ்ரீலங்காப் படையினர் வெலிஓயாப் பகுதியில் இருந்து மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களால் 4 அப்பாவித் தமிழ்மக்கள் உயிரிழந்துள்ளனர். 10இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

வற்றாப்பளை அம்மன் ஆலய பொங்கல் விழாவன்று...

1992ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் நாள் முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருவிழா இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

முல்லைத்தீவில் ஸ்ரீலங்காப் படையினர் நிலைகொண்டிருந்ததால் செஞ்சிலுவைச் சங்கமூடாகப் படைத் தரப்புக்கு விழா இடம்பெறுவது தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் நண்பகல் 12 மணியளவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு பொங்கல் விழாவை நிகழ்த்திக் கொண்டிருந்தனர். முல்லைதீவு படைத்தளத்திலிருந்து ஸ்ரீலங்காப் படையினர் பகல் 12 மணியளவில் அகோர எறிகணைத் தாக் குதலை வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் மீது மேற்கொண்டனர். அந்த எறிகணைத் தாக்குதல்களால் 22 அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழந்ததுடன் 60இற்கு மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

1993ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18ஆம் நாள் முல்லைத்தீவு மாத்தளன் பகுதியில் இரவு இடம்பெற்றுக்கொண்டிருந்த கலை நிகழ்ச்சி ஒன்றின் மீது ஸ்ரீலங்கா வான் படையினர் புக்காரா ரக வானூர்தி நடத்திய கொடூர குண்டுத் தாக்குதலில் 13 பேர் துடிதுடித்து உயிரிழந்தனர்; 40இற்கு மேற்பட்டவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

1996ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் நாள் முல்லைத்தீவு [illegible] ஸ்ரீலங்கா வான் படை நடத்திய குண்டுத் தாக்குதலில் 9 அப்பாவித் தமிழ்மக்கள் உயிரிழந்துள்ளதுடன் 20இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். 1997ஆம் ஆண்டு ஜனவரி ஒன்பதாம் நாள் முல்லைத்தீவு விசுவமடு கிராமம் மீது ஆனையிறவில் இருந்து ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 4 அப்பாவித் தமிழ்மக்கள் உயிரிழந்தனர். பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

1997ஆம் ஆண்டு ஜனவரி ஒன்பதாம் நாள் முல்லைத்தீவு கரையோரப் பகுதியின் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய தாக்குதலில் 6 கடற்றொழிலாளர்கள் உயிரிழந்ததுடன் 17 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

வன்னி மீது ஸ்ரீலங்கா படையினர் ஜயசிக்குப் படை நடவடிக்கையை ஆரம்பித்த நாள்களில் முல்லைத்தீவு, மாங்குளம் மீது ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய தாக்குதலில் 1997ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8ஆம் நாள் 7 அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழந்தனர். 15இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

புதுக்குடியிருப்பில்...

1999ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் நாள் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மந்துவில் பகுதியில் அமைந்துள்ள சிறிய சந்தையில் மக்கள் பெருமளவில் கூடியிருந்தவேளை சிறிலங்கா வான் படையின் கிபிர் குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய அகோர குண்டுத் தாக்குதல்களால் 22 அப்பாவித் தமிழ் மக்கள் துடிதுடித்து உயிரிழந்தனர். 40 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

சத்ஜெய, ஜயசிக்குறு, ரணகோச, ரிவிபல எனப் பல பெயர்களில் வன்னி மீது போர் நடவடிக்கைகளை சிறிலங்காப் படையினர் மேற்கொண்டு பெருமளவிலான நிலப் பரப்புகளை வன்னியில் ஆக்கிரமித்து, பொருளாதாரத் தடை, மருந்துத் தடை, பாதைத்தடை எனப் பலவற்றை வன்னி மக்கள் மீது சிறிலங்கா அரசு விதித்திருந்த நிலையில் திட்டமிட்டு மக்களை இலக்குவைத்து நடத்திய தாக்குதலாக இவ்வான் தாக்குதல் அமைந்தது. புதுக்குடியிருப்பு மக்கள் அதிர்ச்சியும் கவலையும் கொள்ளத்தக்கவகையில் இத்தாக்குதல் நிகழ்ந்தது.

1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் நாள் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஆரம்பிக்கப்பட்ட ஓயாத அலைகள் - 03 நடவடிக்கையினால் வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து பெருமளவு நிலப்பரப்பினைப் புலிகள் மீட்டெடுத்ததுடன், சிறிலங்காப் படைகளின் புகழ்வாய்ந்த பலம் பொருந்திய 240 ஆண்டுகால அந்நியர் ஆக்கிரமிப்பு சின்னமாகிய ஆனையிறவுப் படைத்தளம் புலிப்படையிடம் வீழ்ச்சி கண்டது.

ஆனையிறவு வீழ்ச்சியுடன் இலங்கைத் தீவில் சமபலம் பொருந்திய இரு படைகள் உள்ளன என்ற செய்தி சர்வதேச சமூகத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது.

ஆனையிறவு வீழ்ச்சியுடன் எழுந்த அரசியல் சூழல், போர் நிறுத்தம், போர் நிறுத்த உடன்பாடு, பாதை திறப்பு, வெளிநாடுகளில் ஆறுகட்டப் பேச்சுகள் என்பன நிகழ்ந்தன.

கடந்த 25 ஆண்டு காலப் போர், தமிழர் தாயக மக்களின் வாழ்வியலில் உயிரிழப்புகளையும் பொருள் அழிவுகளையும் கொடுத்துள்ளது. அதில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மக்களும் சிறிலங்காப் படைகளின் பல படுகொலைகளை எதிர்கொண்டு உயிர் விலைகளைக் கொடுத்துள்ளனர்.

ஆழிப்பேரலையின் பாதிப்பு

அதற்கு மேலதிகமாக முல்லைத்தீவில் 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் நாள் ஆழிப்பேரலை நிகழ்த்திய கோரத் தாண்டவம் 3 ஆயிரத்து 343 உயிர்களைக் காவுகொண்டுவிட்டது. 903 பேர் படுகாயம் அடைந்தனர். ஆழிப்பேரலையால் முல்லைத்தீவில் 7 ஆயிரத்து 499 சிறார்கள் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர்.

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட கடற்காற்று படை நடவடிக்கையின்போது எப்படி முல்லைத்தீவு நகரம் அழிந்ததோ அதேபோன்று ஆழிப்பேரலையால் முல்லைத்தீவு நகரம் இன்று அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

முல்லைத்தீவு கரையோர பிரதேசத்தில் உள்ள முல்லைத்தீவு மகாவித்தியாலயம் உட்பட 12 பாடசாலைகள் ஆழிப்பேரலையால் அழிவடைந்துள்ளன. 3 ஆயிரம் வரையான கடற்றொழிலாளர்களின் படகுகள் அழிந்து, சேதமடைந்தன. ஆழிப்பேரலைக்கு முன்பு 3ஆயிரத்து 300 வரையான பெண்கள், கணவன்மாரைப் போரினால் இழந்த நிலையில் இருந்தனர். தற்போது அத்தொகை 4ஆயிரத்தைத் தாண்டிவிட்டது.

1993-2000 ஆம் ஆண்டுவரை கடலில் மீன்பிடியில் ஈடுபட்ட 90 வரையான கடற்றொழிலாளர்களை சிறிலங்கா கடற்படையினர் கடலில் வைத்து படுகொலை செய்தனர். சிறிலங்கா கடற்படையினர் கடலில் செய்த கொடூரத்தை ஆழிப்பேரலை முல்லைத்தீவு கடற்கரையில் நிகழ்த்தியுள்ளது.

எனவே, தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் நோர்வே தூதர்களுடனான சந்திப்பின்போது குறிப்பிட்டதுபோன்று தமிழ் மக்களைப் பொறுத்தவரை சுனாமிபேரலை என்பது இரண்டாவது சுனாமியே. முதலாவது சுனாமி சிறிலங்காப் படைகள் தமிழ் மக்கள் மீது புரிந்த படுகொலைகள், சொத்தழிவுகள் என்பவையாகும்.

போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு நான்கு ஆண்டுகள் நெருங்கும் நிலையில் மக்களுக்கு நிரந்தர விடிவு கிடைக்கவில்லை. பலம் பொருந்திய சக்தியாக தமிழ் மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவதே ஆழிப்பேரலையின் பின்னான அரசியல் இலக்காக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹார்கோட்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தும் ஆண்களுக்கு அழகூட்டும் 'இமாமி' கிறீம்



உடல் நலன் பேணும் பொருள்களை உற்பத்தி செய்து விநியோகம் செய்துவரும் இந்தியாவைத் தளமாகக் கொண்ட இமாமி நிறுவனம் ஆண்களுக்கான முகக் கிறீமை இலங்கைச் சந்தைக்கு அறிமுகம் செய்துள்ளது.

இலங்கையில் மருத்துவப் பொருட்களை விநியோகம் செய்துவரும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான ஹாகோர்ட்ஸ் நிறுவனம் இந்தக் கிறீமை இலங்கையில் விநியோகம் செய்கிறது.

இந்தக் கிறீம் 15 முதல் 35 வயதிற்கிடைப்பட்ட நகர்ப்புற ஆண்களைக் குறிவைத்துள்ளது. அடுத்துவரும் 12 மாதங்களில் 10 லட்சம் கிறீம் டியூப்களை விற்பனை செய்ய இந்த நிறுவனம் தீர்மானித்தள்ளது.

இமாமி உற்பத்திகள் 2001 ஆம் ஆண்டு முதல் ஹாகோர்ட்ஸ் நிறுவனத்தின் ஊடாக விற்பனை செய்யப்பட்டுக் கொண்டு வருகின்றன.

இமாமி உற்பத்திகள் இலங்கை மாத்திரமின்றி ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் வட அமெரிக்கா உள்ளிட்ட 53 நாடுகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இமாமி நிறுவனம் 1974 ஆம் ஆண்டு இந்தியாவில் தொடங்கப்பட்டு இன்று வரை வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

(07)

செலிங்கோ லைவ் நடத்தும் இரண்டாவது ரன்தரு சவாரி

அகில இலங்கை ரீதியில் எல்லா மாவட்டங்களிலிருந்தும் 50 குடும்பங்களை ஒன்று திரட்டி, மார்ச் மாதத்தில் செலிங்கோ லைவ் காப்புறுதி மூலமான சிறுவர் பாதுகாப்பை வலுப்படுத்தவுள்ளது.

ஹெலிக்கொப்டர் சவாரி, படகு சவாரி, கூடாரம் அமைத்தல் போன்ற பல துணிகரமான விளையாட்டுகள் பெலிஹுலோயாவிலுள்ள அக்கடமி ஒப் அட்வென்சரில் இடம்பெறவுள்ளதுடன், மூன்று நாள் வினோத நிகழ்வுகள் ஆயுள்காப்புறுதித்துறை முன்னோடிகளினால் இரண்டாவது 'ரன்தரு சவாரியின்' கீழ் நடத்தப்படவுள்ளது.

சென்ற வருடம் நிறுவனத்தின் பிரபல்யமான சிறுவர் காப்புறுதித் திட்டமான 'செலிங்கோ ரன் தரு' மூலம் 250 சிறுவர்கள் பின்னவளைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இம்முறை நிகழவிருக்கும் 'ரன்தரு குடும்ப சவாரி' ஆனது அதனையும்விட மிகவும் சிறப்பானதாக அமைய விருப்பதோடு இதற்கு 500,000 சிறுவர்கள் விண்ணப்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் அதிஷ்டசாலி சிறுவர்கள் இருவர் அவர்களது பெற்றோருடன் எல்லா செலவுகளையும் உள்ளடக்கியதாக சிங்கப்பூரிலுள்ள செந்தோசாவிற்கான பயணத்தை வென்றனர்.

ரன்தரு சவாரியின் முதல் கட்டமானது புதிய பாடசாலை ஆண்டு ஆரம்பிக்கும் போது ஆரம்பமாவதுடன் 500,000 கவர்ச்சிகரமான நேர அட்டவணைகளும் வழங்கப்படவுள்ளன. இவற்றைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பாரிய திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும்

ஒவ்வொரு அட்டவணையும் பிரித்தெடுக்கக்கூடிய கூப்பனைக் கொண்டிருக்கும். இதனைப் பெற்றுக்கொண்டவர்கள் இலங்கை முழுவதிலுமுள்ள எல்லா செலிங்கோ லைவ் கிளைகளிலும் நடத்தப்படும் தொடர்ச்சியான சீட்டிலுப்பில் பங்குபற்ற முடியும்.

சிறுவர் நட்சத்திரங்களான பிரமுதி கருணாரட்ணவும் (புஞ்சி பஞ்சி) கே.நித்தியவாணியும் (குட்டிச் சுட்டி) ரன் தரு குடும்ப சவாரியை ஆரம்பிப்பதைக் காணலாம். (07)

நாடு முழுவதிலுமுள்ள கிளைகளில் ஜனவரி 31இல் சீட்டிலுப்பு நடைபெறும். இதில் தெரிவு செய்யப்பட்டவர்கள் பெப்ரவரி 7இல் இடம் பெறும் மாபெரும் சீட்டிலுப்பிற்கு அனுப்பப்படுவார்கள். இதில் 50 அதிஷ்டசாலிக் குடும்பங்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என நிறுவனம் அறிவித்தது.

ரன்தரு குடும்ப சவாரி ஆனது மார்ச் மாதம் 3 இருந்து 5 வரை நடைபெறும். 50 குடும்பங்கள் பிரத்தியேகமான கூடாரங்களில் தங்குவார்கள். அத்துடன் வெளி இட விளையாட்டுக்களான நீண்ட நடைபயணம் (Hikes) துணிகர விளையாட்டுகள், Campfires, பாபிக்கியூ, மற்றும் வேடிக்கை விநோத நிகழ்ச்சிகள் ஆகியவை இடம்பெறும்.

பெலிஹுலோயவில் இடம்பெறும் சீட்டுக் குலுக்கலில் 5 குடும்பங்கள் ஹெலிக்கொப்டர் சவாரியினாலும், எஞ்சிய குடும்பங்கள் படகு சவாரியினாலும் மகிழ்விக்கப்படுவர்.

செலிங்கோ லைவ்வின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரங்கநாதன் கூறுகையில், 'ரன் தரு சவாரியானது இந்த நாட்டில் சிறுவர்களுக்கு மிகவும் ஊக்கமளிக்கும் ஒரு நிகழ்வாகும்.' 'இந்த நிகழ்வில் எல்லா பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் ஒன்று திகழ்வதுடன் காப்புறுதிபற்றியவிழிப்புணர்வை வழங்கவும், பல்வேறுபட்ட பகுதிகளிலிருந்து மாணவர்கள் வருகை தருவதால் வெவ்வேறுபட்ட சூழலைப் பற்றிப் புரிந்துணர்வை அவர்களுக்கிடையே ஏற்படுத்தவும் முடியும்.'' - என்றார்.

ரன் தரு குடும்ப சவாரிக்கு ஊடாக அனுசரணையை 'சிரச ரி.வி'யும், தொலைக்காட்சி நிலையங்களில் பிரபல்யமான சிறுவர் அறிவிப்பாளர் 'புஞ்சி பஞ்சி' யும் அவரின் சகாவான சக்தியின் 'குட்டிச்சுட்டி'யும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அறிவிப்பாளர்களாகத் திகழ்வார்கள்.

(07)

பான்வெல்கட்ட
கோமாரிக்கா

ஆரோக்கியமான,வசீகரமான, மென்மையான சருமத்தை பெற பான்வெல்கட்ட சவர்க்காரத்தை பாவியுங்கள்.இது சுருக்கங்கள்,வறண்டதோல் ஏற்படுவதை தடுக்கும்.

பான்வெல்கட்ட
கோமாரிக்கா

விஷக்கிருமிகளை அழிக்கவல்ல
ஆயுர்வேத வாசனை சவர்க்காரம்

ஹெட்டிகொட இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிட்.
33/3, ஸ்ரீ தர்மராம வீதி, இரத்மலானை, இலங்கை.
தொலைபேசி: 2736910 தொலைநகல்: -2735465

இது ஒரு சித்தாலேபத தயாரிப்பு
வனிக்கா மெடிக்கல்,
இல. 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6291, 0121 222 2445

ஒவ்வொரு புதன்கிழமையும் 'விஜய்' உங்கள் கரங்களில் தவழும்!

வாரம் தோறும் வெளிவருகிறது

Vijey விஜய்
விஜய்

மாணவர்கள் - இளையவர்கள் - ஆசிரியர்கள் என அனைவருக்கும் ஏற்ற அம்சங்களை உள்ளடக்கிய ஒரே பத்திரிகை

இது ஒரு THE SUNDAY TIMES பத்திரிகையின் வெளியீடு

T.P. - 0112 435 454, 0714 943 854

wijeya newspapers

மாணவர்களுக்கான பன்முக அறிவுசார் பத்திரிகை

graphics amurjan

noolaham.org | aavanaham.org

TVS

நாடு முழுவதும் விரும்பிய
இடத்திற்குப் போய்வர லீட்டருக்கு
102* kmpl



TVS பெருமையுடன் அறிமுகப்படுத்தும்

star city

THE SUPERSTAR

அறிமுக விலை
ரூ.77,000/- + VAT

விரும்பிய நேரத்தில் நண்பர்களைச் சென்று சந்திக்க. தினந்தோறும் வீட்டுக்கும் வேலைத்தலத்திற்கும் இடையே மைல் கணக்கில் பயணம் செய்ய. இரவில் எந்த நேரமானாலும் பார்டிகளுக்குச் சென்றுவர... உங்கள் பயணத் தேவை எதுவாக இருந்தாலும். TVS ஸ்டார் சிட்டி மோட்டார் சைக்கிள் அருந்துணையாகும். எரிபொருள் பாவனையில் சிக்கனமானது. எத்தகைய கரடுமுரடான பாதைக்கும் உகந்தது. கவர்ச்சியான தோற்றம் கொண்டது. 100cc மோட்டார் சைக்கிள்கள் மத்தியில் TVS ஸ்டார் சிட்டி ஒளிவீசும் நட்சத்திரமாகும்.

RCF தொழில்நுட்பம். லீட்டருக்கு 102* kmpl ஓடும். 16 லீட்டர் கொள்ளத்தக்க பெற்றோல் தாங்கி. நீடித்துழைக்கும் எஞ்ஜின். ஜப்பானின் Keihein காபரேட்டர்

* பரீட்சார்த்த நிலைமைகளில்

2 வருட உத்தரவாதம்.
5 சேவைகள் இலவசம்.
ஹெல்மட்டும் ஹெல்மட்டும்
இலவசமாக வழங்கப்படும்.

கவர்ச்சியான சைலன்சர் | நீலநிற ஸ்பீடோமீற்றர் | விசேட றைட்-சுவிச் ஷொக்ஸ் | அகலமான டயர் | அதிசக்தி வாய்ந்த ஹெட் லைட்

TVS MOTOR CO GENUINE PARTS

நாடெங்கிலும் 200 க்கு மேற்பட்ட
உதிரிப்பாக விற்பனை நிலையங்கள்

நாடு முழுவதும்
சேவை
நிலையங்கள்

TVS லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

757, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14.
தொலைபேசி: 011 4 614746 (10 தேடுதல் லைன்கள்)
ஃபெக்ஸ்: 011 4 614906
நகரக் காட்சியறை: 100, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 2.
தொலைபேசி: 4797207, 4797250
[illegible] 011 4 734352

United Motors Lanka Ltd

CAMERON PALE & MEDIA-0700/TVS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org